தேவைப்படுகின்றபட்சத்தில் நிச்சயமாக அதை அமைப்பதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கல்லுகுண்டம் பேரூராட்சியிலே, புதூர் என்ற கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லை. ஆகவே, அந்தப் பகுதியிலே தண்ணீர் சரியாக விநியோகம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. அந்தப் பகுதியிலே ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லுகுண்டம் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லை என்றும் அதனால் தண்ணீர் சரியாக விநியோகம் செய்வதற்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது என்று கூறியிருக்கிறார். அப்படியானால், அங்கு தண்ணீர் வழங்கப்படுகிறதா, இல்லையா? அப்படி வழங்கப்படுகிறது என்றால் அந்தத் தண்ணீர் எப்படி வழங்கப்பட்டு வருகிறது என்பதைக் கூறியிருந்தால் அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அவசியமா, இல்லையா என்பதை நாங்கள் கூறமுடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த விவரங்களைக் கூறவில்லை. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில்லையென்று சொன்னால், எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்குவதென்பது இயலாத காரியம். அப்படி இருக்கின்றபட்சத்தில் அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுரை வடக்குத் தொகுதி, செல்லூர் வடக்குப் பகுதியிலே குடிநீர்த் தொட்டி உடைந்ததால் 9, 40, 43 மற்றும் 44 ஆகிய 4 வார்டுகளில் குடிநீர் விநியோகம் தடைப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு புதிய குடிநீர்த் தொட்டியமைத்து தண்ணீர் தேக்கிக் கொடுத்தால் அங்கே இருக்கின்ற மக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்பதைச் சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கின்ற தொட்டி பழுதடைந்திருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். நிச்சயமாக பழுதடைந்த அந்தத் தொட்டியை சீர் செய்வதற்கு வாய்ப்பு இருந்தால் சீர் செய்யப்படும். அவ்வாறு சீர் செய்ய முடியாத நிலை இருக்குமானால், புதியதாக ஒரு தொட்டியை அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ராதாபுரம் தொகுதியில், திசையன்விளை, பனகுடி, வள்ளியூர் பேரூராட்சிகளில் மக்கள்தொகை பெருகிக்கொண்டே இருக்கிறது. இப்போது இருக்கின்ற நீர்த்தேக்கத் தொட்டிமூலம் அவர்களுக்குப் போதுமான தண்ணீர் கொடுக்க



2013 ஏப்ரல் 26]

முடியவில்லை. எனவே, அதிக அளவு கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து அதற்கு நீர் ஆதாரமும் உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் குடிதண்ணீருக்காக பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது நகர்ப்புறங்கள் எல்லாம் கூடுதலான மக்கள்தொகை கொண்ட பகுதிகளாக உருவாகிக்கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில், எல்லா பகுதி மக்களுக்கும் குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். அதோடு மட்டுமல்லாமல், இயற்கை பொய்த்தாலும் கடல்நீரை நன்னீராக்கி குடிதண்ணீர் வழங்க வேண்டும் என்று முடிவெடுத்து ஏற்கெனவே இதே மாமன்றத்தில் பேரவை விதி 110–ன்கீழ் கடல்நீரைக் குடிநீராக்கும் 150 mld 200 mld, 400 mld, போன்ற திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதிக்குட்பட்ட பேரூராட்சிகளில் எங்கெல்லாம் குடிதண்ணீர் எடுக்க முடியும் என்பதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே கூடுதலாகக் குடிதண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 323, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 26

**323—**

**வாசனை திரவியத் தொழிற்சாலை**

**5785—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:*

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, மகாதேவகொல்லஹள்ளி பகுதியில் பயிரிடப்படும் பூக்களைப் பயன்படுத்தி அப்பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பர்கூர் தொகுதி, மகாதேவகொல்லஹள்ளியில் பூ சென்ட் தயாரிக்கும் தொழில் நிறுவனம் தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்திருந்தாலும்கூட ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தொழில் நிறுவனம் தொடங்க முன்வந்தால், அரசால் வழங்கப்படும் முதலீட்டு மானியம், வேலைவாய்ப்புப் பெருக்க மானியம், கூடுதல் முதலீட்டு மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம் போன்ற மானியங்களை அவர்கள் பெற்று தொழில் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் குலமகளாம், தென்னகத்தின் ஒளிவிளக்காம், தமிழகத்தின் தலைமகளாம், இத்தரணி போற்றும் எங்கள் தாயே! தமிழே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வழி நின்று வாழ்வதில்தான் எங்கள் பேச்சும், மூச்சும், வாழ்வும், வளமும் உள்ளது எனச் சொல்லி அம்மா தங்களது பொற்பாதம் பணிந்து, வணங்கி மகிழ்கிறேன் அம்மா.

மாண்புமிகு அம்மா அவர்களது பொற்கால ஆட்சியில்தான் தமிழகத்திலேயே அதிக பூக்கள் உற்பத்தி செய்யும் மாவட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்பது



2013 ஏப்ரல் 26]

அனைவருக்கும் தெரிந்த ஒன்று. கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மகாதேவகொல்லஹள்ளி, காட்டு அகரம் ஊராட்சி, பாலியகுடி ஊராட்சி, தளி ஊராட்சி போன்ற பல ஊராட்சிகளில் பூக்கள் உற்பத்தி செய்யும் தொழிலை அதிக அளவிலே செய்கிறார்கள். பருவ மழை இல்லாத காரணத்தினால் திருவண்ணாமலை மாவட்டம் தொடங்கி கிருஷ்ணகிரி மாவட்டம் வரையிலும், ஓசூர், தளி, வேப்பனஹள்ளி, கிருஷ்ணகிரி போன்ற அனைத்துப் பகுதிகளிலும் கரும்பு, நெல் போன்ற பெரிய அளவில் செய்யப்படும் விவசாயத்தை செய்ய இயலவில்லை. பருவ மழை தவறுகிற காரணத்தினாலும், குறைந்த அளவு தண்ணீர் உள்ளதாலும் குறுகிய நிலப்பரப்பிலே, அரை ஏக்கர், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்ற நிலப்பரப்பில், பூக்கள் விவசாயத்தை மட்டுமே முக்கியத் தொழிலாகச் செய்து அவர்கள் வாழ்வாதாரத்தை ஈட்டி வருகிறார்கள். பருவ மழை இல்லாதபோது இருக்கக்கூடிய குறைந்த நீர்வரத்தை வைத்து செய்யக்கூடிய ஒரே விவசாயம் பூக்கள் விவசாயம். எனவேதான் அதைச் செய்து, அந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்தப் பூக்களை கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூருவுக்கு குறித்த காலத்தில் அதிவிரைவில் எடுத்துச் செல்ல வேண்டிய கட்டாயமிருப்பதால் வாகன விபத்துகள் நிறைய நடக்கின்றன. திருவண்ணாமலை மாவட்டம் தொடங்கி கிருஷ்ணகிரி மாவட்டம் வழியாக பெங்களூருவுக்கு வாகனங்களில் பூக்களை அதிவேகமாக எடுத்துச் செல்கின்றபோது விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிக அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் கருத்திலேகொண்டு தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் திருவண்ணாமலை ஆகிய 3 மாவட்டங்களில் மிக அதிகமான பூக்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் வாழ்ந்துவருகின்ற காரணத்தினால், இந்நிலையை மாண்புமிகு அம்மா அவர்களின் கருணை மிகுந்த பார்வைக்கு எடுத்துச் சென்று, மேற்படி மாவட்டங்களில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவுடன் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக நீண்டதொரு கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். தொகுதியின்மீது அவருக்கு இருக்கின்ற பற்றால், பாசத்தால் அவர் இந்தக் கேள்வியை விரிவாகக் கேட்டிருக்கிறார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக 1,200 எக்டேர் நிலப்பரப்பில் ஆண்டு ஒன்றுக்கு 8,700 மெட்ரிக் டன் அளவிற்கு வாசனை மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதிலே குறிப்பாக பர்கூர் பகுதியில் மட்டும் 70 எக்டேர் நிலப்பரப்பில் 385 மெட்ரிக் டன் அளவிற்கு வாசனை மலர்கள் விளைவிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய காவேரிப்பட்டணத்தில்கூட 400 எக்டேரிலே வாசனை மலர்கள் பயிரிடப்படுகின்றன என்பதெல்லாம் உண்மைதான். என்றாலும்கூட, சிறிய அளவிலே ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்றாலும் நாள் ஒன்றுக்கு 5 மெட்ரிக் டன் பூக்கள் இருந்தால் மட்டுமே அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக அமையும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அரசின் பரிசீலனையில் இல்லை என்றாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். புதிய தொழில்முனைவோர் தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டத்தின்கீழ், தொழில் முனைவோர் யாராவது வருவார்களேயானால், திட்ட மதிப்பீட்டில் ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் 25% அரசு மானியத்துடன், 3% பின்முனை வட்டி மானியத்துடன்கூடிய கடனைப் பெற்று தொழில்முனைவோர்கள் பயன்பெறலாம் என்பதையும், அது மட்டுமல்லாது, பிரதமரின் வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம், மாநில அரசின் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம் போன்ற திட்டங்களின்கீழ் பல்வேறு மானியங்களையெல்லாம் தருவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவே, இந்தத் திட்டங்களில் ஏதாவது ஒன்றின்மூலமாக தொழில்முனைவோர்கள் கிருஷ்ணகிரி மாவட்ட தொழில்முனைவோர் மையத்தில் விண்ணப்பிப்பார்களேயானால், இந்த மானியங்களையெல்லாம் பெற்று, அந்தத் தொழிலை அங்கே செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.



2013 ஏப்ரல் 26]

**திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் பணிந்து வணங்குகிறேன். வாசனைத் திரவிய தொழிற்சாலையை அமைப்பதற்கு தனியார் தொழில்முனைவோர்கள் முன்வந்தால், அரசு அவர்களுக்கு ஊக்கம் தருவதோடு, பல்வேறு மானிய உதவிகளைச் செய்யும் என்பதை விளக்கி அமர்ந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து இடம் அமருகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 324, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**324—**

## தமிழ்க் கல்லூரி

***16549—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஒரு தமிழ்க் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் 4 அரசுக் கல்லூரிகளும், 5 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 8 சுயநிதிக் கல்லூரிகளும், ஆக மொத்தம் 17 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அதில், தமிழுக்கு என இராமசாமி தமிழ்க் கல்லூரி என்ற பெயரில் ஓர் அரசு உதவிபெறும் கல்லூரி அழகப்பபுரம் என்ற கிராமத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், அவர் சார்ந்திருக்கின்ற தொகுதி மானாமதுரையில் 3 சுயநிதிக் கல்லூரிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மானாமதுரை

[2013 ஏப்ரல் 26

தொகுதியைப் பொறுத்தவரையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கின்ற மாணவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகிற வகையிலும், தமிழ் மொழியில் படிக்கிற மாணவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்ற வகையிலும் அங்கே தேவையான அளவிற்கு கல்லூரிகள் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, தமிழுக்கென ஓர் அரசுக் கல்லூரி இருக்கிற காரணத்தினால் தற்போது அங்கே புதிதாக இன்னுமொரு தமிழ்க் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களினுடைய ஒப்பற்ற பாதுகாவலர், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி 3 தாலுகாக்கள், 3 ஒன்றியங்கள், 3 பேரூராட்சிகள், 139 ஊராட்சிகள் உள்ளடக்கிய பகுதி. இந்தப் பகுதிகளில் உள்ள அனைவருமே விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இங்கு எந்தவிதமான அரசுக் கல்லூரிகளும் கிடையாது. மானாமதுரையிலிருந்து 87 கி.மீ. தொலைவிலுள்ள காரைக்குடி அருகிலேதான் தமிழ்க் கல்லூரி இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானாமதுரையில் ஒரு தமிழ்க் கல்லூரி அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்க் கல்லூரிகள் துவங்குவதன் முதன்மையான நோக்கமே தமிழ் மொழியினை வளர்ப்பதுதான். தமிழ்க் கல்லூரிகள் என்பது தமிழ் இலக்கியப் பாடத்தை



2013 ஏப்ரல் 26]

முதன்மைப் பாடமாகக் கொண்டு, இளங்கலை மற்றும் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பினை வழங்கும் கல்லூரிகளாகும். தமிழ்நாட்டில் 8 அரசு உதவிபெறும் கல்லூரிகள் தமிழ்க் கல்லூரிகளாகத் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. 8 கல்லூரிகள் என்று சொன்னால், (1) தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, பேரூர், கோவை மாவட்டத்திலும், (2) செந்தமிழ் ஓரியண்டல் கல்லூரி, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரையிலும், (3) தருமபுரம் ஆதீனம் கலைக் கல்லூரி, தருமபுரம், மயிலாடுதுறையிலும், (4) கணேசர் செந்தமிழ் கல்லூரி, சன்மார்க்க சபை, புதுக்கோட்டையிலும், (5) இராமசுவாமி தமிழ்க் கல்லூரி, அதாவது உறுப்பினர் சார்ந்திருக்கிற சிவகங்கை மாவட்டத்தில், இராமசாமி தமிழ்க் கல்லூரி, அழகாபுரத்திலும், (6) தமிழ்வேள் உமா மகேசுவரனார் கரந்தை கலைக் கல்லூரி, கரந்தை, தஞ்சாவூர் மாவட்டத்திலும், (7) ஸ்ரீ ல ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனந்தாள், தஞ்சாவூர் மாவட்டத்திலும், (8) ஸ்ரீமத் சிவஞானபாளைய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம் பகுதி, விழுப்புரம் மாவட்டத்திலும் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

மேலும், தமிழ் மொழியைப் பாதுகாக்க வேண்டும், தமிழ் மொழிக்குச் சிறப்பு கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 651 கலைக் கல்லூரிகளிலும், தமிழ் மொழியை ஒரு முதன்மைப் பாடமாக வைத்து நடைபெற்று வருகின்றன. ஆகவே, எந்தெந்தப் பகுதிகளில் தமிழ் மொழியைப் பாடமாக வைத்து படிக்க விரும்புகிறார்களோ, அந்த இடங்களுக்குச் சென்று படிப்பதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்கிறார்கள். அதோடுமட்டுமல்ல, தஞ்சாவூரில் தமிழுக்கென ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் இருக்கிறது. தமிழைப் போற்றுகிற வகையில் அங்கேயும் அவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்று விரும்பினால் அதற்கும் வாய்ப்பிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு

[2013 ஏப்ரல் 26

நன்றி. மானாமதுரை பகுதி ஒரு வளர்ந்து வருகின்ற பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் தமிழ்க் கல்லூரி தொடங்கவில்லையென்றாலுங்கூட, அந்தப் பகுதியில் ஓர் அரசுக் கலைக் கல்லூரி அல்லது அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையாவது அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அல்லது பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்க அரசு முன்வருமா என்று ஒரு வினாவை எழுப்பியிருக்கிறார்கள். பொதுவாக, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழையெளிய மாணவர்கள், கிராமப்புற மாணவர்கள் உயர் கல்வியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இதுவரையில் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் தொழில்நுட்பக் கல்லூரிகள் உட்பட அதிகமான கல்லூரிகளைத் தொடங்கி அவற்றை நல்லமுறையில் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக 51 கல்லூரிகளைத் தந்து மாணவர்கள் இன்றைக்கு படித்து பயன்பெற்று வருகிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இருக்கக்கூடிய கல்லூரிகளில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னாலும், கலைக் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னாலும் அங்கே மாணவர்களுடைய சேர்க்கைக்கான இடங்கள் அதிக அளவில் இருக்கின்றன. அதேபோல் பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, தமிழ்நாட்டிலே 553 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கேயும் மாணவர்களுக்குத் தேவையான இடங்கள் இருக்கின்றன. ஆகவே, இதுவரையில் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒரு கல்லூரிக்கு கிட்டத்தட்ட 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவாகிறது.



2013 ஏப்ரல் 26]

நிதிநிலைக்கேற்ப தற்போது கட்டடங்கள் கட்டுகிற பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, தமிழ்நாட்டிலே புதிதாகத் தொடங்கப்பட்ட 36 கல்லூரிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கட்டடங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆகவே, எதிர்காலத்தில் நிதிநிலை மற்றும் மாணவர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதியில் கல்லூரி தொடங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 325, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு. இந்த வினா பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 326, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**326—**

**சாலை வசதி**

***7022—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், உகினியம் வன செட்டில்மென்ட் கிராமத்திற்குச் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டத்திற்குட்பட்ட உகினியம் வன செட்டில்மென்ட் கிராமம் வழியாக திம்பம்–கடம்பூர் சாலை (கானாபுத்தூர்–உகினியம் சாலை) குத்தியாலத்தூர் காப்புக்காடு

வழியாகச் செல்கிறது. இச்சாலை 15 மைல் மற்றும் 4 பர்லாங் தூரம் குத்தியாலத்தூர் காப்புக்காட்டிலும், 5 மைல் மற்றும் 4 பர்லாங் தூரம் காப்புக்காட்டிற்கு வெளியிலும் செல்கிறது. 1937–1938 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இச்சாலையின் தற்போதைய அகலம் 3.75 மீட்டர் ஆகும்.

இச்சாலையில் (கானாபுத்தூர்–உகினியம் சாலை) பராமரிப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்பட வேண்டிய 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு 13–வது நிதிக் குழு திட்டத்தின்கீழ் 2011–2012 ஆம் நிதியாண்டில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ரூ.43.00 இலட்சம் செலவில் அரசாணை (2D) எண் 27, சுற்றுச்சூழல் மற்றும்வனத் துறை, நாள் 16–6–2011–லே ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 31–3–2012–லே ரூ.43 இலட்சம் செலவில் சாலைப் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை கொசட்டி, கொத்தடை, களியடை, சாக்கரை மற்றும் உகினியம் கிராமத்தைச் சார்ந்த சுமார் 1,000 பழங்குடியின மக்கள் உள்ளிட்ட பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் போக்குவரத்திற்குப் பயன்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி அவைக்கு வரும் முன்னே, பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலம் வனக் கோட்டம், உகினியம் வன செட்டில்மென்ட் கிராமச் சாலை சீரமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுவிட்டது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடம்பூரிலிருந்து மார்க்கம்பாளையம் ஊராட்சி 22 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த ஊராட்சியில் 4 கிராமங்கள் உள்ளன. சுமார் 2,500 மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 22 கிலோ மீட்டர் நீளமுள்ள கடம்பூர்-மார்க்கம்பாளையம் சாலையில், 20 கிலோ மீட்டர் சாலை வனத் துறைக்குச் சொந்தமானது. இதில் 8½ கிலோ மீட்டர் தூரத்திற்கு வனத் துறை, சாலை அமைத்துக் கொண்டிருக்கிறது.



மீதியுள்ள 11½ கிலோ மீட்டருக்கு இந்த ஆண்டு சாலைகளை அமைத்துக் கொடுத்தால், இனி எந்தக் காலத்திலும் என்னுடைய தொகுதிக்கு வனத் துறையின் சார்பில் எந்தச் சாலையும் போடவேண்டுமென்று நான் கேட்க மாட்டேன் என்று உறுதியாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற மார்க்கம்பாளையம் சாலையை துறைமூலம் ஆய்வு செய்து உடனடியாக சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 327, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**327—**

## மேம்பாலம்

***21062—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, மூலக்கடையில் மேம்பாலம் கட்டும் பணியை விரைவாக முடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, மூலக்கடையில் நடைபெற்றுவரும் மேம்பாலப் பணியை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பால வேலைகள் கடந்த 7, 8 மாதங்களாக சிறு அளவிற்குக்கூட நடைபெறவில்லை. இரண்டு பக்கமும் சாலைகள் கொத்திப் போடப்பட்டிருக்கின்றன. பாலம் கட்டுகிறபோது இரண்டு ஓரங்களிலும் சர்வீஸ் ரோடு முறையாக தார்ச் சாலைகளாகப் போடப்பட்டு, வண்டிகள் போக, வர ஏற்பாடு செய்யப்படும். பெரிய பாலங்கள் கட்டுகிறபோதுகூட, ஒரு நிமிடம்கூட போக்குவரத்திற்கு எந்த இடையூறும் இல்லாத வகையிலே அந்தப் பாலங்கள் கட்டப்படுகின்றன. இப்பொழுது மெட்ரோ இரயில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனாலும் அதன் காரணமாக ஒரு நிமிடம்கூட அண்ணா சாலையிலே போக்குவரத்து பாதிப்பு ஏற்படவில்லை. ஆனால், மூலக்கடையிலே, வியாசர்பாடியிலே போக்குவரத்து பாதிப்பென்பது நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இரண்டு பக்கமும் உடனடியாக சர்வீஸ் சாலைகளை, தார்ச் சாலைகளாகப் போட்டு வண்டிகள் போக, வர ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சர்வீஸ் ரோடு பராமரிக்கப்படாததால் மாதவரத்திலிருந்து வரக்கூடியவர்கள், மற்றவர்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். நம்முடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் தினந்தோறும் அந்தச் சிரமத்தை அனுபவித்துக் கொண்டிருப்பார் என்று நான் கருதுகிறேன். மக்கள் புழுதியிலும், மேடு பள்ளங்களிலும் பெரும்பாடுபட்டு பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சாலையை முதலில் சீரமைத்துக் கொடுத்துவிட்டு, பாலப் பணியை வேகப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மேற்கத்திய சாலையான ஆறுவழிச் சாலையில் கிலோ மீட்டர் 8/6–ல் மூலக்கடை சந்திப்பில் ரூ.49.55 கோடி செலவில் மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. இப்பாலத்தின் நீளம் 613 மீட்டர்; அணுகு சாலையின் நீளம் 320 மீட்டர்; பாலத்தின் மொத்த நீளம் 933 மீட்டர் ஆகும். இப்பாலத்தின் தெற்குப் பகுதியான மூலக்கடையில் தூண்கள் அமைக்கப்படும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. பாலத்தின் வடக்குப் பகுதியான, செங்குன்றத்தில் நில உரிமையாளர்கள் 1–10–2012 வரை நில ஆர்ஜிதத்திற்கு நீதிமன்றத் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர். தற்போது நில ஆர்ஜிதம் முடிவடைந்து நிலம் முழுவதும் கையகப்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், போக்குவரத்து மாற்றம் 8–3–2013 அன்று நடைமுறைப்படுத்தப்பட்டு பாலத்தின் இருபுறமும் பயன்பாட்டுச் சாலைகள், service roads அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது 34 சதவிகித பாலப் பணிகளும், 60 சதவிகித அடித்தளப் பணிகளும் முடிவடைந்துள்ளன. இப்பாலத்தின் கட்டுமானப் பணிகள் முழுவதும் மார்ச், 2014–க்குள் விரைந்து முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அந்தப் பாலத்தின் இருபுறங்களிலும் சாலை அமைக்கிற வேலையை ஓரிரு வாரத்திற்குள் முடித்துத் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு என்னுடைய நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையின் 16 கண் பாலம் அருகில் ஒரு புதிய பாலம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்தப் பாலம் கட்டுவதற்கான ஆய்வுப் பணிகளும் முடிந்துவிட்டன. தற்போது அந்தப் பாலம் கட்டப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பாலப் பணி தற்போது திட்ட மதிப்பீடு தயாரிக்கும் நிலையில்தான் இருக்கிறது. அந்தப் பணிகள் முடிந்தவுடன், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, விரைவில் பாலப் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 328, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**328—**

### கடலரிப்பு தடுப்புச் சுவர்

*__7939—திரு. சு. பவுன்ராஜ்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதியிலுள்ள மீனவக் கிராமங்களில் கடலரிப்பு தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூம்புகார் தொகுதியில் சுனாமி போன்ற கடல் சீற்றத்திலிருந்து மீனவக் கிராமங்களைக் காப்பாற்ற தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார். குறிப்பறிந்து செயல்படுகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணத்தில் இந்தப் பணி தோன்றியபோதே அதைச் செய்து முடிக்கின்ற பேராற்றல் படைத்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பூம்புகார் தொகுதி, வானகிரி குப்பத்தில் கடல் சீற்றத்திலிருந்து மீனவக் கிராமங்களைக் காப்பாற்ற



2013 ஏப்ரல் 26]

2 பகுதிகளிலும் முறையே 950 மீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் மற்றும் குறுக்குச் சுவர் ரூ.16 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் 500 மீட்டர் நீளத்திற்குத் தடுப்புச் சுவர் மற்றும் குறுக்குச் சுவர் ரூ.16 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆகமொத்தம் 1,450 மீட்டர் நீளத்திற்கு மொத்தம் ரூ.33 கோடியே 95 இலட்சம் மதிப்பிலான பணிகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் யாவும் இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியின் உரிமையை மீட்டுத் தந்த பொன்னியின் செல்வியே, (மேசையைத் தட்டும் ஒலி) கச்சத் தீவை மீட்கப்போகும் நாளைய பாரதமே, (மேசையைத் தட்டும் ஒலி) மீனவ சமுதாயத்தைக் காக்கும் குலவிளக்கே, ஏழை மக்களின் அமுதசுரபியே, புகழ் ஓங்கும் இமயமே, எங்கள் இதய தெய்வமே, உங்களை வணங்குகிறேன் தாயே!

பூம்புகார் தொகுதியில் 10 மீனவக் கிராமங்கள் உள்ளன. இங்கு கடலரிப்பு ஏற்பட்டு மீனவ குடியிருப்புகளுக்குள் உப்பு நீர் உள்புகும் சூழல் உள்ளது. எனவே, கடலரிப்பிலிருந்து மீனவக் கிராமங்களைப் பாதுகாக்க தடுப்புச் சுவர் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு இறுதிக்குள் பணிகள் முடிவுறும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வானகிரி கிராமத்தில் ரூ.34 கோடி செலவில் கடலரிப்பைத் தடுப்பதற்குத் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு ஆணைகளைப் பிறப்பித்து, பணிகள் துவங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–45*

என்னுடைய தொகுதிக்குட்பட்ட காலமநல்லூர் ஊராட்சிக்கு உள்ளடங்கிய சின்னமேடு என்கின்ற மீனவக் கிராமத்திலே சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு ஏற்பட்டு, கடல் நீர் கிராமத்தில் உட்புகும் சூழ்நிலை உள்ளது. கருணை உள்ளத்தோடு அனைத்து பகுதிகளுக்கும் வாரி வழங்கிக் கொண்டிருக்கின்ற, மீனவ சமுதாயத்தின் விடிவெள்ளியாக இருக்கின்ற எங்கள் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை எடுத்துச்சென்று, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 329, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**329—**

**கால்நடைக் கிளை நிலையம்**

***5284—திரு. எல். வெங்கடேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருக்கோவிலூர் தொகுதி, திருக்கோவிலூர் வட்டம், பெண்ணைவலம் கிராமத்தில், கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருக்கோவிலூர் வட்டம், திருவெண்ணெய்நல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலே பெண்ணைவலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக 3,000 கால்நடைகள் இருந்தாலே அங்கே கிளை நிலையம் அமைத்துத் தரப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமத்தில் ஏறக்குறைய 7,000 கால்நடைகளுக்கு மேல் இருக்கின்ற காரணத்தினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அங்கே கிளை நிலையம் அமைப்பது குறித்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

**திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணைவலம் கிராமத்தைச் சுற்றி எட்டு கிராமங்கள் இருக்கின்றன. கொணலவாடி, அமாவாசைப்பாளையம், கொண்டசமுத்திரபாளையம், பூசாரிப்பாளையம், டி.கொளத்தூர், டி.கொடியூர், டி.குன்னத்தூர் போன்ற எட்டு கிராமங்களில் 9,692 கால்நடைகள் இருக்கின்றன. அதேசமயத்தில் குறிப்பாக கொடியூர், குன்னத்தூர் ஆகிய இரண்டு கிராமங்களில் 2,000–க்கும் மேற்பட்ட வெள்ளாடுகள் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே கால்நடைகளுக்கு ஏதாவது நோய் ஏற்படுகிறது என்று சொன்னால், அங்கேயிருந்து, திருக்கோவிலூர், சித்தலிங்கமடம், இளந்திரை போன்ற கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தால், கூடிய விரைவிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்ணைவலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க முன்வர வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியில் கால்நடைக் கிளை நிலையம் தேவை என்பதைத் துறையும் அறிந்திருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதி பெற்று கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 330, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**330—**

### வரி குறைப்பு

***19837—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எண்ணெய் வித்துக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 5 சதவிகித வரியைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எண்ணெய் வித்துக்களுக்கான 5 சதவிகித வரியைக் குறைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகச் சிறந்த ஆட்சி செய்யும் அம்மா அவர்களை, தமிழகம் மற்றும் இந்தியாவைக் கூறுபோட்டு, பங்கு



2013 ஏப்ரல் 26]

பிரித்த குடும்பம் ஒன்று, தாம் பேசுவதே என்னவென்று தெரியாமல் பேசுகின்ற தலைவர் ஒருவர். மின்சாரப் பிரச்சினையைப்பற்றி பேசிய அவ்விரு தலைவர்களையும் வாய் திறப்பதற்கே வழியில்லாமல் செய்தது, நேற்று விதி 110—ன்கீழ் அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) மின்சார உற்பத்தியில் தமிழகம் முதல் மாநிலம் ஆகும் என்ற அந்த அறிவிப்பால், ஒட்டுமொத்த இந்தியாவே எதிர்பார்க்கின்ற அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவில் தேங்காய் வியாபாரத்தில் போட்டி போடும் மாநிலங்கள் கேரளாவும், தமிழகமும்தான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொல்வதை நன்றாகப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது 20 ஆண்டுகாலப் பிரச்சினை. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் 2001—ல் அமைச்சராக இருந்தபொழுது, அப்பொழுது வணிக வரித் துறை அமைச்சராக இருந்த திரு. சத்தியமூர்த்தி அவர்களிடத்தில் கோரிக்கை வைத்து, அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அன்று முதல், விவசாயிகள் மத்தியில் நிலவி வருகின்ற ஒரு நியாயமான பிரச்சினை இது. வியாபாரம் முறையாக நடக்க வேண்டும் என்ற காரணத்தால் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று பரிசீலிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதாவது, இந்திய அளவிலே கேரளாவும், தமிழகமும்தான் எண்ணெய் வியாபாரத்திலே போட்டியிடும் மாநிலங்கள். கேரள மாநிலத்தில் தேங்காய் எண்ணெய்க்கு முழு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். மற்றுமுள்ள அனைத்து எண்ணெய் வித்துக்களுக்கும் ஒரு சதவிகிதம் வரி விதிக்கப்பட்டுள்ளது. இன்றைக்குத் தமிழகத்தில் அனைத்து விவசாயிகளும் அதிகமாக தென்னை விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழகத்தை இந்தியாவில் எல்லா துறைகளிலும் முதன்மை மாநிலமாக அம்மா அவர்கள் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி செய்கின்ற காலகட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், கேள்வியைக் கேளுங்கள்.

[2013 ஏப்ரல் 26

முற்பகல் 10–50

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** விவசாயிகளிடம் அதிக பாசமுள்ள மாண்புமிகு அம்மா அவர்கள், கேரளாவைப்போல, தேங்காய், தேங்காய்ப் பருப்பு, தேங்காய் எண்ணெய்க்கு முழு வரி விலக்கு அளித்தும் மற்ற எண்ணெய் வித்துக்களுக்கும் கேரளாவைப் போலவே, உற்பத்திக்கும், விற்பனைக்கும் 1 சதவிகித வரி விதித்தால் அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதைச் செய்து கொடுக்குமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணெய் வித்துக்களைப் பற்றிய கேள்வியை இங்கே கேட்டார்கள். ஆனால், எண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்கவேண்டும் என்று அவர் மறுபடியும் கேட்டுள்ளார்கள். எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில், குறிப்பாக சரக்கு மற்றும் சேவை வரியை விதிக்கும் நோக்கில் இந்திய அரசு மத்திய விற்பனை வரியைக் குறைத்து வருகிறது. மத்திய அரசு மத்திய விற்பனை வரியை 1–4–2007 முதல் 4 சதவிகிதத்திலிருந்து 3 சதவிகிதமாகவும், 1–6–2008 முதல் 2 சதவிகிதமாகவும் குறைத்ததனால், உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டுக்கு மிகுந்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இழப்பீட்டின் ஒரு பகுதியை மத்திய அரசு வழங்குகிறது. இந்த இழப்பீட்டினை சரிசெய்யும் விதமாக மாநில நிதி மற்றும் வணிக வரி அமைச்சர்களைக் கொண்ட அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவானது மதிப்புக் கூட்டு வரி விகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்த ஒப்புக்கொண்டது. கர்நாடகம், மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் டில்லி போன்ற மாநிலங்கள் 2010–2011 ஆம் ஆண்டிலேயே வரி விகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக உயர்த்தியுள்ளன. 2011–2012–க்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையில், மத்திய அரசு அட்டவணைப்படுத்தப்பட்ட



2013 ஏப்ரல் 26]

பொருட்களுக்கு (Declared goods) கூடுதல் வரி விகிதமான 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக 1–4–2011 முதல் உயர்த்தியுள்ளது. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் முதல் அட்டவணை பகுதி (B) வரிசை எண் 41–ன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான வரி விகிதத்தினை, “Declared goods as specified in Section 14 of the Central Sales Tax Act, 1956 other than those specified elsewhere in any of the schedules” 4 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக 11–7–2011 முதல் மாற்றி அமைக்கப்பட்டது. மேற்கண்ட எண்ணெய் வித்துக்களும் இதில் உள்ளடக்கியதாக இருப்பதால் தற்போது நடைமுறையில் உள்ள 5 சதவிகித வரியைக் குறைப்பது தொடர்பான கோரிக்கை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

அதேபோல, எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரை, கர்நாடகாவில் 5.5 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. புதுச்சேரி, ஆந்திரப் பிரதேசம், கேரளா, மகாராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் எண்ணெய் வித்துக்களுக்கு 5 சதவிகித வரிதான் விதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களைப்போல நம்முடைய மாநிலத்திலும் 5 சதவிகித வரிதான் விதிக்கப்படுகிறது. கர்நாடகாவில் மட்டும் அரை சதவிகிதம் அதிகமாகவுள்ளது.

அதேபோல, எண்ணெய்யைப் பொறுத்தவரை, வரி விதிப்பில் நாம் அனைத்து மாநிலங்களுக்கும் இணையாக இருக்கிறோம். அதாவது கர்நாடகாவில் 5.5 சதவிகித வரியும், ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் 5 சதவிகித வரியும் விதிக்கப்படுகிறது. கேரளாவில் மட்டும் தேங்காய் எண்ணெய் தவிர மற்ற அனைத்து எண்ணெய்களுக்கும், 1 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய்க்கு மட்டும் முழுவதுமாக வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரியில் 3 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. கடந்த ஆண்டிலே எண்ணெய்க்கு இந்த அளவிற்கு வரி விதிக்கப்பட்ட பிறகுதான் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவிற்கு நம்முடைய தமிழக அரசு இந்த எண்ணெய் பொருட்களின்மூலம் விற்பனை வரியை ஈட்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் பலமுறை இதுகுறித்து கோரிக்கை வைத்துள்ளார்கள். சட்டமன்றத்திலும் இதே பிரச்சினை பற்றி 5 முறை கோரிக்கை வைத்துள்ளார்கள். அந்த விற்பனை வரியை 1 சதவிகிதம் குறைத்தால்

*500 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய் வரி வருவாய் மாநில அரசுக்கு வரும் என்று சொன்னார்கள். அனைத்து எண்ணெய் வியாபாரம் செய்பவர்களும் முறையாக இந்த வரியைக் கட்ட முன்வருவார்கள், அதன்மூலம் 500 கோடி ரூபாய், 1,000 கோடி ரூபாய் வரை மாநில அரசுக்கு வருவாய் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உத்தரவாதம் அளித்தால் அதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று தேவை, வாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அரசு பரிசீலனை செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.*

**திரு. என்.எஸ்.என். நடராஜ்:** ****

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நடராஜ் அவர்கள், ** என்று சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ** குறித்து நான் சொன்னது, உறுப்பினர் சொன்னது யாவும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான, விளக்கமான பதிலை இங்கே தந்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இது தொடர்பான அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

*வினா வரிசை எண் 331, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*





**331—**

## உண்டி, உறைவிடப் பள்ளி

***5737—திரு. ந. நஞ்சப்பன்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பெண்ணாகரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளை உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கல்வித் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி அல்லது ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் நலப் பள்ளிகளை உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றம் செய்ய சாத்தியக்கூறுகளே இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

**திரு. டி. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரத்தைச் சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுடைய குழந்தைகள் பள்ளிக்கு வர வேண்டுமென்றால், 30, 40 கிலோ மீட்டர் தூரம் இரண்டு, மூன்று பேருந்துகளில் மாறி, மாறி பயணித்து வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்கள் தங்கிப் படிக்கும் வகையிலே, பெண்ணாகரத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகள், உண்டி, உறைவிடப் பள்ளிகளாக மாற்றித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

*[2013 ஏப்ரல் 26*

மேலும், தனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உரிகம், கூட்டையூர் ஊராட்சிகளில் 40–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. அதில் அதிகப்படியான பழங்குடி மக்களுடைய குழந்தைகள் பல கிலோ மீட்டர் தூரம் நடந்து பள்ளிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, பழங்குடியின மக்களுடைய குழந்தைகள் எளிதாக கல்வி பயிலும் வகையிலே கூட்டையூரில் ஓர் உண்டி உறைவிடப் பள்ளியை இந்த அரசு அமைக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் பழங்குடியினருக்கான உண்டி உறைவிடப் பள்ளிகள் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிகளாகும். இருப்பினும், அரசுப் பள்ளிகளை உண்டி உறைவிடப் பள்ளிகளாக மாற்ற இயலாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் பெண்ணாகரத்தில் உள்ள அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அதிகமான மாணவ, மாணவியர்கள் படிக்கும் நிலையிருப்பின், அம்மாணவர்கள் தங்கள் கல்வியைத் தொடர்ந்திட, அப்பகுதியில் விடுதி ஒன்றினை அமைத்திடும் கருத்துருவினை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று இவ்வரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**332—**

## பேருந்து வசதி

***8909—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



*2013 ஏப்ரல் 26]*

குளித்தலை தொகுதி, தோகைமலையில் இருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளித்தலை தொகுதி, குளித்தலையிலிருந்து சென்னைக்கு 31–3–2012 முதல் பேருந்து இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. தோகைமலையிலிருந்து சென்னைக்கு நேரடியாகப் பேருந்து இயக்க இயலாத வகையில் பயணிகளின் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளது. எனவே, தற்பொழுதுள்ள பேருந்து வசதியே போதுமானதாக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு அம்மா அவர்களின் முந்தைய 1991–1996 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்திலே, தோகைமலை ஒன்றியத்தில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை கண்டறிந்து, காவிரியை ஆதாரமாகக் கொண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அதிலே பல கிராமங்கள் பயன்பெற்றாலும், சில கிராமங்கள் பயன்பெறவில்லை என்பதைக் கண்டறிந்து, இன்றைக்கு 3–வது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு தோகைமலையிலுள்ள குக்கிராமங்களில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 12.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், தோகைமலையில் உள்ள பேருந்து நிலையத்தைத் தரமுயர்த்தி, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஒரு கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கியிருப்பதற்கு நாங்கள் வணங்கும் தெய்வமாகிய தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 26

*முற்பகல் 11–00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியைச் சார்ந்தவர். தோகைமலை வாழ் மக்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்மீது எவ்வளவு விசுவாசமாக இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, தோகைமலையிலிருந்து சென்னைக்குப் பேருந்து இயக்க வேண்டும் என்ற அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, எப்படியாவது பேருந்தினை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பயணிகளின் எண்ணிக்கை வருங்காலத்தில் சரியாகிவிடும் என்பதால், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று அந்தப் பேருந்தை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் பெற்ற காலம் முதல் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனையே இல்லாத குளித்தலை தொகுதியில், புதிய பணிமனை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நிலம் தேர்வு செய்யப்பட்டு, தொடர் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் குளித்தலை தொகுதி மக்களின் நலன் கருதி 9 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க உத்தரவிட்டு, தற்போது பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தோகைமலையிலிருந்து சென்னைக்குப் பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், வரும் ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயணிகளின் எண்ணிக்கையை ஆராய்ந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, பேருந்து இயக்குவதற்குப் பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

**திரு. கடம்பூர் ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைசிறந்த முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்குகின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான் போக்குவரத்துத் துறைக்குப் பொற்காலம் என்பதை இன்றைக்கு நாடு பார்த்துக் கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, கோவில்பட்டியிலிருந்து திருப்பதிக்கு பேருந்து இயக்க வேண்டுமென்ற கோவில்பட்டி தொகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, விரைவில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்றால், திருப்பதி தேவஸ்தானத்திலே பல்வேறு வகையிலே முறையிட்டு, இன்றைக்குக் கோவில்பட்டியிலே திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பாக ஆன்லைன் முன்பதிவு மையம் விரைவிலே தொடங்கவிருக்கின்றது. எனவே அதை முன்னிட்டு, அதிகமான அளவில் பயணிகள் அங்கிருந்து திருப்பதிக்குச் செல்கின்ற அளவிற்கு பேருந்து வசதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியிலிருந்து திருப்பதிக்கு, இரு

[2013 ஏப்ரல் 26

மாநில அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, விரைவில் பேருந்தினை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற தேர்தலின்போது மூத்த குடிமக்களுக்கு அரசுப் பேருந்தில் இலவச பயணம் செய்வதற்கு நாங்கள் வழிவகுப்போம் என்று நமது கூட்டணி சார்பாக, அ.தி.மு.க. கட்சியின் சார்பாக வாக்குறுதி வழங்கினீர்கள். அதை அடுத்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில், ஐந்து ஆண்டுக் காலம் இதே அவையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது, அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடைய நிதி நிலைமை எப்படி இருந்தது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்று சொன்னால், ஐந்து ஆண்டுக் காலம் ஆட்சி நடத்திய மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சீரழிக்கப்பட்டு, 6,150 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் சுமை ஏற்பட்டது. தொடர்ந்து மத்திய அரசு டீசல் விலையை உயர்த்திக் கொண்டிருக்கிறது. அதிலும் டீசல் விலையை நிர்ணயிப்பதில் இரட்டை விலைக் கொள்கையை மத்திய அரசு கொண்டுவந்ததன் காரணமாக ஏற்படுகின்ற இழப்புகளை ஈடுசெய்கின்ற வகையில், குறிப்பாக கடந்த ஆண்டு 200 கோடி ரூபாய் நிதியினை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போக்குவரத்துக்



2013 ஏப்ரல் 26]

கழகங்களுக்கு, டீசல் விலை உயர்வால் ஏற்பட்ட அந்த நிதிச் சுமையினைச் சமாளிக்கும் பொருட்டு 500 கோடி ரூபாய் அளவிற்கு நிதியினை வழங்கிட ஆணையிட்டிருக்கிறார்கள். தேர்தல் நேரத்திலே அறிவிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தேர்தல் வாக்குறுதியைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆய்வில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 333, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**333—**

## வீட்டுமனைப் பட்டா

***19494—திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, பெரியார் நகர், நேரு நகர் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி கிராமம், பெரியார் நகர், நேரு நகர்ப் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்கு உண்டான புல எண் 123/1–ல் வகைப்பாடு ‘வேளச்சேரி ஏரி’ என நில ஆவணங்களில் உள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கோரிக்கையின்பேரில் நில உரிமை மாற்ற கருத்துரு மாவட்ட ஆட்சியருடைய

*[2013 ஏப்ரல் 26*

*பரிசீலனையில் உள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியரிடமிருந்து நில உரிமை மாற்ற முன்மொழிவுகள் வரப்பெற்றவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும்; தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று ஏழைகளின் வாழ்வில் விளக்கேற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேளச்சேரி தொகுதிக்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் தொடங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். அறிவிக்காமலேயே மலிவு விலை உணவகம் தொடங்கி, ஏழைகளின் வயிற்றில் எரியும் பசித் தீயை அணைத்த அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி தொகுதி, நேரு நகர், கக்கன் நகர், பெரியார் நகர், சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அடித்தட்டு மக்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதி மக்களுக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசு நிர்ணயித்த முழு தொகையும் கட்டி முடிக்கப்பட்டு, கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது; ஆனால், 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் பட்டா வழங்கப்படவில்லை. அதேபோன்று, தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வீடுகள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்தகால பொற்கால ஆட்சிக் காலத்தில், 1991–1992 ஆம் ஆண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் சுமார் 1,295 மனைகள் 6 பிரிவுகளின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மனைகளுக்கு அரசு நிர்ணயித்த முழுத் தொகையும் கட்டி முடிக்கப்பட்டு, கிரயப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.*



*2013 ஏப்ரல் 26]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், கேள்வியைக் கேளுங்கள்.*

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விதான் கேட்கிறேன். ஆனால், சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதனை எடுத்துச் சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ள வேளச்சேரி கிராமம், பெரியார் நகர், நேரு நகர் பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வீட்டுமனைகளுக்குண்டான, புல எண் 123/1–ல், வகைப்பாடு வேளச்சேரி ஏரி என நில அளவைகளில் பதிவாகியுள்ளது. மேற்காணும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான நிலத்தில், அரசாணை பிறப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பொதுவாக, நத்தம் புறம்போக்கு நிலமாக இருந்தால், நேரடியாக பட்டா மாற்றம் செய்து, உடனடியாக பட்டா வழங்க முடியும். பிற இடங்களில் பட்டா மாறுதல் கேட்கின்றபோது, அதை வகைப்பாடு செய்துதான் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கோரிக்கையின்பேரில், நில உரிமை மாற்றக் கருத்துரு, சென்னை மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்டவுடன், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேல்நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 26

**திரு. எம்.கே. அசோக்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று, இந்த அரசு ஏழைகளுக்கு ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்குகிற அரசாணையை நீட்டித்து உத்தரவிட்டது. ஆனால், நீட்டிக்கப்பட்ட உத்தரவில், அது மூன்று நாட்களுக்குள்ளேயே காலாவதியாகிறமாதிரி குறிப்பிட்ட காரணத்தினால், அந்த உத்தரவு தற்போது காலாவதியாகிவிட்டது. எனவே, மீண்டும் ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான அரசாணையை நீட்டித்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "சிறப்பு வரன்முறைத் திட்டத்தினுடைய, ஒருமுறை வீட்டுமனைப் பட்டா வழங்க வழிவகை செய்யும் அரசாணை கால நீட்டிப்புச் செய்து கொடுக்கப்படுமா?" என்று வினா எழுப்பியுள்ளார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இது எடுத்துச்செல்லப்பட்டு இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக விரைவில் அந்த அரசாணையை பிறப்பிப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 334, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு



2013 ஏப்ரல் 26]

பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**334—**

## தொடக்கப் பள்ளி

***20536—திரு. கே.பி. நாகராஜன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதி, களையூர் ஊராட்சியில் புதிய ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, களையூர் ஊராட்சி, புதிய தொடக்கப் பள்ளி துவங்க நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதால், இப்பகுதியில் புதிய தொடக்கப் பள்ளி துவங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

முற்பகல் 11–10

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே, வல்லம் ஒன்றியத்திலே, களையூர் என்ற கிராமத்திலே இதற்கு முன்பாக தொடக்கப் பள்ளி அங்கே நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்தப் பள்ளி Management School ஆக செயல்முறைப்படுத்தப்பட்டது. அந்தப் பள்ளியை நடத்தி வந்தவர் அதை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாகவே அரசாங்கத்திற்கு எழுதிக் கொடுத்துவிட்டு இப்பொழுது

[2013 ஏப்ரல் 26

சென்னைக்கு குடிபெயர்ந்து விட்டார். அனைத்து ஆவணங்களும் இயக்குநரிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையைப் பொறுத்தவரையில் தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையிலே, புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே கல்விக்கூடம் இல்லாமல் ஒரு கிராமமா என்று நினைத்துப் பார்க்க முடியாத நிலை இருக்கும் வேளையிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு இதை எடுத்துச் சென்று அங்கே தொடக்கப் பள்ளியை ஆரம்பிப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதிப் பற்றை இங்கே வெளிப்படுத்தினார். நான் ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெளிவாகத் தெளிவுபடுத்தி இருக்கிறேன். அரசுக்குக் கருத்துரு வரப்பெற்று, போதிய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தபோதிலும், அவருடைய தொகுதிப் "பற்றை" வெளிப்படுத்தி இருக்கிறார். இருந்தாலும், அரசுக்கு "பற்று" வந்துவிடக் கூடாது அல்லவா என்பதை அவர் உணர வேண்டும். அவற்றோடு மாத்திரமல்ல, அவர் அரசின்மீதும் கொஞ்சம் "பற்று" வைக்க வேண்டும். ஆகவே, கேள்வியை எழுப்புகிறபோது கொஞ்சம் பற்றற்றுப் பேச வேண்டும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அவருடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, இவ்வாண்டே அதற்குரிய வாய்ப்புகள் உருவாகும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2013 ஏப்ரல் 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 335, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**335—**

### கூடுதல் கட்டடம்

***26522—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு தலைமை மருத்துவமனை மற்றும் இராணியார் அரசு மகப்பேறு மருத்துவமனை, அனைத்து நவீன வசதிகளும் கொண்ட மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகும். இம்மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் அரசுக்கு தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அன்னை தெரசாவாகத் திகழும் தாயே! மாற்றம் தந்த மக்களுக்கு மருத்துவத் துறையில் தினம் தினம் ஏற்றம் தரும் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை தொகுதி, மழையூரில் ஒரு துணை மின் நிலையம் அமைக்க ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டையில் பெண்களுக்கு விடிவெள்ளியாகப் பிறந்த டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் பெயரிலே இயங்கி வரும் புதுக்கோட்டை அரசு தலைமை

*[2013 ஏப்ரல் 26*

மருத்துவமனையில் போதிய இட வசதி இல்லாததால், நோயாளிகளின் நலன் கருதி, அதனை விரிவாக்கம் செய்து, தரம் உயர்த்தித் தர வேண்டும். அங்கு தனியாக இருதய நோய்ப் பிரிவு, தீக் காயப் பிரிவு மற்றும் நரம்பியல் சிகிச்சைப் பிரிவு போன்றவற்றை அமைத்து, அம்மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியும் வழங்க வேண்டுகிறேன். அதேபோல அரசு இராணியார் மகப்பேறு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் கருவி அமைப்பதற்கும் அத்துடன் கூடுதலாக மருத்துவர்களை நியமனம் செய்வதன்மூலம் இந்த நிதியாண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தலைமை அரசு மருத்துவமனையானது, தலைமை மருத்துவமனைக்குத் தேவையான தகுதிகளோடு அனைத்துப் பிரிவுகளும் தனித் தனிக் கட்டட வசதி மற்றும் நவீன வசதிகளோடு வெகு சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அந்த மருத்துவமனையில் ஏதாவது கட்டட வசதிகளில் குறை இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அதேபோன்று, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதி வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். எம்.ஆர்.ஐ. ஸ்கேன் வசதியைப் பொறுத்தவரையிலே, மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மட்டும் தற்போது உள்ளது. எதிர் வருகின்ற காலங்களில், தேவையைப் பொறுத்து புதுக்கோட்டை மாவட்டத் தலைமை மருத்துவமனையிலும் அதைப் பொருத்துவது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோன்று, அவர்கள் இராணியார் மகப்பேறு மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் கருவி வேண்டுமென்று கோரியுள்ளார்கள். இராணியார் மகப்பேறு மருத்துவமனையிலிருந்து 200 மீட்டர் தூரத்திலேயே உள்ள அரசு தலைமை மருத்துவமனையிலே சி.டி. ஸ்கேன் வசதி உள்ளதால் அதையே அவர்களும் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் காலங்களில் தேவைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இராணியார் மகப்பேறு மருத்துவமனைக்கும் அந்த சி.டி. ஸ்கேனை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். மேலும், அவர் முன்வைத்திருக்கக்கூடிய அத்தனை கோரிக்கைகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2013 ஏப்ரல் 26]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான்.

**திரு. கார்த்திக் தொண்டைமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையை இன்று மகத்தான துறையாக மாற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் சார்பிலும், புதுக்கோட்டை மக்களின் சார்பிலும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

*முற்பகல் 11–15*

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். (குறுக்கீடுகள்) என்ன? யாராவது ஒருவர் மட்டும் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சவுந்தரராசன், திரு. பாலகிருஷ்ணன், யாராவது ஒருவர் மட்டும் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாலை மாமல்லபுரத்தில் நடைபெற்ற வன்னியர் சங்க விழாவில் . . . (குறுக்கீடு)

[2013 ஏப்ரல் 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கடிதத்தை இன்று காலை 10¼ மணிக்குத்தான் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள் திரு. பாலகிருஷ்ணன். இன்று காலை 10¼ மணிக்குத்தான் அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கடிதத்தை என் கையில் கொடுத்தீர்கள். 10¼ மணிக்கு கையில் கொடுத்துவிட்டு, இன்றே அதனை raise பண்ணினால் எப்படி? (குறுக்கீடுகள்) விளக்கம் எப்படித் தர முடியும்? (குறுக்கீடுகள்) 10¼ மணிக்கு அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கடிதத்தை கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) அந்தக் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கடிதத்தை நான் அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளேன். அரசிடமிருந்து பதில் வந்தவுடன் நான் அதனை எடுத்துக்கொள்கிறேன். இப்போது அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அரசிடமிருந்து பதில் வந்தவுடன் அதனை நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை நீங்கள் 10¼ மணிக்கு கொடுத்துவிட்டு, 11¼ மணிக்கு raise பண்ணினால் எப்படி? (குறுக்கீடுகள்) அதை அரசுக்கு இப்போதுதான் அனுப்பியிருக்கிறேன். அரசிடமிருந்து பதில் வந்த பிறகு அதை எடுத்துக்கொள்கிறேன். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Unofficial–ஆக எதையும் இங்கே சொல்லமுடியாது. நீங்கள் raise பண்ணியதை அரசாங்கத்திற்கு அனுப்பி, அரசாங்கத்திடமிருந்து வருகின்ற பதிலைத்தான் நான் சபையில் எடுத்துக்கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) நீங்கள் சபையில் raise பண்ணியிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இப்போதுதான் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எல்லாவற்றிருக்கும் ஒரு முறை இருக்கிறது. (குறுக்கீடுகள்) எல்லாவற்றிருக்கும் முறைகள் இருக்கின்றன, விதிகள் இருக்கின்றன. இன்று காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) காலையில்தான் கொடுத்து இருக்கிறீர்கள். 10¼–க்குக் கொடுத்துவிட்டு 11¼–மணிக்கு raise பண்ணினால் எப்படி நான் அதை எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) நான்தான் உங்களிடம் சொல்லிவிட்டேனே? (குறுக்கீடுகள்) நான்தான் முன்பே சொல்லி விட்டேன், அரசிடம் பதிலுக்காக அனுப்பி இருக்கிறேன் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். எடுத்துக்கொள்கிறேன் என்று பேரவைத் தலைவர் சொல்லியதற்குப் பிறகும், நீங்கள் பிடிவாதமாக எழுந்து



2013 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

நின்று கேட்டுக்கொண்டிருந்தால், என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அது சரியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அது வேறு பிரச்சினையாக மாறிவிடும். அரசிடமிருந்து பதில் வரும். பதில் வந்தவுடன் அதனை எடுத்துக்கொள்கிறேன். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் நான் அதை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இன்று மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் ஒரு பிரச்சினை குறித்து கவன ஈர்ப்பு அறிவிப்புக் கடிதங்களைக் கொடுத்து இருக்கின்றார்கள். நீங்கள் அலுவல்களை ஆரம்பித்த பின்னால், 10.00 மணிக்கு பின்னால் அந்தக் கடிதங்கள் உங்களிடம் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. முறைப்படி மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், அரசுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அக்கடிதங்கள் ஆய்வில் இருக்கின்றன. பதில் வந்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்படும் என்பதனை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அவை முன்னவர் சொல்லியிருக்கிறார். அதற்கு மேலேயும் நீங்கள் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அந்தக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறியிருக்கிறார். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) கவன ஈர்ப்புத் தீர்மானமோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமோ ஒரு மணி நேரத்திற்கு முன்பாக நீங்கள் மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்க வேண்டும். அதனை அவர் முறைப்படி அரசுக்கு அனுப்பி, பதில் பெற்று, அவசர முக்கியத்துவம் வாய்ந்தப் பொருளாக இருந்தால், அதனை வாங்கி, உடனடியாக இன்றே இந்த அவையில் எடுத்துக்கொண்டிருப்பார். நீங்கள் சபை ஆரம்பித்தப் பின்னால், 10.03 மணிக்கு மேலேதான் உங்கள் முதல் கடிதமே வந்திருக்கிறது. இரண்டாவது கடிதம் 10.16 மணிக்கு வந்துள்ளது. மூன்றாவது கடிதம் 10.19 மணிக்கு வந்துள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 ஏப்ரல் 26

இங்கு சபை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால், நீங்கள் கடிதம் கொடுத்து, அது உடனடியாக எடுக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அரசின் சார்பில் பதில் வர வேண்டுமல்லவா? மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் அரசிடம் அந்தக் கடிதங்களைக் கொடுத்து, அதற்குரிய பதிலை இங்கு வரவழைத்து, சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற நடைமுறை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமை காக்க வேண்டும். முறைப்படி அரசிடமிருந்து பதில் வந்த பிறகு, உங்களுடைய கவன ஈர்ப்பு சம்பந்தமான அறிவிப்பு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) பதில் வருகிறபோது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. பதில் வரும். (குறுக்கீடுகள்) இப்போது திடீர் என்று raise பண்ணினால், அரசாங்கத்திடம் தற்போது பதில் இல்லை. (குறுக்கீடுகள்) நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னால், (குறுக்கீடுகள்) எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னால், நீங்கள் raise பண்ணுவது சரியில்லை. (குறுக்கீடுகள்) எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்ன பிறகு, அரசின் சார்பில், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், அந்த கவன ஈர்ப்பிற்கு பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்றும் சொல்லிவிட்டார்கள். நானும், திரும்பத் திரும்ப பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நீங்கள் திரும்பத் திரும்ப என்னை வற்புறுத்துவது சரியில்லை. (குறுக்கீடுகள்) முறையாக இந்த மாதிரி கவன ஈர்ப்பு அறிவிப்புகளையெல்லாம், 7 நாட்களுக்கு முன்பாக கொடுக்க வேண்டும் அல்லது அவை தொடங்குவதற்கு முன்னால், குறைந்தது ஒரு மணி நேரத்திற்கு முன்னால் கொடுக்க வேண்டும். நீங்கள் இதை எதையுமே பின்பற்றாமல், 10¼ மணிக்குக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, நீங்கள் raise பண்ணினால் எப்படி? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அரசு ரிக்கார்டுகளில். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11–20

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பொருள் பற்றியும் அரசு எடுத்து,



2013 ஏப்ரல் 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்:]

அந்தப் பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படும்போது உங்களுடைய அரிய கருத்துகள் கேட்கப்படும். அப்போது உங்களுடைய கருத்துகளை நீங்கள் பதிய வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்களும் 10–30 மணிக்குத்தான் அறிவிப்பு கொடுத்தீர்கள். நான் அடுத்த சப்ஜெக்டுக்குப் போய்விட்டேன். நீங்கள் 10–30 மணிக்குக் கடிதம் கொடுத்துவிட்டு உடனே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்பது நியாயமில்லை. உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒத்துழைப்பு கொடுங்கள். அவையை நடத்த ஒத்துழைப்பு கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1624, திரு. ஜேஜி. பிரின்ஸ்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2395, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2531, திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2750, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2857, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3121, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 296, திரு. எஸ்.ஆர். பார்த்திபன்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அரசு மாணவ, மாணவிகள் விடுதிகளில் தரமான உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1732, திரு. அ. சவுந்தரராசன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பூர் தொகுதி, பக்தவத்சலம் காலனி, சர்மா நகர், சாஸ்திரி நகர் பகுதிகளில் வாழும் பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இடுகாட்டுக்குச் செல்ல 6 கிலோ மீட்டருக்கு மேல் போக வேண்டியுள்ளதால், வியாசர்பாடி, மூலக்கடை, கொடுங்கையூர் பகுதியில் இடுகாடு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1848, திரு. வெ. பொன்னுப்பாண்டி.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர், மங்காபுரம் கள்ளர் சீரமைப்புப் பள்ளியைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2118, திரு. ர.ம. பாபு முருகவேல்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் கல்வி





உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2223, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதி, தலைக்காடு அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2438, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள இஸ்லாமிய மக்கள் மத்தியில் அவர்களின் கல்வி, அரசு வேலைவாய்ப்பு, தொழில், சமூக அந்தஸ்து ஆகியவை குறித்து ஆய்வு நடத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2478, திரு. க. பாலகிருஷ்ணன்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர் என்பதை சிறுபான்மையினருக்கான தனி அலுவலராக நியமிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2660, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வீட்டுமனைகள் விலைகொடுத்து வாங்கும் திட்டத்தில் மதிப்பீட்டுத் தொகை மற்றும் கூடுதல் பகுதி ஒதுக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2937, திரு. அ. அஸ்லம் பாஷா.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆம்பூர் தொகுதி, ஆம்பூர் நகரம் பேபி காலனியில்



முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியில் முஸ்லிம்களுக்கு சொந்தமான இடத்தில் மசூதி கட்டுவதற்கு அரசின் அனுமதியும், பாதுகாப்பும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு இந்த மாமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு ஏற்ற வகையில் ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கத்தினை அளிக்கிறேன் என்பதைப் பணிவுடன் தெரிவித்துகொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

---

@ 182 முதல் 247 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக பதினான்காவது சட்டமன்றப் பேரவையின் 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீதான பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பங்குகொண்டு பேச எனக்கு வாய்ப்பளித்த சட்டமன்றப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் புரட்சிக் கலைஞர் திரு. கேப்டன் அவர்களுக்கு நன்றிகூறி, எனது பேச்சைத் துவக்குகின்றேன்.

இந்திய நாட்டில் பல 100 ஆண்டுகளாக மனிதர்கள் ஜாதிவாரியாக பிரிக்கப்பட்டு சமூகம், வாழ்க்கை, கல்வி, தொழில் ஆகியவற்றில் பாகுபாடுகள் உருவாக்கப்பட்டதால் பிற்படுத்தப்பட்ட மக்கள் அடித்தளத்தில் ஒதுக்கப்பட்டார்கள். அதற்கு இட ஒதுக்கீடு ஒன்றுதான் தீர்வு என்ற அடிப்படையில் 1921 ஆம் ஆண்டு முதல் இட ஒதுக்கீட்டுக் கொள்கை நம் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் என அனைத்து சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை சமூக மற்றும் பொருளாதாரப் பின்னடைவிலிருந்து காத்திடவும், கல்வி, வேலைவாய்ப்பில் உரிய பங்களிப்பைப் பெற்றிடவும் இந்த இட ஒதுக்கீடுதான் அவசியமாகின்றது. பிறமலைக் கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையை மேம்படுத்தும்பொருட்டு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கீடு அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது. 2011–2012 இல் ரூ.5,165.49 இலட்சமும், 2012–2013 இல் ரூ.5,366.68 இலட்சமும், 2013–2014 இல் ரூ.6,981.95 இலட்சமும் என நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது. மாணவர் சேர்க்கை அதிகரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், இச்சமுதாய மக்களின் நிலை மேம்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகவும் ஆங்கில வழிக் கல்வியுடன் பள்ளிகளின் எண்ணிக்கையும் 285–லிருந்து 289 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அனைத்துப் பள்ளிகளுக்கும் வழங்கப்படும் சிறப்பு ஊக்கத் தொகை உள்ளிட்ட அனைத்து உதவித் திட்டங்களும் இப்பள்ளிகளில் பயில்கின்ற அனைத்து மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஆனால், 2011–2012–ல் 39,554 ஆகவும், 2012–2013–ல் 37,556 ஆகவும், 2013–2014–ல் 34,749 ஆகவும், படிப்படியாக ஒவ்வோர் ஆண்டும் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் சுமார். . .



முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கில வழிக் கல்விமீது ஏற்பட்ட மோகத்தினால் அத்தகைய கல்வியைப் பயில்வதற்காக நகரத்திற்குச் செல்கின்றார்கள். அதனைக் குறைக்கும்வண்ணம் எல்.கே.ஜி. முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழிக் கல்வி முறையும் மாண்புமிக அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றவகையில், பல ஏற்பாடுகள் மாண்புமிகு அம்மா அவர்களால் செய்துவரப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.1,800 இலட்சம் என நிதியை அதிகப்படுத்தியும், சுமார் 5,000 மாணவர்கள் குறைந்துள்ளனர் என்பது அதிர்ச்சி அளிக்கக்கூடியதாக இருக்கின்றது.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பொருளாதார மேம்பாட்டிற்காக, விலையில்லா தையல் இயந்திரங்கள், விலையில்லா சலவைப் பெட்டிகள் போன்றவை வழங்கப்படுகின்றன. இதன் ஆண்டு வருமான உச்சவரம்பு கிராமப் பகுதிகளுக்கு ரூ.40,000 எனவும், நகரப் பகுதிகளுக்கு ரூ.60,000 எனவும் உள்ளது. அனைத்துக் கடன் திட்டங்களிலும் மத்திய அரசு, கடன் உதவித் தொகையை கிராமப்புறங்களுக்கு ரூ.40,000–லிருந்து ரூ.81,000 ஆகவும், நகர்ப்புறங்களுக்கு ரூ.55,000–லிருந்து ரூ.1,03,000 ஆகவும், 6–11–2012 முதல் உயர்த்தியுள்ளது. மத்திய அரசினுடைய வருமான உச்சவரம்பையே இதற்கும் தமிழக அரசு கடைப்பிடிக்க வேண்டும். அதேநேரத்தில், மோட்டார் பொருத்திய தையல் இயந்திரங்களும், மின்சாரத்தினால் இயக்கக்கூடிய சலவைப் பெட்டிகளையும் விலையில்லாமல் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தின் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தையல் இயந்திரங்களுடன் 590 எம்பிராய்டரி தையல் இயந்திரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தில் 76 பொது சொத்துக்கள் மற்றும் அறக்கட்டளைகள் இருப்பதாகவும், அதன் விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும், 3 ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பொதுச் சொத்துக்கள் அறக்கட்டளைகள் முறையாக இயங்குகின்றனவா, அதன்மூலம் வன்னியர் இன மக்கள் பயன் பெறுகிறார்களா? இல்லை தனி நபர்கள் பயன்பெறுகிறார்களா போன்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

வீட்டு மனைகள் விலை ஏதுமின்றி வழங்கும் திட்டத்தில் 2010–2011–ல் 1,491 பேர்களுக்கும், 2011–2012–ல் 1,437 பேர்களுக்கும், 2012–2013–ல் 1,452 பேர்களுக்கும் வழங்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்றன. மேற்படி திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் 1,500 நபர்களுக்கு மட்டுமே வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. இந்த எண்ணிக்கையை உயர்த்தினால் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் பல பேர் பயனடைவார்கள். தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் இலட்சக்கணக்கானோர் புறம்போக்கு நிலத்தில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கெல்லாம் இத்திட்டதின்மூலம் வீட்டுமனைகளை விலை ஏதுமின்றி வழங்க அரசு முன்வர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களின் ஆண்டு வருமானம் ரூ.40,000/–க்கு மிகாமலும், நகர்ப்புறங்களில்



வாழ்கின்ற மக்களின் ஆண்டு வருமானம் ரூ.60,000/–க்கு மிகாமலும் உள்ள மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. அந்தவகையில், மாநகராட்சியில் 1 சென்ட்டும், நகர்ப்புறத்தில் 1½ சென்ட்டும், கிராமப் பகுதிகளில் 3 சென்ட்டும் வீட்டுமனைப் பட்டாக்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி வழங்கப்படுகின்றன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிளா சம்ரிதி யோஜனா மற்றும் சிறு வணிக திட்டத்தின்கீழ் 2011–2012–ல் 21,075 பயனாளிகளுக்கு ரூ.3,877.47 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 2012–2013–ல் 17,448 பயனாளிகளுக்கு ரூ.4,043.63 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. பயனாளிகள் எண்ணிக்கை சுமார் 4,000 குறைந்துள்ள நிலையில், வழங்கப்படும் கடன்தொகை மட்டும் அதிகரித்துள்ளது. பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வழங்கப்படும் கடன் தொகையும் அதிகரித்தால்தான் இத்திட்டம் சிறப்பாக நடக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயனாளிகள் எண்ணிக்கை குறைந்து, வழங்கப்படும் கடன் தொகை மட்டும் அதிகரித்துள்ளது என்று கூறுகிறார்கள். ரூ.30,000 என்று இருந்த கடன் தொகையை ரூ.50,000 ஆக உயர்த்திக் கொடுத்துள்ளோம். இதனால், பயனாளிகளின் எண்ணிக்கை குறைந்து கடன் தொகை அதிகரித்துள்ளது. முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2011–2012–ல் மிக அதிகமான அளவிற்கு நாம் கடன் தொகையினை வழங்கியுள்ளோம் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. புது டில்லியிலுள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திற்கு 2012–2013 ஆம் ஆண்டு, 42,160 பயனாளிகள் பயனடையும்வகையில், ரூபாய் 5,000 இலட்சம் கடன் உதவி கேட்கப்பட்டது. ஆனால், 2013–2014 இல் 30,000 பயனாளிகள் பயனடையும்வகையில், ரூபாய் 5,500 இலட்சம் கடன் உதவி கேட்கப்பட்டுள்ளது. சுமார் 12,000 பயனாளிகள் குறைக்கப்பட்டு ரூபாய் 500 இலட்சம் கடன் தொகை மட்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது ஏன் என்று தெரியவில்லை.

சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக் குறவர் நல வாரியம் ஆகியவற்றில் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறித்த சர்ச்சை கடந்த பட்ஜெட் கூட்டத்தொடரில் தே.மு.தி.க.–வினரால் இம்மாமன்றத்தில் எழுப்பப்பட்டது. ஆனால், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் நல வாரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்படாமல் மறைக்கப்பட்டுள்ளது. அதற்கான விளக்கத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் தெரிவிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்மரபினர் நல வாரியத்தினுடைய உறுப்பினர்களின் பதவிக் காலம் நேற்று 25–4–2013 அன்றுதான் நிறைவு பெற்றது. ஆகவே, நேற்றுவரை சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர்களின் பதவி இருந்தது. இதன் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நல வாரியம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதற்கான விளக்கத்தை கொடுத்திருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி வேறு துறைகளுக்கு செலவிடப்படாமல் அந்தந்தத் துறைகளுக்கே செலவிடப்படவேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு ஒதுக்கப்படும் நிதி அந்தத் துறைக்குத்தான் செலவிடப்படும். வேறு துறைகளுக்கு அதைச் செலவிட முடியாது. அப்படி செலவும் செய்ய மாட்டோம் என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்வி கற்று, போதிய வேலைவாய்ப்பு இல்லாமல், ஏதாவது தொழில் தொடங்கி வாழ்வில் முன்னேறலாம் என்று வங்கிகளை அணுகினால், அங்கு சொத்து ஜாமீன் அல்லது சிபாரிசு மற்றும் கொடுக்க முடியாத ஆவணங்களைக் கேட்டு கடனைத் திருப்பிக் கட்ட போதிய வசதி இல்லை என்று அலைக்கழித்து திருப்பி அனுப்பப்படுகிறார்கள். இதனால் இச்சமூகத்தைச் சேர்ந்த மக்கள் வங்கிகளுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தனிக் கடன் வழங்கும்போது surety கேட்பார்கள். ஆனால், சிறு கடன் திட்டத்தில் surety தேவையில்லை. அவர்கள் அந்தத் திட்டத்தின்மூலம், சுய உதவிக் குழுக்கள்மூலம் அந்தக் கடனைப் பெறலாம். மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு 50,000 ரூபாய் வீதம் 10 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. வட்டியும் 4 சதவீதம்தான். அதுபோன்று ஆண்களுக்கு வட்டி வெறும் 5 சதவீதம்தான். இதற்கு surety கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நிலம் வழங்கும்பொருட்டு, தனியார் நிலங்களைக் கையகப்படுத்த நிதியொதுக்கீடு செய்யப்படுகின்றது. இத்திட்டத்தின்கீழ் தனியார் நிலங்களை வாங்கும்போது நில உரிமையாளர்களுக்கு அரசின் மதிப்பீடு விலை என்ற அடிப்படையில் குறைவான தொகையே வழங்கப்படுகிறது. நில மதிப்பு குறைவாக உள்ளதால் நிலம் அளித்தவர்கள் வழக்கு மன்றங்களுக்குச் செல்கிறார்கள். வழக்குகள் முடிவதற்கு காலதாமதமாவதால் நிலங்களை இத்துறையால் விலைக்கு வாங்க முடியவில்லை. எனவே, இத்திட்டம் வெற்றி பெற நிலத்தின் வெளி மார்க்கெட் விலையை மதிப்பிட்டு நில உரிமையாளர்களுக்கு அதற்கு ஈடான தொகையைக் கொடுத்து அரசு அந்நிலங்களைக் கையகப்படுத்தவேண்டும். இத்திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துவதன்மூலம்தான் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தேவையான வீட்டுமனைகளை முழுமையாக வழங்க முடியும். இந்த ஆண்டு, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தின் சந்தை மதிப்பு அல்லது வழிகாட்டி மதிப்பு ஆகியவற்றில் எது குறைவோ அதற்கு 150 சதவீதத்திற்கு மிகாமல் நில மதிப்பு நிர்ணயம் செய்யப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்டக் குழுவின்மூலம் நில உரிமையாளர்களிடம் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, நிலத்தைக் கிரயமாகப் பெற்று பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகிலேயே பேசிக்கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் கிண்டல் பண்ணுகிறார்கள். Disturbance–ஆக இருக்கிறது. என் பேச்சுக்கு இடையூறு செய்கிறார்கள். இது முறையில்லாமல் இருக்கிறது. சிரித்துக்கொண்டு நக்கல் செய்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னைப் பார்த்து பேசுங்கள்.

**திரு. க. தினகரன்:** இந்த ஆண்டு பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரைச் சேர்ந்த மாணவ, மாணவியர் தங்கள் கல்வியினைத் தொடர, மொத்தம் 1,204 விடுதிகள் இயங்கி வருவதாக அரசு குறிப்பிட்டுள்ளது. இந்த விடுதிகளில் சேர, அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூபாய் 1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டுமென்று உள்ளதை, ரூபாய் 2 இலட்சமாக உயர்த்தி அறிவித்து, மாணவ, மாணவியருக்கு இடம் அளிக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் கல்வி பயில வருமான உச்சவரம்பு தடையாக இருக்காது. ஆகவே, இதை உயர்த்த அரசு முயற்சி எடுக்கவேண்டும். மேலும் இன்று இருக்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–35

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து குழந்தைகளும் கல்வி கற்கவேண்டும், அவர்களுக்கு எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக அனைத்துப் பகுதிகளிலும் விடுதிகளை ஆரம்பித்து, மாணவ, மாணவியருக்கு உதவி செய்து வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டில் இதுவரை எப்போதும் இல்லாத அளவிற்கு ஆட்சிக்கு வந்த 13 மாத காலத்திற்குள் 56 விடுதிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் ஒவ்வொரு விடுதிகளிலும் 50 மாணவர் மாணவியரைத்தான் சேர்ப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு, ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவர், மாணவியரைச் சேர்ப்பதற்கு ஆணையிட்டதோடு, இன்னும் தேவைப்பட்டால், மேலும் 10 சதவீதம் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் ஆணையிட்டிருக்கிறார்கள். ஆக ஒவ்வொரு விடுதியிலும் 110 மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள்.

வருமான வரம்பு ஒரு இலட்ச ரூபாயாக இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் அனைவரும் விடுதியில் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக, வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உங்கள் உரையை ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** இப்போதுதான் ஆரம்பித்திருக்கிறேன். இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும், இன்று இருக்கும் விலைவாசி உயர்வில் விடுதிகளில் தங்கிப் படிக்கும் கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூபாய் 750–ம், பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ மாணவியருக்கு ரூபாய் 650–ம் மாதாந்திர உணவுக் கட்டணமாக வழங்கப்படுகிறது. அது போதாது. இதை உயர்த்தி கல்லூரி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்பேற்ற பிறகுதான், இந்த உணவுக் கட்டணத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு உயர்த்தி கொடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால், பள்ளி விடுதிகளில் உணவுக் கட்டணம் ரூபாய் 450–ஆக இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் 650–ஆக உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி விடுதிகளில் ரூபாய் 550–ஆக இருந்த உணவுக் கட்டணத்தை ரூபாய் 750–ஆக உயர்த்திக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய தயவால் இன்று விடுதிகளில் உள்ள மாணவ, மாணவியருக்கு மிகவும் தரமான, சுவையான, மிகவும் அற்புதமான உணவு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** இன்னும் கொஞ்சம்தான் இருக்கிறது. நான் கேட்டது அவர்களுடைய செலவுத் தொகையைப் பற்றி கேட்டிருந்தேன். அதைப்போல், விலைவாசியைக் கருத்தில்கொண்டு, மாதாந்திர பலவகை செலவினக் கட்டணத்தை உயர்த்தி கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூபாய் 150–ம், பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூபாய் 100–ம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 2012–2013 ஆம் ஆண்டின் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் மாவட்ட வாரியாக விடுதிகளின் விவரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் மொத்த விடுதிகள் 1,266 என்று உள்ளது. 2013–2014 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் 1,294 விடுதிகள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. இந்த ஓர் ஆண்டில் மட்டும் 28 விடுதிகளை ஆரம்பித்துள்ளீர்கள். அது போதாது. எனவே, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப புதியதாக விடுதிகள் கட்டப்படவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டில் உள்ள மொத்த விடுதிகளின் எண்ணிக்கை 1,294. அதில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மூன்றாவது முறையாக ஆட்சிப்பொறுப்பேற்றவுடன் அவர்களுடைய இந்தப் பொற்கால ஆட்சியில், இரண்டு ஆண்டுகளில் ஓர் ஆண்டிற்கு 28 வீதம் 58 விடுதிகளை ஆரம்பித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 56 விடுதிகளிலுமே 100 மாணவ, மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். இதற்கு முன்னால் வெறும் 50 மாணவ, மாணவியர்தான் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி, 100 மாணவ, மாணவியர் சேர்த்துக்கொள்ளப்பட்டு, மேலும் தேவைப்பட்டால், 10 சதவீதம் மாணவ, மாணவியர் அதிகமாக சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** பழைய விடுதிகள் போதிய பராமரிப்பில்லாமல் உள்ளன. ஆகவே, அவற்றைப் பராமரித்து புதிய விடுதிகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சூலூரில் மாணவர்களுக்கு விடுதி உள்ளது. ஆனால், மாணவியர் தங்கிப் படிப்பதற்கு ஒரு விடுதிகூட இல்லை. ஆகவே, சூலூரில் பள்ளி மாணவியர் விடுதி ஒன்று கட்ட அரசு ஆவன செய்யவேண்டும். கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் ஒழுக்கம், பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலன் கருதி, கல்லூரி மற்றும் பள்ளி வளாகத்திற்குள்ளேயே விடுதிகள் கட்டப்படவேண்டும். அப்படி கட்டப்படும் விடுதிகள் எதிர்காலத்தில் அதிகரிக்கவிருக்கும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப, இப்போதே தகுந்த இடவசதியுடன் கட்டப்படவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவியருக்கான விடுதிகள் முடிந்தவரை அங்குள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஆகியோர் அடங்கிய குழு தேர்வு செய்கின்ற இடங்களில்தான் கட்டப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியில்கூட விடுதி கட்டப்பட வேண்டுமென்று கேட்டுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் யார் கேட்கின்றார்கள் என்பதைப் பற்றி கவலைப்படுவதில்லை. பயனாளிகள் யார் என்பதை அறிந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டங்களை அறிவிக்கின்றார்கள். எனவே, விடுதிகள் பாதுகாப்பான இடங்களில்தான் அமைக்கப்படுகின்றன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உரையை முடியுங்கள்.



**திரு. க. தினகரன்:** விடுதிகளில் அடிப்படை வசதிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. தண்ணீர் சரிவர கிடைப்பதில்லை. தற்போது மின்வெட்டுப் பிரச்சினை இருப்பதால், விடுதிகளில் சூரிய ஒளி மின் சக்தி வசதியை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னமும் எந்த விடுதியையும் சென்று பார்க்கவில்லை என்று நினைக்கின்றேன். ஏனென்றால், இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி புதிதாக அமைக்கப்படுகின்ற விடுதிகள் எல்லாம் மிகவும் நவீன வசதிகளுடன் (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, மாணவ, மாணவியர் குடிப்பதற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், வெந்நீர் வைப்பதற்காக சோலார் ஹீட்டர் போன்ற வசதிகளுடன் அமைக்கப்படுகின்றன. புதிய விடுதிகளில் மட்டுமல்லாமல், பழைய விடுதிகளிலும் சூரிய ஒளி சக்திமூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களை அழைத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையுடன் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, அனைத்து விடுதிகளும், பாதுகாக்கப்பட்ட குடிநீர், சோலார் ஹீட்டர், சோலார் எனர்ஜி போன்ற வசதிகள் மட்டுமல்லாமல், விடுதிகளுக்கு வேண்டிய மிக்சி, அருமையான சமையற்கூடம், வெளியே கார்டன், சுத்தமான, பாதுகாப்பான சூழ்நிலை (environment) (மேசையைத் தட்டும் ஒலி) ஆகியவற்றுடன் அவை செயல்படுகின்றன. அதோடு விடுதிகளில் தற்போது தரமான, சுவையான உணவு, வாரத்திற்கு 5 நாட்கள் முட்டைகள், முதல் வாரம் மற்றும் மூன்றாம் வாரத்தில் ஆட்டு இறைச்சி, இரண்டாவது வாரம் மற்றும் நான்காவது வாரத்தில் கோழி இறைச்சி (மேசையைத் தட்டும் ஒலி), காலையில் இட்லி, பொங்கல், ரவா கிச்சடி, சாம்பார், சட்னி, மதியம் சாப்பாடு, சாம்பார், ரசம், மோர், பொரியல், (மேசையைத் தட்டும் ஒலி) முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப் பழங்கள், மாலையில் சுண்டலுடன் சுக்குமல்லி காபி, தேநீர் (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அனைத்து வகையான சத்துள்ள உணவு வகைகளும் செய்து

கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி விடுதிகளில் அருமையான, சுவையான சாப்பாடு கொடுக்கப்படுகின்றது. நான் எந்த விடுதிக்குச் சென்றாலும் சாப்பிடாமல் வருவதில்லை என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** நான் கேட்டது சூரிய ஒளி மின் சக்தியை.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** அங்கே போய்ப் பார்த்தால் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், தங்களுக்கு என்ன வேண்டும்? (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரிகளில் விடுதிகளைப் பழுதுபார்க்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். கல்லூரிகளுக்கான விடுதிகளைப் பொறுத்தவரையில், ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த விடுதி, பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதி, முதன்மை விடுதி என்று மூன்று வகையான விடுதிகளை நடத்தி வருகிறோம். அதன் அடிப்படையிலே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக அவற்றிற்கு நிதிகள் ஒதுக்கப்பட்டு, பராமரிப்புப் பணிகள், உணவு வழங்குதல் போன்றவை செய்யப்பட்டு வருகின்றன. இதற்கு மேலாக, இந்த ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த விடுதிகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள் போன்றவற்றை வாங்குவதற்கும், அதுவும் குறிப்பாக, பெண்கள் விடுதிகளில் கழிப்பறைகளை போதுமான அளவு ஏற்படுத்தித் தருவதற்காகவும், உயர் கல்வித் துறை மூலமாகவும் கூடுதலாக 100 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, மேற்படி வசதிகளை ஏற்படுத்தி வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு சுத்தமான தண்ணீரை வழங்கும்பொருட்டு, விடுதிகளிலுள்ள தண்ணீர்த் தொட்டி பைப்லைன்கள் பழுதுபட்டிருந்தால், அவற்றை மாற்றி அமைப்பது, அங்கே கழிப்பறைகள் ஏதாவது அசுத்தமான முறையில் இருந்தால்



அவற்றைச் சீரமைப்பது போன்ற அடிப்படைத் தேவைகளைப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலமாக மட்டுமல்லாமல், உயர் கல்வித் துறை மூலமாகவும், இதுவரையில் இல்லாத அளவிற்கு உயர் கல்வித் துறைமூலமாக 100 கோடி ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிப்பதற்கு மேல்நிலைத் தொட்டியிலிருந்து நேரடியாகக் கொடுக்காமல் R.O. water–ரே கொடுக்கிறோம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்கான அனைத்து வசதிகளும் எல்லா விடுதிகளுக்கும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், என்னவென்று சொல்லுங்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே உணவு வகைகளை அடுக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்த நேரத்தில், சட்டமன்றத்தில் இருக்கிறோமா அல்லது ஒரு நட்சத்திர ஹோட்டலில் அமர்ந்திருக்கிறோமா (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மனநிலை எங்களுக்கு வந்துவிட்டது. 1½ மணிக்கு உணவு வகைகளைப் பற்றி அடுக்கிக்கொண்டே போனதால், பசியும் வந்துவிட்டது. இந்த உணவு வகைகளில் அவித்த முட்டை கொடுக்கிறார்கள். தினந்தோறும் அவித்த முட்டைதான் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். சத்துணவு குழந்தைகளுக்குக் கொடுப்பதைப் போல (குறுக்கீடு) சத்துணவு குழந்தைகளுக்கு விதவிதமான உணவு வகைகளைத் தருவதாக நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல இந்த முட்டையிலும் மிளகு போட்ட முட்டை, மசால் முட்டை என்று வகை வகையான முட்டைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

ஒவ்வொரு நாளும் விடுதிகளில் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே தங்கியிருக்கும் மாணவ, மாணவியருடைய விருப்பத்திற்கேற்ப, அவர்கள் எந்த மாதிரியாக விரும்புகின்றனரோ, அந்த மாதிரி அவர்களுக்குச் செய்து கொடுக்க சமையல்காரர்கள் தயாராக இருக்கின்றார்கள். சத்துணவில் மாண்புமிகு அம்மா அவர்கள் அளிக்கின்ற உணவில் பல விதங்களைப் பார்க்கலாம். நானே என்னுடைய வாழ்க்கையில் இதுவரைக்கும் அதுபோன்று சாப்பிட்டதில்லை. அந்த அளவிற்கு ருசியாக இருக்கிறது. அதுபோல முட்டையையும் ஆம்லெட், மிளகு முட்டை, மிளகாய் முட்டை, ஆஃப் பாயில், ஃபுல் பாயில் போன்று எல்லா வகையிலும் தயாரித்துத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடு)

முற்பகல் 11–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் விடுதிகளிலே அளிக்கப்படக்கூடிய உணவு வகைகளைப் பற்றிப் பேசும்போது மீண்டும் மாணவனாக விடுதிக்குச் செல்லலாமா என்ற ஒரு எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அதே நேரத்திலே, நம்முடைய கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளில் குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்திலே, இன்வர்டர் வைத்திருக்கிறார்கள். விடுதிகளில் மின்சாரத் தடை ஏற்படும்போது மாணவர்கள் தடையில்லாமல் படிப்பதற்காக இன்வர்டர் வைத்திருக்கிறார்கள், பரிட்சார்த்தமாக அதைச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த வசதி பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் அனைத்திற்கும் செய்யப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மாணவர்கள் நலனிலே அக்கறை உள்ள இந்த அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் என்ன வசதி தேவையோ அதைச் செய்வதில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் முனைப்பாக இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து விடுதிகளுக்கும் இன்வர்டர் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதைப் பரிட்சார்த்தமாக செய்துகொண்டிருக்கிறார்கள். உடனே அது செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மாண்புமிகு அம்மா அவர்கள் சூரிய ஒளியுடன்கூடிய மின் வசதி செய்து கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அது வந்துவிட்டால் இன்வர்டர் தேவையே ஏற்படாது என்று நினைக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்லூரிகளில் இருக்கக்கூடிய விடுதிகளுக்கு இன்வர்டர் கொடுப்பதைப் பரவலாக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சூரிய சக்தி கொள்கை ஒன்றை வைத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில் 3,000 மெகாவாட் சூரிய சக்தியைக் கொண்டு மின்சாரம் தயார் செய்ய வேண்டும் என்று ஒரு கொள்கையை வெளியிட்டிருக்கிறரர்கள். அந்தக் கொள்கையின் அடிப்படையில் அரசுக் கட்டடங்கள், குறிப்பாகக் கல்லூரிகளில் 3 சதவீதம் மின்சாரத்தை சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி தயாரித்து கல்லூரிகளிலும், கல்லூரி விடுதிகளிலும் பயன்படுத்துவதற்கான பாலிசி வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மாவினுடைய அந்த நோக்கம் உயர் கல்வித் துறையில் தற்போது நடைமுறையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் அவர்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் வாரிய சொத்துக்களை ஒருசாரார் மட்டுமே அனுபவித்து வருகின்றார்கள். ஆகவே, சிறுபான்மை இன மக்களின் வளர்ச்சிக்கு உதவும்பொருட்டு வக்ஃபு வாரிய சொத்துக்களின் வரவு–செலவை அரசு கண்காணித்து சிறுபான்மை இன மக்களின் வளர்ச்சிக்கு இத்தொகை செலவழிக்கப்பட வேண்டும். வக்ஃபு வாரியத்திற்கான நிருவாகிகள் நியமனத்தில் தவறு நடந்துள்ளதாகச் சொல்லி, நீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது. அந்தத் தவறுகளைத் திருத்தி வக்ஃபு வாரியத்திற்கு உடனடியாக நிருவாகிகளை நியமிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரியத்தில் எந்தத் தவறும் நடைபெறவில்லை. உறுப்பினர்களை நியமனம் செய்வதில் கொஞ்சம் மாற்றம் தேவை. அதைச் செய்துவிடுவார்கள். அதேபோன்று, அதனுடைய நிதி மற்றும் கணக்கு வழக்குகள் எல்லாம் ஒழுங்காகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன, சீராகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் சிறுபான்மையின மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில்தான் வக்ஃபு வாரியம் புத்துணர்ச்சி பெற்று, புத்துயிர் பெற்று விளங்குகின்றது. வஃபு வாரிய சொத்துக்கள் பாதுகாக்கப்படுகின்றன. அபகரிக்கப்பட்ட வக்ஃபு வாரிய சொத்துக்களெல்லாம் மீட்கப்படுகின்றன என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன் உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தொட்டிய நாயக்க சமூகத்தின் உட்பிரிவுகளையெல்லாம் ஒன்று சேர்த்து சீரமைப்பு வாரியம் உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது. உட்பிரிவுகளில் ஒன்றான கொல்லவார் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள் நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற



மாவட்டங்களில் வசித்து வருகின்றனர். இவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்கள் தொட்டிய நாயக்கர்கள் பிரிவிற்கு உட்பட்டவர்கள் ஆவார்கள். எனவே இவர்களையும் பின்தங்கிய வகுப்பில் சேர்க்கவேண்டும். கிறித்தவ மக்களின் வளர்ச்சிக்காக சிறுபான்மை ஆணையம் செயல்பட்டு வருகின்றது. இதற்குத் தலைவராக ஒரே நபர் இரண்டு முறை தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் அதிக அளவில் கிறித்தவ மக்கள் வசிக்கும் மாவட்டங்கள் பல உள்ள நிலையில் சென்னையைச் சேர்ந்த ஒருவருக்கே மீண்டும் மீண்டும் பதவி கொடுப்பது மற்ற மாவட்டங்களைப் புறக்கணிப்பது போலாகும். ஆகவே, இவ்வரசு அனைத்து மாவட்டங்களுக்கும் இப்பதவியைச் சுழற்சி முறையில் அளிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கு என்று ஒரு தலைவரை நியமித்தால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சில பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்த மக்களைப் பற்றிச் சொன்னார்கள். பிற்படுத்தப்பட்டோருக்கென ஆணையம் ஒன்று செயல்படுகின்றது. அந்த ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் அதனுடைய செயல்பாடுகள் இருக்கும். அதுபோல் ஆணையத்தின் தலைவராய் ஒரே நபரை மீண்டும், மீண்டும் நியமிப்பதாகக் கூறியுள்ளார்கள். அனைத்துப் பகுதிகளுக்கும் ரெப்ரசன்டேஷன் கொடுத்துதான் அந்த ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையம் இன்று சிறப்பாகச் செயல்பட்டுவருகின்றது. எந்த வகையிலும் குறைவு இல்லாமல் அந்த ஆணையம் சிறப்பாக தன்னுடைய பணியைச் செய்துவருகிறதென்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். நான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலைவர் வேண்டும் என்று கேட்டிருக்கின்றேன். மேலும் பெரும்பாலான

மாவட்டங்களில் சிறுபான்மை ஆணையத்தின் அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இல்லை. ஆகவே, இவ்வலுவலகங்களை அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலேயே ஆரம்பிக்க. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சிறுபான்மை ஆணையத்தினுடைய தலைவர், எங்களுடைய சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்தவர், ஒரு பேராயர். ஆகவே, அவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அதுமட்டுமல்லாமல், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் எஸ்றா சற்குணம் என்பவர் மூன்று முறை அந்த ஆணையத்தின் தலைவராகப் பதவி வகித்தார்கள் என்பதை உங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு தலைவர் வேண்டும் என்றுதான் சொல்கிறேன். ஆகவே, சிறுபான்மை ஆணைய அலுவலகங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலேயே அமைக்கப்பட வேண்டும். கிறித்தவர்களின் புனிதத் தலமான ஜெருசலேம் நகருக்கு அரசு மானியத்துடன் சென்று வர ஆண்டுக்கு 500 நபர்களை அனுப்பி வருகின்றது. அதை ஆயிரம் நபர்களாக உயர்த்த ஆவன செய்ய வேண்டும். இந்த மானியத்தைக் கொடுக்கும் அரசு அதனுடைய நிருவாகங்களைக் கவனிப்பதற்குக் குழுக்களை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையின மக்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும்



இல்லாத அளவுக்கு கிறித்தவர்களும் ஜெருசலேம் செல்வதற்கு மானியத்தை அளிக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலேயும் இதுபோன்ற உதவி கிடையாது. இத்தகைய ஒரு திட்டமும் கிடையாது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் முதன்முதலாக இதுபோன்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை ஆரம்பித்து, கிறித்தவர்கள் ஜெருசலேம் செல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதற்கு தாங்கள் நன்றி சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஜெருசலேம் கமிட்டிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த எனக்குத் தலைவர் பொறுப்பு கொடுத்து அலங்கரித்து இருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தை 2012–2013–ல் அறிவித்த பிறகு, 2011–ஆம் ஆண்டையும் சேர்த்து நாங்கள் ஆயிரம் நபர்களை அனுப்பியிருக்கின்றோம். கடந்த ஆண்டையும் சேர்த்து இரண்டு ஆண்டுகளுக்கு ஆயிரம் நபர்களுக்குரிய அந்தத் தொகையை அம்மா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு சிறுபான்மையின மக்களுக்காகப் பாடுபடுகிற ஒரே தலைவர் தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் இதுவரை எந்த மாநிலத்திலும் செய்திடாத சாதனையை சிறுபான்மையின மக்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** அந்த 500 பேர்களை அனுப்பியதற்கு நன்றி. நான் ஆயிரமாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. க. தினகரன்:** முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்குப் பயன்படும்வகையில் ஆண்டுதோறும் மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்கின்றது. ஆனால் இத்தொகை இச்சமுதாயத்திற்குச் சரியாகக் கிடைப்பதில்லை. காரணம், உதவித் தொகை பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்தான். அதனால் ஒவ்வோர் ஆண்டும் ஒதுக்கப்படும் நிதி பல்வேறு நடைமுறைச் சிக்கல்களின் காரணமாக சில கோடி ரூபாய்கள் மட்டும் பயன்பாட்டுக்கு வந்து, மீதமுள்ள தொகை முழுவதும் மத்திய அரசுக்கே திரும்பி விடுகின்றது. ஆகவே, நடைமுறைச் சிக்கலை எளிமைப்படுத்த மத்திய அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2012–2013 ஆம் ஆண்டில் 1 இலட்சத்து 96 ஆயிரத்து 314 முஸ்லிம் மாணவ, மாணவிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 40 கோடியே 67 இலட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் தொகைக்கு விண்ணப்பித்த அனைத்து முஸ்லிம் மாணவ மாணவியருக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 4. அறிவிப்பு

### பேரவைச் செய்தியாளர்கள் மாடம் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்குப் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செய்தியாளர்கள் மாடம் அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டுள்ள செய்தியாளர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணைப்படி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படுவதுபோன்று, இந்த ஆண்டும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமன்ற பேரவைச் செயலக சட்டமுன்வடிவுப் பிரிவு–2–லிருந்து இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

## 3. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், அவ்வளவுதான் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், நீங்கள் அரை மணி நேரத்திற்குமேல் பேசியிருக்கிறீர்கள். இப்படி நீங்கள் செய்வது கொஞ்சம்கூட முறையல்ல. உரையை முடியுங்கள் என்று சொன்னால் நீங்கள் பேசிக்கொண்டேயிருந்தால் எப்படி? திரு. க. தினகரன், நன்றி சொல்லி உட்காருங்கள்.

**திரு. க. தினகரன்:** மேலும், ஆண்டுதோறும் முஸ்லிம் இன மக்கள் ஹஜ் பயணம் சென்று வர குலுக்கல் முறையிலே ஏற்பாடு செய்து வருகின்றது. கடந்த வருடம் 3,620 பேரும், இந்த ஆண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். இல்லையென்றால் நான் வேறு உறுப்பினரைக் கூப்பிட

வேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் செய்வது முறையல்ல. அரை மணி நேரத்திற்குமேல் நீங்களே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டாமா? உட்காருங்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

முற்பகல் 11–55

**திரு. க. தினகரன்:** அதாவது, எதிர்க்கட்சி உறுப்பினர் பேசும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தினகரன், உறுப்பினர் பேசும்போது அமைச்சர்களின் குறுக்கீடு இருக்கத்தான் செய்யும். குறுக்கீடு வராமல் பேசுவதற்குக் கற்றுக்கொள்ளுங்கள்.

**திரு. க. தினகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். சூலூர் தொகுதியில் முதியோர் உதவித் தொகை விண்ணப்பங்கள், குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பங்கள், பட்டா மாறுதல், பட்டா வேண்டி விண்ணப்பங்கள் அதிகளவில் வந்துள்ளன. ஆனால் அத்தாலுகா அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் மக்கள் அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர். ஆகவே, கூடிய விரைவில் பணியாளர்களை நிரப்பி அனைத்துப் பணிகளையும் விரைவாக முடித்திட அரசு ஆவன செய்ய வேண்டும்.

சுல்தான்பேட்டை ஒன்றியம், செஞ்சேரிமலையில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. அதை அரசு மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் J. கிருஷ்ணாபுரம், கள்ளப்பாளையம், கம்பாளப்பட்டி, வடவள்ளி போன்ற சுல்தான்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் இயங்கும் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

சூலூர் வட்டம் தொடங்கப்பட்டு நான்கு வருடங்கள் ஆகியும் கருவூலம் தொடங்கப்படவில்லை. புதிதாக அமையவுள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்திலேயே சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





சூலூரில் இதுவரை மகளிர் காவல் நிலையம் தொடங்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக மகளிர் காவல் நிலையம் தொடங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூரை மையமாகக் கொண்டு சூலூரில் D.S.P. அலுவலகம் கொண்டு வர ஆவன செய்ய வேண்டும்.

சூலூரில் தீயணைப்பு நிலையம் இல்லை. தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூரில் அரசு கலைக் கல்லூரி இல்லை. ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில் அரசு கலைக் கல்லூரி தொடங்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூரில் அரசு தொழில்நுட்ப பாலிடெக்னிக் கல்லூரி இல்லை. ஏழையெளிய மாணவர்கள் பயன்பெறும் வகையில், பாலிடெக்னிக் கல்லூரி ஆரம்பிக்க ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சூலூர் தொகுதியைப் பொறுத்தவரையில், விசைத்தறியை நம்பி அதிகமாக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஜவுளி உற்பத்தியாளர்களும் விசைத்தறித் தொழிலாளர்களும் பயன்பெறும் வகையில் சோமனூரில் ஜவுளிச் சந்தை அமைக்க வேண்டும்.

சூலூர் காடாம்பாடி முதல் சிந்தாமணி புதூர் வரை உள்ள சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும்.

இந்தியாவிலேயே வேறெங்கும் இல்லாத வகையில் சூலூர் சின்னியம்பாளையம் ஊராட்சியில் சர்வதேச விமான நிலைய விரிவாக்கத்திற்கு சுமார் 650 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதுவும் நகர எல்லைப் பகுதிக்குள், வேறெந்த மாநிலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகள் இல்லை. கையகப்படுத்தப்பட்ட நிலங்களின் உரிமையாளர்களான விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தித் தரவும், விமான நிலைய விரிவாக்கத்தை அங்கு கைவிட்டு, நகர எல்லைக்கு அப்பால் அமைத்தால் விவசாயிகள் காப்பாற்றப்படுவார்கள். ஆகவே, இவ்வரசு மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டுசென்று தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சூலூர் அரசு பொது மருத்துவமனையில் எக்ஸ்ரே, இ.சி.ஜி. மற்றும் ஆப்பரேசன் தியேட்டர், போஸ்ட்மார்ட்டம் ரூம் ஆகிய அனைத்து வசதிகள் இருந்தும், எக்ஸ்ரே எடுக்கவும், இ.சி.ஜி எடுக்கவும் போதிய பணியாளர்கள் மற்றும் மருத்துவர்கள் அங்கு இல்லை. இவை சரி செய்யப்பட வேண்டும் என்று கூறி, எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.

**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் பிறப்பிடமாய், அறிவின் இருப்பிடமாய், ஆற்றலின் ஊற்றுக்கண்ணாய், வீரத்தின் எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் தங்கத் தாரகை, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சீரிய சிந்தனையும், சிறந்த செயலாற்றலும், சமுதாய நோக்கும், சமதர்ம பண்பாடும் கொண்டு நல்லாட்சி புரியும் தரணி போற்றும் தன்னலமற்ற தாயாம், தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பண்பும், பாசமும், நீதியும், நேர்மையும், அறிவும், ஆற்றலும், வீரமும், தீரமும், பரிவும், கருணையும் ஒருங்கே அமையப்பெற்ற அன்னையின் தலைமையின்கீழ் பொன்விழா கண்ட இந்த மாபெரும் சபையிலே சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற ஒரு நல்ல வாய்ப்பினை வழங்கிய எங்கள் அன்னைக்கு என்னுடைய கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம், நிலம், ஆகாயம், நெருப்பு, நீர், காற்று ஆகிய பஞ்ச சக்திகளின் இயக்கத்தால் நிலை பெற்றுள்ளது. அவற்றில் நிலம், ஆகாயம், நெருப்பு மற்றும் நீர் ஆகியவை நம் கண்ணுக்குப் புலப்படும். நம்முடைய கண்களால் பார்க்கலாம். ஆனால், காற்றை யாராலும் பார்க்க முடியாது, பார்வையிட முடியாது, கட்டுப்படுத்தவும்



முடியாது. காற்றை உணர முடியுமே தவிர, பார்க்க முடியாது. நீரின்றி அமையாது உலகு, ஆனால் காற்று இன்றி வாழாது உயிரினம். அப்பேர்ப்பட்ட காற்று இல்லையென்றால் உலகம் இல்லை. காற்று இல்லையென்றால் உலகம் இயங்காது. காற்று இல்லையென்றால் மனிதன் உயிரற்ற ஜடம் ஆகின்றான். நான் உயிருடனும், புகழுடனும் இருப்பதற்குக் காரணம் அந்தக் காற்றாக என்னுள் இருந்து என்னை இயக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) உயிர்மூச்சாக, என் சுவாசமாக இருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

அன்பு அனைத்து மக்களையும் ஒன்றிணைக்கிறது. அன்பு மட்டுமே உலகத்தை அழிவிலிருந்து காக்கின்றது. உலகம் அன்பின் அடிப்படையிலேயே இயங்குகின்றது. அன்பின் மறுமொழி அம்மா. எனவே, அம்மா இல்லாமல் ஒன்றரை கோடி தொண்டர்கள் இல்லை என்ற அந்த நிலையை அம்மா அவர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா என்ற சொல்லுக்கு நிகராக எந்தவொரு சொல்லும் அவனியில் இல்லை. அதைப்போல, அம்மா அவர்களுக்கு நிகராக எந்தவொரு தலைவரும் இந்தியாவில் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் விடிவெள்ளியாக, தமிழகத்தின் காவலராக, உலகத் தமிழர்களின் உன்னதத் தலைவியாக, நம்பினோரைக் கைவிடாத நம்பிக்கை நட்சத்திரமாக உலாவரும் உன்னதத் தாயின் செயலாற்றலை வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. மாண்புமிகு அம்மா, நீங்கள் ஏழை எளியோருக்கு இன்முகம் காட்டுபவர்கள், இயலாத முதியோரிடம் இரக்கம் கொள்பவர்கள், வாடிய விவசாயிகளை வாழ வைக்கும் வான்மழையாய் விளங்குபவர்கள். என்ன ஜாதி, என்ன இனம், என்ன மதம் என்று பாராமல், ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் முன்னேற்றம் ஒன்றே தன் உயிர் மூச்சாகக் கொண்டு, அதைத் தன் இலட்சிய இலக்காகக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி), அல்லும் பகலும் அயராது ஆர்வமாகச் செயலாற்றும் உங்கள் உழைப்பிற்கு உலகில் ஈடு ஏது!

ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் நாளே, 7 கோப்புகளில் கையெழுத்திட்டு, 7 கோடி தமிழ் மக்களின் இதயங்களில் இடம் பிடித்தவர்கள் அம்மா நீங்கள். கோட்டை நாற்காலி பறிபோனதால் உண்டான பாதிப்பில் உளறிக்கொண்டிருக்கும் கோபாலபுரம் கோமாளிகளின் உள்ளக் குமுறல்களை உதாசீனப்படுத்தி அவர்களின் ஆணவத்திற்கு முடிவு கட்டினீர்கள்.

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2013 ஏப்ரல் 26

(மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் இதயத்தில் அன்னை தெரசாவின் ஈரத்தைக் காண்கின்றோம், உங்கள் செயலில் ஜான்சி ராணியின் போர் புரியும் வீரத்தைக் காண்கின்றோம். உங்கள் அறிவில் ஒளவையாரின் அமுத நீதியின் சாரத்தைக் காண்கின்றோம். உங்கள் அன்பில் இறைவன் அன்போடு அருளும் பாரதத்தைக் காண்கின்றோம். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் தன் பேச்சாலும், செயலாலும் தமிழக மக்களின் இதயத்தில் இடம் பிடித்து நல்லாட்சிப் புரிவதை நல்லிதயம் படைத்தவர்கள் பாராட்டுகிறார்கள். எதிரிகள் வெம்பி வேதனைப்படுகின்றார்கள். துன்பமும், தொல்லையும் தொடர்ந்து வந்தாலும் கலங்காமல் எதிர்ப்பவரையும், ஏளனம் செய்பவரையும் அலட்சியம் செய்து, கொண்ட கொள்கையில் உறுதியாக நின்று நற்செயல் ஆற்றுபவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று எல்லா துறைகளிலும் எண்ணற்ற சாதனைகளைப் புரிந்து வருகின்றீர்கள்.

அனைத்துத் துறைகளையும் சமநோக்கோடு கருதி, அத்துறையின் வளர்ச்சிக்குத் தனிக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் 2013–2014 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது உரையாற்றுகின்ற நல்வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

“பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை”

என்று உணர்த்தியவர் திருவள்ளுவர். இந்தக் குறளுக்கேற்ப ஜனநாயக நாட்டில் அனைவரும் சமம், அனைவரும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் கல்வி வளர்ச்சியிலும், பொருளாதாரத்திலும் மேம்பாடு அடையவும், சமூக நிலையில் உயர்வடையவும், பல்வேறு சிறப்பான நலத் திட்டங்களை வகுத்து, அவற்றைச்



2013 ஏப்ரல் 26] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

செயல்படுத்துவதில் மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழ்நாடு, இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி) சந்தேகமே இல்லை. மேலும், இம்மக்களை சமூகப் பின்னடைவிலிருந்து உயர்த்திடவும், கல்வி மற்றும் அரசு வேலைவாய்ப்பில் உரிய பங்கினை அளித்திடவும், உரிய பாதுகாப்பு, தன்னம்பிக்கை, மறுமலர்ச்சி பெற்றிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருவதை எல்லோரும் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோரின் பாதுகாவலர் என்று பிதற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு பதிலடி கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். பிற்படுத்தப்பட்டோர் மாநில இட ஒதுக்கீடு என்பது 50 விழுக்காட்டிற்குமேல் இருக்கக்கூடாது என்ற மத்திய அரசின் தடைகளைத் தகர்த்தெறிந்து, அவர்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் பயன்பெறும் வகையில் 69% இட ஒதுக்கீடு அளிக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டத்தை 1996 ஆம் ஆண்டு அரசமைப்புச் சட்டத்தின் 9–ஆவது பிரிவு அட்டவணையின்கீழ் இடம்பெற வழிவகுத்து, சமூக நீதி காத்த வீராங்கனை என்று எதிர்க்கட்சியினராலும் பாராட்டப்பட்டவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி அறிவை வளர்ப்பதிலும், கல்வித் தரத்தினை உயர்த்துவதிலும் தனிக் கவனம் செலுத்தி, கல்வி உதவித் தொகைகள், சீருடைகள், புத்தகங்கள் வழங்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். நலிவடைந்த பிரிவினரான இவர்கள் கல்வி கற்பதில் எந்த இடையூறும் இன்றி மேம்பாடு அடையவேண்டும் என்பதற்காக இவர்களுக்கு விடுதி மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த மாண்புமிகு அம்மா அவர்கள் இதில் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினருக்கான விடுதிகள் மட்டும் தமிழ்நாட்டில் மொத்தம் 1,294 உள்ளன. அவை அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்கள் பெருமுயற்சி செய்து, சொந்தக் கட்டடங்களில் இயங்கும் 1,000 விடுதிகள்போக, மீதமுள்ள விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் பணிக்கான நடவடிக்கைகளை தமிழகத்திலே

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2013 ஏப்ரல் 26

முடுக்கிவிட்டிருக்கிறார்கள். எஞ்சியுள்ள விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்திருப்பதை அறிந்து மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் சார்பாக மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்புதான் கடந்த 22 மாத காலத்திற்குள் 56 விடுதிகள் புதியதாகத் திறக்க ஆணையிட்டு, அவற்றில் 6 விடுதிகள் சிறுபான்மையின மக்களுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதிதாகக் கட்டப்பட்டுள்ள விடுதிகளில் சூரிய ஒளியின்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் கருவி மற்றும் சூரிய ஒளிமூலம் நீரை சூடாக்கும் கருவி ஆகியவை பொருத்தப்படவுள்ளன என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின்மீது அக்கறைகொண்ட அரசுதான் நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் நலனில் அக்கறைகொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் தொடக்கத்தில் 2006–2007 ஆம் ஆண்டில் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உணவுக் கட்டணமாக ரூ.300/-ம், கல்லூரியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உணவுக் கட்டணமாக ரூ.400/–ம் வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு 2008–2009 ஆம் ஆண்டில் ரூ.100/- என அதிகரித்து வழங்கப்பட்டது. 2009–2010 ஆம் ஆண்டில் 50 ரூபாய் உயர்த்தப்பட்டு, ஒட்டுமொத்தமாக கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இத்தொகை வெறும் 300 ரூபாயாக இருந்தது 450 ரூபாயாகவும், 550 ரூபாயாகவும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு உணவு மானியம் 50 சதவீதமாகவும், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான உணவு மானியம் 50%–க்குக் குறைவாகவும் உயர்த்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில்தான் கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளின் உணவுக் கட்டணம் ரூ.750/- ஆகவும், பள்ளி மாணவ, மாணவிகளின் உணவுக் கட்டணம் ரூ.650/- ஆகவும் உயர்த்தி, ஆக மொத்தம் 50 சதவீதம்



2013 ஏப்ரல் 26] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–05

கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு 5 வருடங்களில் 50 சதவீதத்துக்கும் குறைவாக உணவுக் கட்டணத்தை வழங்கியுள்ளது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில்தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் உணவுக் கட்டணம் 50 சதவிகிதம் அதிகரித்து வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு மிகாமல் உள்ள, அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனியார் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவிகளின் உணவு மானியம் கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் ஆண்டுக்கு, 10 மாதத்திற்கு மட்டும் மாதம் ரூ.200/– என்ற விகிதத்தில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சி மலர்ந்தவுடன் அரசு விடுதிகளிலுள்ள மாணவ, மாணவிகளும், தனியார் விடுதிகளில் தங்கியுள்ள மாணவ, மாணவிகளும் அனைவரும் சமம் என்ற கருத்தில் அவர்களுடைய மானியத்தை 200 ரூபாயிலிருந்து 650 ரூபாயாக உயர்த்திய அரசுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவிகளின் மேல்நிலைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையிலே அரசுப் பள்ளி, நிதியுதவி பெறும் பள்ளி மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு எந்தவித நிபந்தனையுமின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி சாதனை புரிந்து வருகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் முழுமையான வாழ்வுரிமை பெற்றவர். சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்ற அந்த மூன்றுமே அந்த உரிமையின் வாழ்வின் அடிப்படை என்பதை வெளிப்படுத்தும் விதமாக மாண்புமிகு அம்மா அவர்கள் செயலாற்றி வருகின்றார்கள். அந்தவகையில்தான் ஏழையெளிய, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய வேண்டுமென்பதற்காக அவர்களுக்கு விலையில்லா

தையல் இயந்திரங்கள், விலையில்லா சலவைப் பெட்டிகள், விலையில்லா வீட்டுமனைகள் வழங்குவதுடன், அவர்களுடைய திறனை வளர்ப்பதற்காக உதவித் தொகையுடன்கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறப்பான முறையில் செயலாற்றி வருவதை மக்கள் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் பொது காலக் கடன் திட்டம், மகளிருக்கான புதிய பொற்காலத் திட்டம், சிறு வணிகத் திட்டம், சிறு குறு விவசாயிகளுக்கான மானியம் மற்றும் கடன் திட்டம் போன்றவற்றைச் செயல்படுத்தி அவர்களின் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்து வருகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, அனைத்து மதங்களின் பாதுகாவலராக நமது மாண்புமிகு அம்மா அவர்கள் ரம்ஜான் மாதத்தில் 3,860 மெட்ரிக் டன் அரிசியை நோன்புக் கஞ்சிக்காகக் கொடுத்து, இஸ்லாமியப் பெருமக்களின் பாதுகாவலராக விளங்கிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் கழகத்தின் சார்பாக ரம்ஜான் மாதத்தில் இஸ்லாமிய மார்க்கத்தினருக்கு இஃப்தார் விருந்து அளித்தும், அதேபோல் கிறித்தவ மக்களின் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு அவர்களின் மகிழ்ச்சியில் பங்கேற்று வருகின்றார்கள்.

2,600 உலமாக்களுக்கு மாதம் ரூ.1,000/– உதவித் தொகையும், விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கி சிறுபான்மையின மக்களின் உரிமைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் காத்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையால், வக்ஃபு வாரியத்தில் 500 கோடி ரூபாய் அளவிலான சொத்துகள் அபகரிப்பிலிருந்து மீட்கப்பட்டதை அறிந்து இஸ்லாமியப் பெருமக்கள் மனமகிழ்ச்சியுடன் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், வக்ஃபு வாரியத்திற்கு மானியத்தை ஒரு கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருப்பதற்கும், வக்ஃபு வாரிய மேம்பாட்டு நிதிக்கு அரசு மானியமாக 3 கோடி ரூபாயை வழங்கியதற்கும் இஸ்லாமிய மக்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியத்தை ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாக உயர்த்தி வழங்கிய ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

இஸ்லாமிய பெருமக்களுக்கு மட்டுமின்றி தமிழ்நாட்டிலுள்ள கிறித்தவ பெருமக்களின் மதப் பாதுகாவலராக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்கி வருகின்றார்கள். கிறித்தவர்கள் புனிதப் பயணமாக ஜெருசலேம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் ஒரு சீரிய திட்டத்தைத் தோற்றுவித்து, 500 கிறித்தவர்களுக்கு தலா ரூ.20,000/– வீதம், ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி மதச்சார்பற்ற மகராசியாக விளங்குபவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் அது முறையாக உரியவர்களுக்குப் போய் சேரும்வகையில் திட்டங்களைத் தீட்டி, அதிக நிதியை ஒதுக்கி, சரித்திரம் படைத்து வருபவர் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விலையில்லா அரிசி, மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினி, சீருடைகள், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதுடன், சென்னை மாநகராட்சிப் பகுதியின் 200 வார்டுகளிலும் ஏழையெளிய மக்கள் பயன்பெறும்வகையில், ஒரு ரூபாய்க்கு ஒரு இட்லி, 5 ரூபாய்க்கு சாம்பார் சாதம், 3 ரூபாய்க்கு தயிர் சாதம் போன்றவற்றை மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக வழங்க ஏற்பாடு செய்து, எந்த மாநிலத்திலும், எந்த முதலமைச்சருக்கும் தோன்றாத உன்னதமான திட்டத்தைத் தீட்டி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவற்றுக்கெல்லாம் நிதி உதவியை வாரி வாரி வழங்கிய எங்கள் வள்ளலின் வாரிசு அம்மா அவர்களுக்கு எங்களுடைய கோடானு கோடி நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாரி வழங்கத்தான் தெரியும், பிறரைப்போல கை நீட்டி வாங்கத் தெரியாது. குடும்ப அரசியல் செய்து கோடி கோடியாகக் குவிக்கத் தெரியாது. அலைக்கற்றை ஊழலைப்போல அள்ளிக் கொள்ளத் தெரியாது. ஆட்சியைப் பிடித்து சம்பாதிக்க முடியவில்லையே என்று தம் நிலையை எண்ணி, கையை பிசைந்து கொள்ளவும் தெரியாது.

[திரு. எஸ். அப்துல் ரஹீம்] [2013 ஏப்ரல் 26
பிற்பகல் 12–10

ஒரு தலைவர் தன்னுடைய பிறந்த நாளை கறந்த நாளாக அனுசரித்து, கொண்டா கொண்டா என்று அண்டா அண்டாவாக நிரப்பிக் கொள்பவர்கள் மத்தியில், நிரப்பிக் கொள்பவர் வைத்திருந்தது பிச்சைப் பாத்திரம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய பிறந்த நாளை, பிறருக்கு உதவும் நாளாகக் கொண்டாடுபவர். அதனால்தான் நம் அம்மாவிடம் உள்ளது அட்சயப் பாத்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் கரும யோகி. ஒரு திட்டத்தைத் தொடங்கி இடையில் அதனால் ஒரு சாராருக்குப் பயனில்லை என்று தோன்றினால் அந்தத் திட்டத்தை நிறுத்திவிடமாட்டார்கள். பிறர்க்கு பயன்தரும் என்பதைக் கருத்தில்கொண்டு, தொடங்கிய திட்டத்தை முடித்த பிறகே வேறொன்றைத் தொடங்குவார்கள் என்பதற்கு உதாரணமாக ஒரு சிறு கதையைச் சொல்கிறேன்.

"ஒரு வீட்டில் ஒரு கணவனும், மனைவியும் குடியிருந்தார்கள். ஒரு நாள் இரவில் கணவன் வீட்டிற்கு வரும்போது மனைவி சமையல் செய்து கொண்டிருந்தாள். சோறு பாதி கொதித்துக் கொண்டிருந்தது. அன்று இரவு மனைவிக்குக் கொஞ்சம் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் தனக்கு ஆகாரம் வேண்டாம் என்று நினைத்து, கணவனுக்கு மாத்திரம் சமைத்தாள். கணவன் வீட்டிற்கு வந்தவுடன், நான் இன்று விரதம் இருக்கப் போகிறேன், எனக்கு ஆகாரம் வேண்டாம் என்றான். உடனே பாதி கொதிக்கிற சோற்றை அவள் அப்படியே சும்மா விட்டு விட்டு அடுப்பை நீரால் அணைத்துவிடவில்லை. தங்கள் இருவருக்கும் உபயோகம் இல்லாமல் இருந்தாலும், மறுநாள் காலையிலே அந்த உணவு வேலைகாரிக்கு உதவும் என்று நினைத்து அது நன்றாகக் கொதிக்கும்வரை காத்திருந்து, வடித்துவிட்டு பிறகு நித்திரைக்குச் சென்றாள்." அதைப்போல, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் புதிதாகக் கட்டப்பட்ட சட்டப் பேரவை வளாகம் அரசு அலுவலகத்திற்கு உகந்ததாக இல்லாவிட்டாலும் அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அப்படியே விட்டுவிடவில்லை. ஏழையெளிய மக்களின் உயர் சிகிச்சைக்காக இன்றைக்கு டெல்லியிலே இருக்கிற A.I.I.M.S. மருத்துவமனைக்கு இணையான (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவமனையாக மாற்றி சாதனை புரிந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.



2013 ஏப்ரல் 26] [திரு. எஸ். அப்துல் ரஹீம்]

ஒரு நாடு உண்மையான ஜனநாயக நாடா இல்லையா என்பதற்கு உரைக்கல் அந்த நாட்டின் சிறுபான்மை மக்களின் எண்ணங்களை வெளிப்படுத்தி, எண்ணத்திற்கு ஏற்ப வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள். எண்ணங்களின் அடிப்படையில்தான் அது கணிக்கப்படும் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நனவாக்கி வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

வீணை நரம்புகளை தன் மெல்லிய விரல்களால் வினோதமாக தட்டித் தட்டி, விதவிதமாக இன்ப நாதங்களை எழுப்புவதைப்போல, 14–வது பேரவை தொடங்கி இரண்டே ஆண்டுக்குள் தமிழக மக்கள் எதிர்பாராத அளவிற்கு, தன் மென்மையான இதயத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களின் (மேசையைத் தட்டும் ஒலி) வெளிப்பாடாக, அடுக்கடுக்கான அறிவிப்புகள்மூலம் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் வாரி வாரி வழங்கிவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இங்குள்ள தமிழர்கள் மட்டுமல்ல, இலங்கையிலுள்ள தமிழர்களையும் சகோதர சகோதரிகளாக எண்ணி, அவர்களின் நலன் பேணுவதற்குத் தயங்காமல் பணியாற்றி வருகிறார்கள்.

இலங்கைத் தமிழர் நலன் காக்க பொது வாக்கெடுப்பு என்று சொல்லி தீர்மானம் வடிவமைத்துத் தந்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். கச்சத் தீவை என்றைக்கு இலங்கைக்குத் தாரைவார்த்தார்களோ அன்றிலிருந்துதான் நம் மீனவர்கள் கடும் இன்னலுக்கு ஆளாகியுள்ளனர். நம்முடைய உரிமைகள் மேலும் மேலும் பறிபோவதற்கு வித்திட்டவர்கள் கடந்த மைனாரிட்டி ஆட்சியாளர்கள். அதை உணர்ந்துதான் மாண்புமிகு அம்மா அவர்கள் கச்சத் தீவைத் திரும்பப் பெற போராடி வருகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணிவிலே தந்தை பெரியாரைப் போன்றவர்கள் அம்மா; அறிவிலே அறிஞர் அண்ணாவைப் போன்றவர்கள் நம் அம்மா; கனிவிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.–ஐப் போன்றவர்கள் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 24 மனை தெலுங்கு செட்டியார் வகுப்பில் உட்பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு பிரிவினர் மட்டும் M.B.C. வகுப்பைச்

சார்ந்தவர்கள் என்றும் மற்றவர்கள் B.C. வகுப்பைச் சார்ந்தவர்கள் என்றும் உள்ளது. அதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்து, அனைத்து பிரிவையும் M.B.C.–ல் சேர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒத்த வகுப்புகள் என குறிப்பிடப்படும் சாதிச் செட்டி, தெலுங்குச் செட்டி மற்றும் 24 மனை தெலுங்கு செட்டி ஆகிய வகுப்புகளில், தெலுங்கு பட்டிச் செட்டி வகுப்பு மட்டும் 1957 ஆம் ஆண்டு முதல் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து வருகிறது. தெலுங்கு பட்டிச் செட்டி வகுப்பு நீங்கலாக உள்ள ஏனைய வகுப்புகள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. சாதிச் செட்டி, தெலுங்கு செட்டி மற்றும் 24 மனை தெலுங்குச் செட்டி ஆகிய வகுப்புகளை, தெலுங்கு பட்டிச் செட்டி வகுப்பைப் போன்று மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரி வரப்பெற்ற பல்வேறு மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு, பரிந்துரை வழங்குவதற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சூழ்நிலையில் ஜாதிச் செட்டி, தெலுங்குச் செட்டி மற்றும் 24 மனை தெலுங்குச் செட்டி ஆகிய வகுப்புகளை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது தொடர்பான கோரிக்கையின்மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரைகள் 2009 ஆம் ஆண்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில், ஆணையத்தின் பரிந்துரைகள் கிடைத்த பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதனைப் பரிசீலித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள இயலும் என்று தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அப்துல் ரஹீம் அவர்கள்.



**திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பத்தரைமாற்றுப் பொன்னாக திகழும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் நீடூழி வாழ்ந்து, தமிழக மக்களுக்கு மட்டுமின்றி, இந்திய மக்களுக்கு மேலும், மேலும் தொண்டாற்ற வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி, இப்படிப்பட்ட தன்னிகரில்லா ஆட்சி நடத்தும் எங்கள் தாயுள்ளம் கொண்ட தங்கத் தாரகை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் வைக்கப்பட்ட இந்த மானியக் கோரிக்கையில் இரண்டாவது முறையாக இந்த மாபெரும் சபையிலே எனக்குப் பேச வாய்ப்பளித்த எங்கள் தாயுள்ளம்கொண்ட தாய்க்கு, என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். என்ன? சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறுபான்மை மக்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆற்றிவருகிற அரிய பணிகளையெல்லாம் விளக்கமாகச் சொல்லுகிறபோது, கிறித்தவ சமுதாய மக்களுக்காக விழாக்கள் நடத்துகிறபோது, கிறிஸ்துமஸ் விழாவிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கலந்து கொண்டார்கள் என்று சொன்னார்கள். அதிலே ஒரு விளக்கத்தை நான் அளிக்க விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில், தமிழக கட்சிகளின் வரலாற்றில் ஒரு கட்சியே கிறிஸ்துமஸ் விழாவை நடத்துவது என்பது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், புரட்சித் தலைவி அம்மா அவர்களே அழைப்பிதழ்களை அச்சடித்து, கிறித்தவ சமூகத்திலுள்ள அனைத்து, denominations, அது கத்தோலிக்கர்களாக இருந்தாலும், protestant–களாக இருந்தாலும், பெந்தகொஸ்தே திருச்சபையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும்,

அவர்கள் அனைவரையும் ஒன்றாக இணைத்து, கிறிஸ்துமஸ் பெருவிழா என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் புரட்சித் தலைவி அம்மா அவர்களே முன்னின்று அந்த விழாக்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று இஃப்தார் விழாவை நடத்துகிறபோது, நோன்பு திறக்கிறபோது, அந்த நோன்புக் கஞ்சி வயிற்றுக்கு இதமாக எப்படி இருக்கவேண்டும் என்று உணவுகளை எப்படி அளிக்கிறார்களோ அதைப்போல இந்த முறையும் கிறிஸ்துமஸ் விழாவினை நடத்துகிறபோது பெரிய விருந்தை ஏற்பாடு செய்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ஒரு கட்சியே கிறிஸ்துமஸ் பெருவிழாவை எப்படி நடத்துவது என்று இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் முன்னோடியான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியை நான் உங்களுக்கு,த் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு அனுமதியளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் 1921—லிருந்து பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு சட்டம் அமலில் இருந்து வருகிறது. ஏறக்குறைய 94 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் அமலிலுள்ள இச்சட்டத்தின்மூலம் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது உண்மைதான்.

எல்லோருக்கும் கல்வி, கற்றவர் அனைவருக்கும் வேலை என்ற நிலை இந்தியாவில் ஏற்படும் வரை இட ஒதுக்கீடு என்பது தவிர்க்க முடியாததாகும். சுதந்திரத்திற்கு முன்பே இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை இந்தியாவில் துவங்கிவிட்டது. அதற்கான போராட்டங்களும் 1920—க்கு முன்பே துவங்கியதன் விளைவுதான் பிரிட்டிஷ் அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு



வரக் காரணமாக அமைந்தது. இந்தியாவிலுள்ள அனைவருக்கும் கல்வி, கற்றவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பதை உருவாக்கித் தருவது வெள்ளையர்களின் கொள்கையாக இந்தியாவில் இல்லை. எனவேதான் பாதிக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கும் வேலையைப் பிரித்துக் கொடுத்திட இட ஒதுக்கீட்டுச் சட்டத்தைக் கொண்டுவந்தனர்.

சுதந்திரத்திற்குப் பின் வந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் வேலை என்ற சட்டத்தை இந்தியாவில் கொண்டு வந்திருக்கவேண்டும். ஆனால் அந்த அரசு வெள்ளையர்கள் கொண்டு வந்த சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்து அதையே இந்தியாவில் அமல்படுத்தினார்கள். அதுதான் மாநிலங்களிலும் அமலாகிக் கொண்டிருக்கிறது. அனைவருக்கும் சம வாய்ப்பு, சம உரிமை என்பதை முதலாளித்துவ, ஏகாதிபத்திய ஆதரவு கொள்கைகள் கொண்ட ஆட்சியாளர்களால் தரமுடியாது. அதனால்தான் மத்தியில் அதிகாரத்திற்கு வந்த காங்கிரஸ் அரசு இட ஒதுக்கீட்டில் வெள்ளையர்களின் கொள்கையையே பின்பற்றியது.

பிற்பகல் 12—20

இப்பொழுது உலகமய, தனியார்மய, தாராளமயக் கொள்கைகளை இந்தியாவில் அமல்படுத்துவதால், கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகியுள்ளது. மத்திய அரசுப் பணிகளுக்கோ, பொதுத் துறை நிறுவனங்களின் பணிகளுக்கோ புதிதாக வேலைக்கு ஆட்கள் எடுப்பதே இல்லையென்ற கொள்கையோடு, அனைத்தையும் தனியார்மயத்தை நோக்கி நகர்த்திக் கொண்டிருக்கின்றது மத்திய அரசு.

அதைப்போல, உயர் கல்வி நிறுவனங்களையும், தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களையும் வெளிநாட்டினருக்கும், ஏகபோக நிறுவனங்களுக்கும் தாரை வார்க்கும் விதத்தில் மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. சாதாரண மக்களுக்குக் கல்வியும், வேலைவாய்ப்பும், மத்திய அரசின் கொள்கையினால் எட்டாக் கனியாகி வருகிறது.

பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய பொருளாதார வாழ்க்கையில் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் கொண்டுவரும் விதத்தில் கல்வி,

வேலைவாய்ப்பு, தொழில், விவசாயம் என்கிற அனைத்துத் துறைகளிலும் பொருளாதார மேம்பாட்டிற்கான திட்டமிடுதலை நோக்கி அரசினுடைய திட்டமிடுதல்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லாத் துறைகளிலும் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தைக் கொண்டு வர முடியும்.

கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் கிடைக்கின்ற இட ஒதுக்கீடுகள் ஓரளவு இப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்குக் கைகொடுத்துள்ளது. ஆனால் அது மட்டும் போதுமானது இல்லையென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சுட்டிக்காட்ட விரும்புகிறது.

உதாரணத்திற்கு, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி பகுதியிலோ, விழுப்புரம், கடலூர் போன்ற மாவட்டங்களிலோ பெரும் பகுதியாக வாழ்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மண்ணை நம்பியே வாழும் நிலையில் இருப்பதால், பொருளாதார ரீதியான பெரிய மாற்றத்தை அவர்களது வாழ்க்கையில் காண முடியவில்லை. எனவே, இதுபோன்ற பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளையும், விவசாய மேம்பாட்டிற்கான புதிய திட்டங்களையும் அரசு கொண்டுவர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எட்டு மாவட்டங்களை மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு, இரண்டு விடுதிகளைக் கொடுத்துள்ளது. அனைவரும் கல்வி கற்க வேண்டும்; அனைவரும் கல்வி கற்பதற்கு எந்தவிதமான தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக கல்லூரி மாணவிகள் விடுதி ஒன்றும், பாலிடெக்னிக் கல்லூரி விடுதி ஒன்றும், என இரண்டு விடுதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

அது மட்டுமல்லாமல், TABCEDCO மூலம் விவசாயிகளுக்கு ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்காக ஒரு இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



அதில் 50,000 ரூபாய் அல்லது 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, என்ன? சுருக்கமாகக் கேளுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்களுக்கு நான் கூற விரும்புவது, "அனைவருக்கும் கல்வி இயக்கம்" என்று மத்திய அரசு பல்லாயிரக்கணக்கான, கோடிக்கணக்கான நிதிகளை கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது. இந்த இயக்கத்தையும் ஆரம்பித்தது காங்கிரஸ் அரசாங்கம் என்பதை நான் அவருக்குக் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆழ்துளைக் கிணறு அமைப்பதற்கு நிதி கொடுப்பதாகச் சொன்னார்கள். நிதி கொடுக்கிறார்கள். ஆனால், அப்படி அமைக்கக்கூடிய ஆழ்துளைக் கிணறுகளுக்கு உடனடியாக மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கின்றது. எந்த நோக்கத்திற்காக நிதி உதவி செய்யப்படுகின்றதோ, அதை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. எனவே, மின் இணைப்பை உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பலமுறை விளக்கம் கொடுத்துவிட்டார்கள். நேற்று மாண்புமிகு அம்மா அவர்கள் அற்புதமான திட்டங்களை அறிவித்துள்ளார்கள். இது

தற்காலிகமான ஒரு தடைதான். பொருளாதாரம்தான் மிகவும் முக்கியமானது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செய்து கொண்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் செய்கின்றார்கள். மின் தடை என்பது தற்காலிகமானது. மின் தடை இருப்பதால், மின் இணைப்பு கொடுக்கவில்லை. வரிசைப்படி அதைக் கொடுத்துவிடுவார்கள். நேற்று மாண்புமிகு அம்மா அவர்கள் அற்புதமான அறிவிப்பை அறிவித்தார்கள். 11 இலட்சம் பேருக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதில், இதுவும் அடங்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் வேறுவிதமாகப் போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் பயனடையக்கூடிய பயனாளிகளுக்கு சிறப்பு நிகழ்வாகக் கருதி, உடனடியாக மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் இருக்கின்றது. ஆனால், நடைமுறையில் மின் இணைப்பு கொடுக்காமல் இருக்கிறார்கள். நான் மின்சாரத்தைப் பற்றி கேட்கவில்லை, மின் இணைப்பைத்தான் கேட்கிறேன். எனவே, அதைச் சிறப்பு நிகழ்வாக எடுத்துச் செயல்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில், எவ்வாறு ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், எந்த மாவட்டத்தில் அவ்வாறு நடைபெற்றதோ, அங்கே உள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்மூலம் அதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, என்னவென்று சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் கல்வித் திட்டம் என்பது மத்திய அரசு மட்டும் நிதி கொடுத்து செயல்படுத்தப்படும் திட்டமல்ல. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அனைவருக்கும் கல்வித் திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் 2001—2006 வரை இருந்த அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலேதான், 100 சதவிகிதம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டது. அதற்குக் காரணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திருமதி விஜயதரணி அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் ஏதோ மத்திய அரசுதான் அனைவருக்கும் கல்வி திட்டத்தைக் கொண்டுவந்ததுபோல சொல்லியிருக்கிறார்கள். கல்விக்கு 6 சதவிகிதம் நிதி ஒதுக்க வேண்டுமென்று நாடு முழுவதும் கேட்கிறார்கள். ஆனால், மத்திய அரசு 1½ சதவிகிதம்தான் ஒதுக்குகிறது. அதுமட்டுமல்லாமல், தனியார் கல்வி நிறுவனங்களை அனுமதித்து, இந்த நாட்டில் கல்வியைச் சீரழித்ததே மத்திய அரசுதான் என்பதை இந்த அவைக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி உட்காருங்கள். உங்களுடைய வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். திரு. லாசர் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி விஜயதரணி நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் ஏதோ மத்தியிலிருந்து நிதி கொடுக்கிறோம், கொடுக்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். ஆனால், தமிழகத்திலே இருந்து மத்திய அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 80,000 கோடி ரூபாய்க்கு மேல் தமிழக மக்கள் வரியாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி கொடுக்கக்கூடிய அந்த நிதியையே ஒழுங்காகத் தமிழகத்திற்கு கொடுக்காத நிலையிலே இப்போது மத்திய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தயவுசெய்து அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பேசுவதற்குக் கை தூக்குகின்ற மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திருமதி விஜயதரணி, நீங்கள் உட்காருங்கள். நான் சொல்லும்போது பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தமிழ்நாட்டில் வாழ்கின்ற 24 மனை தெலுங்குச் செட்டியார்கள் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார்கள். அவர்கள் சொன்ன விளக்கத்தின் அடிப்படையில் அந்த மக்களுக்கு உரிய காலத்தில் நியாயம் கிடைக்கவேண்டும். ஏனென்றால், திருப்பூரில் உள்ள தெலுங்குச் செட்டியார் பெண்ணை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்தால், அவர்களை M.B.C. என்று சொல்கிறார்கள். ஆனால், புதுக்கோட்டை மாவட்டத்தில் வாழும் தெலுங்கு செட்டியார் பெண்ணை திருப்பூரில் திருமணம் செய்து கொடுத்தால் B.C. என்று சொல்கிறார்கள். ஏனென்றால், இந்த ஒரு சாதிக்குள்ளேயே இரண்டு விதமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பிரச்சினைக்காக அந்த மக்கள் நீண்டகாலமாகக் குரல் கொடுத்து வருகிறார்கள். அதன்மீது நடவடிக்கை . . .



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விளக்கமாக அவையில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் சொன்னார்கள். அவர் குறிப்பிடும் புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பிரச்சினையைவிட, என்னுடைய பக்கத்தில், நெருக்கத்தில் உள்ள நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும், அவருடைய மனைவி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலும் இருக்கிறார்கள் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் பேசுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயில்கின்ற பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட விடுதிகளில் படிக்கக்கூடிய மாணவர்கள் சம்பந்தமான பிரச்சினை இங்கே வந்தது. அவர்களுக்கு கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டுதான் உயர்த்திக் கொடுத்தோம் என்று அதற்கு விளக்கம் கொடுத்தார்கள். நான் இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசின் கொள்கையினால் ஏற்பட்டிருக்கக்கூடிய கடுமையான விலைவாசி உயர்வால் சமையல் கேஸ் விலை, அவற்றிற்கான மானிய விலையான ரூ.390/–லிருந்து ரூ.900/–ஆக உயர்ந்துள்ளது. இதனால் விடுதிக் காப்பாளர்கள் மிகப்பெரிய சிரமத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனவே, மாணவர்களுக்கான இந்த இரண்டு கட்டண உயர்வையும் வைத்து கடந்த காலத்தைப்போல உணவு வழங்க முடியாது என்பதைக் கணக்கில்கொண்டு, இந்தக் கல்லூரிகளில், பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிக் கட்டண உதவித் தொகையை உயர்த்தித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விலை உயர்வை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் இதுகுறித்து ஒரு நல்ல முடிவு எடுத்து மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்புச் செய்வார்கள் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறை சார்பாக தேனி, மதுரை, திண்டுக்கல் ஆகிய மூன்று மாவட்டங்களில் பள்ளிகள் தொடங்கப்பட்டு 15 L.K.G., U.K.G., வகுப்புகள் துவங்கி, நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், இதற்கான ஆசிரியர்களோ, ஆயாக்களோ இதுவரை நியமிக்கப்படவில்லை. ஏற்கெனவே 108 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ள சூழ்நிலையில், L.K.G., மற்றும் U.K.G., வகுப்புகளையும் நடத்த வேண்டிய சிரமமான நிலையை மாற்றிட ஆசிரியர் மற்றும் பணியாளர்களை நியமிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். 37 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் . . .

பிற்பகல் 12–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அப்பகுதியில் ஆங்கில வழிக் கல்வியை ஆரம்பிக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் அந்தப் பள்ளிகளை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அங்கு ஏறக்குறைய 300 மாணவ, மாணவிகள் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கின்றார்கள். இப்போது



பள்ளிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆசிரியர்களைப் பணியமர்த்தியிருக்கின்றார்கள். மேலும் தேவைப்படும் ஆசிரியர்களை நியமிப்பதற்கான கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 37 கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகள் கடந்த நான்கு ஆண்டுகளாக ஓராசிரியர் பள்ளிகளாகச் செயல்பட்டு வருகின்றன. இங்கும் புதிய ஆசிரியர்களை நியமித்திட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அரசாணை எண் 264, 1973–ல் போடப்பட்டது. அதனுடைய சிறப்பு விதிகள் தற்கால நடைமுறைகளுக்கு உகந்ததாக இல்லை என்பதனால், அதனை மாற்றியமைத்திட ஆசிரியர்களும், பணியாளர்களும் கோருகிறார்கள். ஏனென்று சொன்னால், பள்ளி சூப்பர்வைசர்களாக லோயர் கிரேடு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இதை மாற்றுவதற்கு அரசே A.E.O.–க்களை அனுப்புவது என்று முடிவு செய்து, G.O. போட்டும், அந்த G.O. இதுவரை அமல்படுத்தப்படவில்லை. எனவே, அதை அமல்படுத்துவதன்மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதோடு அரசாணை எண் 86–ன்படி, துறை மாறுதல்கள் இந்தத் துறையின்கீழ் உள்ள கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு, பணியாளர்களுக்கு இதுவரை அமலாக்கப்படாமல் உள்ளது. இதனால் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் வேலைக்கு சேர்பவர்கள் மீண்டும் தங்களது சொந்த மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலைமை தொடர்கிறது. எனவே, அரசாணை எண் 86 குறித்தும், அரசாணை எண் 264 குறித்தும் அதில் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் களைந்திட ஒரு குழுவை அமைத்து, அதிலுள்ள தவறுகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளி ஆசிரியர்களின் பணி மாறுதல் குறித்து நீதிமன்றத்தின் ஆணையின்படி, இரண்டு ஆசிரியர்களுக்கு மட்டும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணி மாறுதல் பெற்ற ஆசிரியர்களுக்கு ஊதிய நிர்ணயம் செய்வது தொடர்பாக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். பணி மாறுதல் குறித்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், இரண்டு நிமிடங்களிலே உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 14 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. ஏ. லாசர்:** இடையிலே பல்வேறு குறுக்கீடுகள். சச்சார் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் முஸ்லிம் சிறுபான்மையின மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் குடியிருப்பு போன்ற பிரச்சினைகளில் உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக காவல் துறையில் முஸ்லிம் சிறுபான்மையின மக்கள் ஏறத்தாழ ஒரு சதவிகிதத்தினர்தான் இருக்கிறார்கள் என்கிற விவரங்களை அவர்கள் சொல்கிறார்கள். எனவே, 3.5 சதவிகிதம் சிறுபான்மையினரின் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசு பணிகளில் அவர்களுக்கான வேலைவாய்ப்புகளை ஒதுக்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை நல ஆணையத்தின் பரிந்துரையின்படி, தமிழ்நாட்டில் இஸ்லாமிய சமுதாயத்தினர்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. அதனடிப்படையில் அரசு வேலைவாய்ப்புகளில் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர், இதுவரை 15 நிமிடங்கள் ஆகியிருக்கிறது. அதற்கேற்றாற்போல் பேசி, உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** கல்விக் கட்டணம், தொழில், வியாபாரம் இவற்றைத் தொடங்குவதற்கு இஸ்லாமியர்கள் கடன் கேட்டால் வங்கிகள் புறக்கணிக்கின்றன. உதாரணத்திற்கு சென்னை நகரத்தில் இருக்கின்ற வங்கிகள் இஸ்லாமியர்களுக்கு வழங்கியிருக்கக்கூடிய கடன்களைக் கணக்கு எடுத்தாலே எந்த அளவிற்கு கல்விக்காக, தொழிலுக்காகக் கடன் வழங்கியுள்ளார்கள் என்ற விவரம் தெரிய வரும். எனவே, தமிழக அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட்டு அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம்களுக்கோ, கிறித்தவர்களுக்கோ சொந்த பட்டா இடங்களில் மசூதியோ, சர்ச்சோ கட்டுவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்—டாம்கோமூலம் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு சிறு வணிகக் கடன் மற்றும் தனி நபர் கடன், கல்விக் கடன் ஆகிய அனைத்துக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. கல்விக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 2011—2012 ஆம் ஆண்டில் ரூ.13.87 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. 2012—2013 ஆம் ஆண்டில் ரூ.7.39 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டது. அதைபோலவே, அவர்கள் தொழில் செய்வதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு

[திரு. அ. முஹம்மத்ஜான்] [2013 ஏப்ரல் 26

மத்திய அரசிலிருந்தும் நிதி பெற்று, மிக அதிகமான அளவில் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2012–2013 ஆம் நிதியாண்டில், தேசிய சிறுபான்மை வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து 19–2–2013 வரை பெறப்பட்ட 30 கோடி ரூபாயில், 27.86 கோடி ரூபாய் அளவிற்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் 11,483 சிறுபான்மையினர் பயனடைந்துள்ளார்கள். அதன்பிறகு 26–3–2013–ல் 10 கோடி ரூபாய் மற்றும் 28–3–2013–ல் 10 கோடி ரூபாய் என மொத்தம் 20 கோடி ரூபாய் நிதியினைப் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பெற்றுள்ளது.

பிற்பகல் 12–35

மேலும், சிறுபான்மையினர் நலனில் மிகவும் அக்கறை கொண்ட, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், TAMCO நிறுவனத்திற்கு 2012–2013 ஆம் ஆண்டிற்கு தேசிய சிறுபான்மை வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து கடன் பெறுவதற்கு வழங்கப்பட்ட 50 கோடி ரூபாய்க்கான பொறுப்புறுதிதான், (Government Guarantee) வரலாற்றில் இதுவரை வழங்கப்பட்ட அதிகபட்ச அரசுப் பொறுப்புறுதியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 50 கோடி ரூபாய் அளவிற்கு Government Guarantee கொடுத்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது; இந்த அளவிற்கு Government Guarantee அளித்து, TAMCO நிறுவன வரலாற்றில் புதிய சாதனையைப் படைத்து, சிறுபான்மையின மக்களுக்கு உதவி செய்துள்ளார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, என்ன? கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியபடி, மாநில அரசினுடைய துறை அவர்களுக்குக் கடனுதவி செய்கிறது; அதை எங்கள் உறுப்பினர் சொல்லவில்லை. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய அனைத்து வங்கிகளும், இஸ்லாமிய மாணவர்களுக்குக் கடனுதவி வழங்க வேண்டுமென்றால், அவ்வளவு துவேஷம் காட்டுகிறார்கள்;



2013 ஏப்ரல் 26] [செல்வி கே. பாலபாரதி]

மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நாங்கள் திண்டுக்கல்லிலே அதற்கான போராட்டம் எல்லாம் நடத்தினோம். இதுவரைக்கும் ஒரு பைசா கூடக் கொடுக்கவில்லை. ஆகவே, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள நிதி நிறுவனங்கள், வங்கிகள், தமிழகத்தில் இஸ்லாமிய ஏழை மாணவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்குமான கடனுதவியை கட்டாயமாக வழங்குவதை உத்தரவாதப்படுத்துவதற்கு மாநில அரசு தலையீடு செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து நிதி நிறுவனங்களிலும் சிறுபான்மையின மக்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, இதுவரை இல்லாத அளவிற்கு நிதியுதவியினை அளித்து வருகின்றார்கள். மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் உள்ள நிதி நிறுவனங்கள் அப்படிச் செய்கிறது என்றால், அதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்ன? சுருக்கமாகக் கேளுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போன்று, TAMCO நிறுவனம் மிகச் சிறப்பான முறையிலே கடன்களை வழங்குகிறது. ஆனால், கடன் வழங்கக்கூடிய பணியைப் பொறுத்தவரையில், அது TAICO வங்கியின்மூலமாகக் கொடுக்கப்படுகின்றது. TAICO வங்கி பல சிரமங்களைக் கொடுக்கிறது. உதாரணமாக, ஆட்டோ லோன் கொடுப்பதிலே, அந்தச் சங்கங்களுக்கு லோன் கொடுப்பதிலே சற்று தயக்கத்தைக் காட்டுகின்றது என்பது யதார்த்தமான உண்மை. (குறுக்கீடு) ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர், நீங்கள் கேள்வியைச் சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** அதேபோன்று, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய வங்கிகள், குறிப்பாக, மாணவர்களுக்கான scholarship கொடுப்பதிலே, முஸ்லிம் மாணவர்களுக்குக் கொடுப்பதில் பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கின்றன. அவை மாநில அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இல்லை. எனவே, அந்த வங்கிகளுக்கு உரிய அறிவுரைகளை மாநில அரசு வழங்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் TAICO வங்கியைப்பற்றிக் குறிப்பிடுகையில், ஆட்டோக்களுக்கு கடன்கள் வாங்குவதிலே சில சிரமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஒரு கட்டத்திலே ஆட்டோக்களுக்கு அதிகமாக கடன்களைக் கொடுத்தது TAICO வங்கிதான். ஆனால், இப்போது இருக்கிற அந்தத் தடுமாற்றத்திற்குக் காரணம், அங்கே கடனை வாங்கக்கூடியவர்கள் அதனைத் திருப்பிச் செலுத்தக்கூடிய சூழ்நிலையில் இல்லை. ஒரு கட்டத்திலே தனியார் வங்கிகளிடமிருந்து அதற்கு மிக அதிக அளவிலே கடன்கள் கிடைக்காத சூழ்நிலையில், நம்முடைய TAICO வங்கி அதற்கு உதவி செய்தது. ஆனால், இப்போது எங்கு வேண்டுமானாலும் கடனை வாங்கக்கூடிய ஒரு சூழல் இருப்பதனால், அங்கே அதனைத் தர இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். தயவுசெய்து ஒரே நிமிடத்தில் உரையை முடியுங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. எனவே, காலத்தின் அளவை அறிந்து பேசுங்கள்.



**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வில் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு முறையை அமலுக்குக் கொண்டுவர வேண்டும். மத்திய அரசு தகுதித் தேர்வில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் தகுதித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்குத் தனித் தனி மதிப்பெண்களைத் தீர்மானித்துள்ளது. ஆந்திராவில்கூட ஆசிரியர் தகுதித் தேர்வில் அதிகபட்ச இட ஒதுக்கீட்டை வழங்கியுள்ளனர். அங்கு முற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 60 சதவிகிதம் மதிப்பெண்ணும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவிகிதம் மதிப்பெண்ணும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 40 சதவிகிதம் என தகுதி மதிப்பெண்கள் தனித் தனியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் அனைவருக்கும் ஒரே தகுதி மதிப்பெண் 60 சதவிகிதம்தான் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் அரசியல் சாசன உரிமையான இட ஒதுக்கீடு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இதைப்போல் தமிழ்நாட்டிலும் தகுதி மதிப்பெண்ணைத் தீர்மானித்திடக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு, தகுதி அடிப்படையில் கல்வி, வேலைவாய்ப்புக்கான தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களை சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டுப் பட்டியலுக்குள் கொண்டுவந்து நிறுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் இட ஒதுக்கீட்டின் நியாயங்கள் அனைவருக்கும் சமமாகப் போய்ச் சேரும் என்பதையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆசிரியர் தகுதித் தேர்வில் இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். தகுதித் தேர்வு என்பது, மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்கான தகுதியை, ஆசிரியர்களுக்கு நிர்ணயிப்பதற்காக வைக்கப்படுகின்ற ஒரு தேர்வு. ஆனால், அவர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றபோது—தேர்ச்சி பெற்றவர்கள் அத்தனை பேரும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தால், அத்தனை பேருக்கும்

வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை. வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுகிறார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், சுருக்கமாகக் கேளுங்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லாசர் அவர்கள், ஆசிரியர் தகுதித் தேர்விற்கு பிற மாநிலங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தலித்துகள் ஆகியோருக்கு மதிப்பெண்கள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று தமிழகத்திலும் மதிப்பெண்கள் தளர்த்த வேண்டும் என்றுதான் கேட்கிறார். நான் இன்னொன்றைக் கேட்க விழைகின்றேன். அதாவது, அரசு நிர்ணயித்துள்ள தகுதி மதிப்பெண்ணை, ஒரு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பெற்றுவிட்டால், அவர் ஓ.சி. பொதுப் பட்டியல் பிரிவில் கொண்டு போகப்படுவதில்லை. அவரை ஓ.சி. பிரிவில் கொண்டுவந்தால், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு மேலும் சில இடங்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட குறை இந்த ஒதுக்கீட்டில் இருக்கிறது என்கிற ஒரு நிலை இருக்கிறது. அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வங்கிகளிலே, வேறு இடங்களிலே, எல்லா இடங்களிலேயும் பிற்படுத்தப்பட்டோரோ, தலித்தோ மற்றவர்களுக்கு சமமாக மதிப்பெண் பெற்றால், அவர்கள் இந்த ஒதுக்கீட்டிற்கு வெளியே வந்துவிட வேண்டும். அதுபோக, ஒதுக்கீட்டிற்குள் மற்றவர்கள் வர வேண்டும் என்பதுதான் விதி; அதுதான் முறை. ஆனால், அந்த முறை பின்பற்றப்படவில்லை என்கின்ற குறை இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அதுகுறித்து நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலமாக



தேர்வு செய்யப்படுபவர்களுக்கு, இட ஒதுக்கீட்டின் அடிப்படையில், சில மதிப்பெண்கள் வைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இது மற்ற மாநிலங்களிலும் பின்பற்றப்படுகிறது என்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லி வருகிறார்கள். தற்பொழுது இந்த இட ஒதுக்கீடு அடிப்படை என்பது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், வெகு நேரமாகிவிட்டது, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முஸ்லிம்– சிறுபான்மை மக்களுக்கு அடக்கத் தலம் (கபர்ஸ்தான்) ஏற்படுத்தித் தருவதில் இடங்களை ஆர்ஜிதம் செய்வது, இடங்களை வாங்கித் தருவது போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன. குறிப்பாக, மதுரை ஜீவா நகர், ஜெய்ஹிந்த்புரம் பகுதிகளில் வாழும் சுமார் 3,000 முஸ்லிம்களுக்கு அடக்கத் தலம் கேட்டு, மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்தும் இதுவரைக்கும் அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த மக்கள் மத்தியில் இதுகுறித்து . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதை நிர்ணயிக்க வேண்டும். அவர் நடவடிக்கை எடுப்பாரேயானால், இந்தப் பிரச்சினை உடனடியாக முடிந்துவிடப்போகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதில் ஏதாவது பிரச்சினை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், தயவுசெய்து உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** நான் உரையை முடித்துவிடுகிறேன். தமிழக சிறைச்சாலைகளில் இஸ்லாமிய இளைஞர்கள் 7, 8 ஆண்டுகளுக்கு மேலாக விசாரணைக் கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள். சிறையில் இருக்கும் அவர்களை வெளியில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் இருள் சூழ்ந்த வாழ்க்கையில் இருக்கிற அவர்களுடைய நிலைமையினைக் கருத்திற்கொண்டு, தமிழக அரசு பரிசீலித்து, அவர்களுடைய பிரச்சினைகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** பெரியகுளம் தொகுதியில் அதிகமான முஸ்லிம்கள் வாழுகின்ற பெரியகுளம் நகரத்தில் முஸ்லிம் பெண்களுக்கென தனியாக பள்ளி, கல்லூரி மாணவியர் விடுதிகள் ஏற்படுத்தித் தர வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கின்ற விதத்திலே, சிறுபான்மை முஸ்லிம்களிடத்தில் பழி சுமத்துகின்ற விதத்திலே, துப்பாக்கி மற்றும் விஸ்வரூபம் போன்ற படங்களில் வந்த சர்ச்சைக்குரிய காட்சிகளை நீக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, விஸ்வரூபத்திற்கெல்லாம் விஸ்வரூபமாகப் பொங்கியெழுந்து நடவடிக்கை எடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) சிறுபான்மையினர் நலம் காத்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தமிழக முஸ்லிம்கள் சார்பாகவும், மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





தமிழ்நாட்டில் இயங்கிவரும் மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் சார்பாக இணை மானியம் 1:1 என்று இருந்ததை 1:2 என உயர்த்தி ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–45

அதேபோன்று, கடந்த காலங்களிலே ரூபாய் 45 இலட்சமாக இருந்த தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்ட நிருவாக மானியத்தை இந்த அரசுதான் ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தியது. இந்த மானியத்தை ரூபாய் 2 கோடியாக உயர்த்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலேயும் 3 மாதத்திற்கு ஒரு முறை சிறுபான்மையினர் நல ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நடத்தப்பட வேண்டும். அப்படி நடத்தப்படுகின்ற விதத்திலே அந்த மாவட்டத்திலே இருக்கின்ற சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த முத்தவல்லிகள், சிறுபான்மை நிறுவனங்கள் நடத்துகின்ற கல்விப் பொறுப்பாளர்கள், இவர்களெல்லாம் தங்கள் கோரிக்கைகளையும், குறைகளையும் அந்தக் கூட்டத்திலே கூறி, அந்தக் குறைகளைத் தீர்த்துக்கொள்கின்ற வாய்ப்பு ஏற்படும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் சிறுபான்மையினர் நல ஆணையம் அமைக்கப்பட்டு, அது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அங்குள்ள குறைகளை அறிந்து அதைக் களைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டு கூட்டம் நடைபெற்று, வேண்டிய உதவிகளை செய்து வருகின்றன. அதுவும்

இல்லாமல், மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையில் ஓர் அலுவலர் இருக்கின்றார். ஒரு சிறுபான்மையினர் நல துணை இயக்குநர் இருக்கின்றார், எழுத்தர்கள் இருக்கின்றார்கள். அங்கு ஓர் அலுவலகமே செயல்பட்டு வருகின்றது. ஆக, எந்தக் குறை இருந்தாலும், எந்தப் பிரச்சினை இருந்தாலும், அவர்கள்மூலமாக தீர்த்துக் கொள்ளலாம் என்று தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** தமிழ்நாட்டிலே சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இது அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலே மட்டும் வழங்கப்பட்டு வருகின்றது. அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகளின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தகுதிகள் இருந்தும், அவர்களுக்கு கல்வி உதவித் தொகை கிடைப்பதில்லை. விண்ணப்பித்த அனைவருக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விண்ணபித்த அனைத்து சிறுபான்மையின மாணவ, மாணவிகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்புகள் கொடுத்தேன். சிறுபான்மையின மக்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கான கல்வி உதவித் தொகையைப் பொறுத்தவரையில் இணையதளத்தின் மூலமே கேட்புகள் கேட்கப்பட்டு, இணையதளத்தின்மூலமே உடனடியாக உதவித் தொகை வழங்கப்படுகின்றது. ஆகவே, காலதாமதம் இல்லாமலும், எவரும் விடுபடாமலும் இந்த உதவித் தொகை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலமாக வழங்கப்படும் தொழில் கடன், கல்விக் கடன் பெறுவதிலே கடும் நிபந்தனைகள் உள்ளன. கடன் தொகை பெற முடியாமல், ஒதுக்கப்படுகின்ற நிதி முறையாக 100 சதவிகிதம் பயன்படுத்த முடியாமல் திருப்பி செலுத்தப்படுகிறது. குறைந்தபட்சம் கல்விக் கடனுக்காக மட்டுமாவது அந்த நிபந்தனைகளைத் தளர்த்தி—ஏனென்றால், Nationalised Banks–க்குச் சென்றாலும், இஸ்லாமிய மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கடன் கிடைப்பதில்லை—டாம்கோ மூலமாகவாவது கல்விக் கடன் எந்த நிபந்தனைகளும் இல்லாமல் அவர்களுக்குக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். அதில் மத்திய அரசின் நிதியும் இருப்பதால் தமிழக அரசு மத்திய அரசிடம் அனுமதி பெற்றாவது அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 2012–2013 ஆம் ஆண்டில் கல்வி உதவித் தொகை வேண்டி முஸ்லிம் மாணவ, மாணவியரிடமிருந்து 1 இலட்சத்து 96 ஆயிரத்து 314 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அவை அனைத்திற்கும் 40 கோடியே 67 இலட்சம் ரூபாய் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, கல்வி உதவித் தொகை வேண்டி விண்ணப்பித்த அனைத்து முஸ்லிம் மாணவ, மாணவிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. நம்முடைய டாம்கோ மூலமாகவாவது கல்விக் கடன் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 2011–2012 ஆம் ஆண்டில் கல்விக் கடன் திட்டத்தின்கீழ் 27 சிறுபான்மையின மாணவ, மாணவிகள் 13 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் பெற்று பயனடைந்துள்ளார்கள். 2012–2013 ஆம் ஆண்டில் 7 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் கடன் உதவி

வழங்கப்பட்டது. இதில் 14 சிறுபான்மையின மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். ஆக, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள், அவர்களுக்குத் தேவையான உதவிகளையும், கடன் உதவிகளையும் பெற்று வருகிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

பிற்பகல் 12—50

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வருடம் ஹஜ் புனித யாத்திரை செல்ல விண்ணப்பித்துள்ளவர்கள் மொத்தம் 11,000 பேர். மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்து இருப்பதோ வெறும் 3,700 பேருக்குத்தான். நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு மத்திய அரசிடம் கூடுதாக 1,000 பேருக்கு ஒதுக்கீடு பெற்றதைப்போல், இந்த ஆண்டும் மத்திய அரசிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக ஒதுக்கீடு பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2011 ஆம் ஆண்டு தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் மிக வேகமாக நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நினைவுப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தற்போதுள்ள 3.5% இட ஒதுக்கீடு உயர்த்தித் தரப்படும் என்று அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதைப் பரிசீலித்து தமிழகத்தில் கல்வியிலேயும், வேலைவாய்ப்பிலேயும் தற்போது இருக்கின்ற 3.5% இட ஒதுக்கீட்டை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெங்களூருவில் நடைபெற்ற குண்டு வெடிப்பாக இருந்தாலும், வேறு எங்கு குண்டு வெடிப்பு நடைபெற்றாலும் அது





வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற மனித குலத்திற்கு விரோதமான செயல்களைச் செய்யும் உண்மைக் குற்றவாளிகள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். இதுபோன்ற பயங்கரவாத செயல்களைத் தடுக்க இயலாது. கர்நாடக காவல் துறையினர் தமிழகத்திற்கு வந்து இங்குள்ள அப்பாவி முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்துள்ளார்கள். அரசியல் நோக்கத்துடன் காவல் துறை இந்த அநீதியை இழைத்துள்ளது. இதுபோன்று பிற மாநில காவல் துறையினர் எதிர்காலத்தில் தமிழகத்தில் வாழும் சிறுபான்மையின முஸ்லிம்களை தகுந்த ஆதாரம் இல்லாமல் கைது செய்வதைத் தடுக்க வேண்டும் என சிறுபான்மையின மக்கள் நலனில் அக்கறை உள்ள இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாகர்கோவிலில் பாரதிய ஜனதா கட்சி பிரமுகர் எம்.ஆர். காந்தி மீது நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக தமிழக காவல் துறையினர் பல கட்ட விசாரணையை மேற்கொள்ள வேண்டும். காந்திக்கும் அவரது உறவினர்களுக்கும் சொத்துத் தகராறு ஏற்கெனவே இருந்துள்ளது என்ற கோணத்திலும் காவல் துறையினர் விசாரிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 126 ஆகும். ஆனால், தற்போது பணியாளர்களின் எண்ணிக்கை 48 மட்டுமே. எனவே, வக்ஃபு வாரியத்தில் காலியாகவுள்ள காலிப் பணியிடங்களை இந்த நிதியாண்டிலேயே நிரப்பி, வக்ஃபு வாரிய பணிகள் மேலும் சிறப்பாக நடைபெற அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வக்ஃபு வாரியத்தில் மேலும் ஆட்களை நியமிப்பது குறித்து மாண்புமிகு அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அது பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை வந்தவுடன் அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். நீங்கள் தொழுகைக்குச் செல்ல வேண்டும்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 11 ஆம் வகுப்பு முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு, மைய அரசின் 100 விழுக்காடு நிதியுதவியுடன் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. விலைவாசி உயர்ந்துள்ள இக்காலக்கட்டத்தில் சிறுபான்மையின மக்கள் நலனில் அக்கறை உள்ள இந்த அரசு, மத்திய அரசு அளிக்கும் நிதி உதவிக்கு இணையாக மாநில அரசும் நிதி உதவி வழங்கி, சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான உதவித் தொகையை உயர்த்தித் தர வேண்டும்.

இதேபோல், ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர்களுக்கு மைய அரசு, மாநில அரசு நிதி பங்களிப்புடன் 75:25 என்ற விகிதத்தில் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, ஒரு நிமிடத்தில் உங்கள் உரையைக் கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டும்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** இதில் மாநில அரசின் பங்களிப்பை மைய அரசிற்கு இணையாக அதிகரிக்க வேண்டும். மாநில அளவிலே பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் அரசு பொதுத் தேர்வில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் மதிப்பெண் பெறும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு பல்வேறு பரிசுகள் வழங்கப்படுகின்றன. தமிழ் மொழிக்காக பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த கண்ணியமிகு திரு. காயிதே மில்லத் அவர்கள் பெயரில் பரிசுகள் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோல், அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் தனது கிளைகளை சில மாநிலங்களில் அமைத்துள்ளது. அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத்தின் கிளைகள் தமிழ்நாட்டில் அமைவதற்கு வக்ஃபு வாரியம் தேவையான இடத்தை அளிக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, நன்றி சொல்லி உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பாயிண்டை சொல்லி உரையை முடித்துவிடுகிறேன். சமீப காலமாக இறைச்சி வியாபாரிகள், தங்களுடைய பிராணிகளைக் கொண்டு வருகின்றபோது, சமூக ஆர்வலர்கள் என்ற பெயரிலே சில குண்டர்கள் அராஜகத்தில் ஈடுபடுகின்றார்கள். பிராணிகளை அவர்களிடமிருந்து வலுக்கட்டாயமாக பிடிங்கிச் செல்வது மட்டுமல்லாமல், பிடிங்கிச் செல்கின்ற பிராணிகளை பாதியைத்தான் அரசாங்கத்திடம் சேர்க்கின்றார்கள். பாதி எங்கே செல்கின்றது என்பது தெரியவில்லை. இதுபோன்ற அதிகாரத்தை அவர்களுக்கு யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. இதுபோன்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். சென்ற மாதம்கூட வேலூரில் ஒரு நிகழ்ச்சி இப்படித்தான் நடந்தது. உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு சென்றேன். அவ்வாறு கொண்டு சென்ற பிறகு அவை விடுவிக்கப்பட்டுவிட்டன. நாளுக்கு நாள் இதுபோன்ற சமூக விரோதிகளின் அராஜகம் அதிகரித்து வருவதைத் தடுக்க தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களை அடக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிணிகளில் கொடியது பசிப் பிணி. அந்த பசிப் பிணியை மலிவு விலை உணவுகள்மூலமாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தீர்த்துக் கொண்டுள்ளார்கள்.

"பசிப் பிணியைப் போக்கும் மருத்துவர் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"

என்று புறநானூற்றில் பண்ணனின் வீடு நோக்கிச் சென்ற மக்கள் கோருவதுபோன்று மலிவு விலை உணவகங்களை நோக்கிச் செல்லும் மக்கள் பேசுவதைக் கேட்க முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணனின் வீட்டில் பசியாறிய மக்கள் யான் வாழிய நாளினும் பண்ணன் வாழிய என்று வாழ்த்தியதாக குலமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவன் பாடியதாக புறநானூறு சொல்கிறது. அதுபோன்று பசியாறிய எளிய மக்களும் எங்கள் ஆயுள் காலத்தையும் சேர்த்து முதல்வர் அம்மா அவர்கள் வாழ்க என்று வாழ்த்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளிமார்க்கெட்டில் அரிசி விலையைக் குறைப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கையையும், மற்ற மக்கள் நலத் திட்டங்களையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கின்றது.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 50% இட ஒதுக்கீடு என்பதும், அவர்களுடைய கல்விக்கு கற்பிப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் யாவும் ஈடுசெய்வது, மாலை நேர வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உதவித் தொகை, இளங்கலை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இலவசக் கல்வி உதவித் திட்டத்தின்கீழ் சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முழுமையாக வழங்கப்படுவது, தொழில்நுட்பக் கல்வி பயிலும் முதல் பட்டய, பட்டதாரிகளுக்கு கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முழுமையாக வழங்குவது, அதை இணையதளத்தில் வழங்குவது ஆகிய அனைத்தையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக வரவேற்கின்றோம்.

ஐந்தாம் வகுப்பு படிக்கின்ற கிராமப்புற மாணவிகளுக்கு 500 ரூபாயும், ஆறாம் வகுப்பு படிக்கின்ற மாணவிகளுக்கு 1,000 ரூபாயும் ஊக்கத் தொகை வழங்குவது வரவேற்புக்குரியது. இலங்கைத் தமிழர் குழந்தைகளுக்கு தலா 5 இடம் அளிப்பது வரவேற்புக்குரியது. அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு மிதிவண்டி



வழங்குவதுபோன்று, அரசு உதவிபெறும் 11 ஆவது வகுப்பு சுயநிதி மாணவ, மாணவிகளுக்கு மடிக் கணினி வழங்கக் கோருகிறேன். ஏனென்றால், அருகமைப் பள்ளி என்ற நோக்கில் ஏழ்மை நிலையில் இருக்கின்ற BC, MBC, மாணவ, மாணவிகளும் அத்தகைய பள்ளிகளில் அதிகமாகச் சேர்ந்து படிப்பதால் அந்த மாணவ, மாணவிகளுக்கும் சைக்கிள் வழங்குவதைப்போன்றே மடிக் கணினி வழங்கக் கோருகிறேன்.

எங்கள் குடியாத்தம் தொகுதியில் உணவுப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசும் மக்கள், வாத்து மேய்க்கின்ற மக்கள், தொகுதி முழுவதும் ஆங்காங்கே சுமார் 500 அல்லது 600 குடும்பங்களாக வசிக்கின்றனர். இவர்களுடைய பிள்ளைகள் அரிதிலும் அரிதாக கல்வி பயில்கின்றனர். ஆனால், சாதிச் சான்றிதழ் கிடைக்காததால் கல்வி, வேலைவாய்ப்புகளில் புறக்கணிக்கப்படுகின்றனர். இதைக் கணக்கில்கொண்டு அந்தச் சமுதாயத்திற்கு முறையே மலைக் குறவர், குறவர் என அவர்கள் கோருகின்ற சாதிச் சான்று அளிக்கக் கோருகிறேன்.

பிற்பகல் 1–00

அனைத்து உறுப்பினர்களும் கோரியது போன்று நானும் குறிப்பிடுவது 24 மனை தெலுங்குச் செட்டியார் சாதி 4 உட்பிரிவுகளைக் கொண்டது. ஒன்று தெலுங்குச் செட்டி, இரண்டாவது 24 மனை தெலுங்குச் செட்டி, மூன்றாவது சாது செட்டி, நான்காவது தெலுங்குபட்டிச் செட்டி என்று இருப்பவர்கள் 3–7–1985–ல் G.O.Ms.No.1564, பிற்படுத்தப்பட்டோர் என உட்பிரிவுகளாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள். 1989–ல் M.B.C. அரசாணை G.O.Ms.No. 24–ல் அறிவித்தபோது தெலுங்குப்பட்டி செட்டி என்னும் உட்பெயரை மட்டும் அறிவித்துவிட்டு, மற்ற உட்பிரிவுகளை அறிவிக்காமல் விட்டுவிட்டனர். மேலும், அனைத்து மாநிலங்களிலும் 24 மனை தெலுங்குச் செட்டியார் 4 உட்பிரிவுகளும் ஒன்றுதான் என்று ஏற்றுக்கொண்டுள்ளதால், தமிழகத்தில் மேலும் 3 உட்பிரிவுகளையும் M.B.C. பட்டியலில் சேர்க்கக் கோருகிறேன். இது தொடர்பாக 10–6–2009–ல் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்கள் விடுபட்டுப்போன மற்ற மூன்று பிரிவுகளையும் சேர்ப்பது குறித்து அரசிடம் தெரிவித்து தக்க நடவடிக்கை எடுப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. கு. லிங்கமுத்து] [2013 ஏப்ரல் 26

சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அளிப்பது போன்றே கல்விச் சலுகைகள் அளித்திருப்பது வரவேற்கத்தக்கது. உருது மொழியை முதல் அல்லது இரண்டாம் மொழியாக எடுத்து முதல் மூன்று மதிப்பெண்கள் பெறுபவர்களுக்குப் பரிசு வழங்குவதும், அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற சுயநிதிக் கல்லூரிகளில் தொழில் கல்வி, தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்குக் கல்விக் கட்டணம் ரூ.20,000—மும், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகளுக்குப் பராமரிப்புக் கட்டணம் ரூ.10,000—மும், வெளியிலிருந்து படிப்பவர்களுக்கு ரூ.5,000—மும், உண்டு உறைவிடப் பள்ளிகள், மாநிலத்தில் பல விடுதிகள் வசதியுடன் விளையாட்டுப் பொருட்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள் என அரசு அளிப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

ஆதரவற்ற, கணவனால் கைவிடப்பட்ட, வயது முதிர்ந்த இஸ்லாமிய மகளிர்க்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் மகளிர் உதவும் சங்கங்களை அழைத்து, அவர்களுக்கு தையல் வேலை, காலணிகள், கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சி அளிப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. உலமாக்கள் உட்பட்ட இதர பணியாளர்களுக்கும் நல வாரியம் அமைத்துள்ளது, புனித ஹஜ் பயணத்திற்கு சலுகை வழங்குவது, கிறித்தவர்களுக்கு ஜெருசலேம் பயணத்திற்கு நிதி வழங்குவதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது.

தமிழகம் முழுவதும் உள்ள விடுதிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பராமரிப்பிற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும். மாணவர் நலன் கருதி அனைத்து விடுதிக் காப்பாளர்கள், சமையலர்கள், காவலர்கள் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும். விடுதிகளில் உள்ள கழிவறைகள், குளியல் அறைகள் போதுமான அளவு இல்லாததால் அவற்றை கூடுதலாகக் கட்டித் தர வேண்டும். தமிழ்நாடு முழுவதும் உள்ள நரிக்குறவர்கள் நலன் காக்கப்பட . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2013 ஏப்ரல் 26]

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விடுதிகளிலும் தற்போது காப்பாளர்கள், சமையலர்கள் மற்றும் துப்புரவுத் தொழிலாளர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அதுபோல், விடுதிகளில் எத்தனை மாணவ, மாணவிகள் படிக்கிறார்களோ, அதற்கேற்ப கழிவறைகள் கட்டப்பட்டு, முறையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. தமிழ்நாடு முழுவதும் உள்ள நரிக்குறவர்களின் நலன் காக்கப்பட சிறப்புத் திட்டங்களை உருவாக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகம் முழுவதும் நரிக்குறவர்களுக்கு சிறப்புத் திட்டங்களின்கீழ் வீட்டுமனைப் பட்டா மற்றும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் கல்வியில் இன்றளவும் முன்னேற்றம் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களின் கல்வி மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்திட வேண்டும். நரிக்குறவர்களைப் பழங்குடி இனத்தவர்களாக அறிவித்து வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் முதல்வர் மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நரிக்குறவர்கள்மீது மிகுந்த அன்பையும், பற்றையும் வைத்திருந்தார்கள். பல்வேறு சினிமாக்களில் அவர் நரிக்குறவராக வேடமேற்று நடித்திருக்கிறார். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் நரிக்குறவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து பல்வேறு சலுகைகளை வழங்கக் கோருகிறேன். தமிழகம் முழுவதும், இம்மாநிலத்தைப் பூர்வீகமாகக் கொண்ட, மக்கள் தொகையில் மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ள, பல்வேறு சாதிகளை அடையாளப்படுத்துகின்ற அவர்களுக்கு, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் வாய்ப்பளிக்கும் வகையில் அரசு தனித் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

[திரு. கு. லிங்கமுத்து] [2013 ஏப்ரல் 26

பிற்பகல் 1–05

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக வெளி மார்க்கெட் அளவிற்கு நில மதிப்பீடு வழங்கி நிலத்தை கையகப்படுத்த வேண்டும். நிலம் விலை கூடுதலாக இருப்பதால் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதி பல மாவட்டங்களில் செலவிடப்படாமல் உள்ளது. எனவே, நிலம் வாங்க கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குரூப்–1 குடிமைப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு தற்போது பொதுப் பிரிவினருக்கு வயது 30 என்றும், மற்ற பிரிவினருக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர்களுக்கு 35 வயது என்றும் உள்ளது. கேரளா, திரிபுரா, குஜராத் போன்று பல மாநிலங்களில் உள்ளது போன்று, பொதுப் பிரிவினருக்கு வயது 40, மற்ற பிரிவினருக்கு வயது 45 என்று உயர்த்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

முஸ்லிம் பெருமக்களின் அடக்க இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணிகளைச் செய்திட அனுமதிக்க வேண்டும். நீண்ட காலமாக பல வழக்குகளில் உள்ள, விசாரணைக் கைதிகளாக இருக்கின்ற, வழக்குகளே இல்லாமல் விசாரணைக் கைதிகளாக இருக்கின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மசூதிகளில் சுற்றுச் சுவர் அமைப்பதற்கும், அடக்க ஸ்தலத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுவதற்கும் இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனுமதி அளித்துள்ளது என்பதைத் தங்கள்மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.



2013 ஏப்ரல் 26]

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நீண்ட காலமாக பல வழக்குகளில் அவர்கள்மீது எப்.ஐ.ஆர்.கூட இல்லை. முஸ்லிம் இளைஞர்கள் நிறைய பேர் விசாரணைக் கைதிகளாகவே ஜெயிலில் இருக்கிறார்கள். அவர்களுக்காக ஒரு கமிட்டி அமைத்து, விசாரணை செய்து, வழக்கு இல்லாதவர்களை விடுவிக்க வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. லிங்கமுத்து, உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். உலமாக்கள் உட்பட இதர பணியாளர்களுக்கு நல வாரியம் அமைத்துள்ளது, புனித ஹஜ் பயணத்திற்கு நிதி அளிப்பது, புனித ஜெருசலேம் செல்ல நிதி அளிப்பது வரவேற்கத்தக்கது. ஜெருசலேம் போவதற்கு வருடத்திற்கு 500 பேருக்கு அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. அதை வருடத்திற்கு 1,000 பேருக்கு என உயர்த்த வேண்டும்.

இட ஒதுக்கீடு என்பது மத்திய அரசாங்கத்தின் தாராளமய, தனியார்மய கொள்கையால் வெறும் எண்ணிக்கையில்தான் இருக்கிறதே தவிர, அது பயன்படாமல் போகிறது. எனவே, மாநில அரசாங்கம் அதைக் கணக்கில்கொண்டு தனியார் துறையிலும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு விஷயத்தில், இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்குப் போராடி வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கில் இருப்பதால் அதுபற்றி மேலும் விளக்கிப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன், உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) விவாதம் இப்படியே போய்க்கொண்டு இருக்கும். (குறுக்கீடு) என்ன சொல்லுங்கள்?

[2013 ஏப்ரல் 26

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டு வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது. அது கடந்தகால வரலாறு. ஆனால், இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய தாராளமயக் கொள்கையால் வெளிநாட்டு நிறுவனங்கள், ஐ.டி. நிறுவனங்கள் எல்லாம் பெருமளவில் வந்திருக்கின்றன. அவர்கள் இப்போது இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதில்லை. எனவே, M.o.U. போடுகின்ற நேரத்தில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையை நாம் வலியுறுத்துகின்றவிதமாக அதிலே தகுதியுள்ள மாணவர்களைப் பணிக்கு அமர்த்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கினால் தனியார்மயம் வளர்ந்து வரக்கூடிய நேரத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியல் இன மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். எனவே, அந்தக் கொள்கையை M.o.U. போடுகின்ற நேரத்தில் வலியுறுத்த வேண்டுமென்ற கருத்தைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும்போது, ஜெருசலேம் கமிட்டிக்கு ஆயிரம் பேரை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டில் 500 பேருக்கு ஒரு கோடி ரூபாயும், 2012–2013 ஆம் ஆண்டில் 500 பேருக்கு ரூபாய் ஒரு கோடியும், ஆக மொத்தம் இரண்டு கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். அதில் பயணம் செய்ய விரும்புகின்றவர்கள் மிகவும் குறைவாகத்தான் பெயர் கொடுத்திருக்கிறார்கள். பெயர் கொடுத்தவர்களில் கிட்டத்தட்ட 400 பேர் இப்போது சென்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புண்ணியஸ்தலம் செல்வதற்கு பெயர் கொடுக்கின்றபட்சத்தில் கண்டிப்பாக அவர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் ஆயிரம் பேரை அனுப்பவேண்டுமென்று சொன்னார்கள்.



2013 ஏப்ரல் 26] [திரு. சி.த. செல்லப்பாண்டியன்]

500 பேர் அனுப்புவதிலேயே இன்னும் ஆட்கள் அதிகமாகவில்லை என்பதைத் தங்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை வழக்கில் இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் அந்த வழக்குகள் எல்லாம் அநேகமாக முடிவு பெறுகின்ற நிலையில் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த இட ஒதுக்கீட்டை தனியார் கம்பெனிகளுக்கு அமல்படுத்தாத காரணத்தால், இந்த இட ஒதுக்கீட்டின் பலன், சம்பந்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருக்குக் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனவே, நம்முடைய அரசு தனியார் நிறுவனங்களிலேயும் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை அமலாக்குகிறவகையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுகிறபோதே அதை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறுபான்மையின மக்களுக்கு 3½ சதவிகித இட ஒதுக்கீடு என்பது தற்போது அமலில் இருக்கிறது. ஆனால், மக்கள்தொகை கணக்கிலே பார்த்தால் 5 சதவிகிதமாக இருக்கிற காரணத்தால் ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், கேள்வியை மட்டும் கேளுங்கள், விவாதம் வேண்டாம்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** ஒரேயொரு நிமிடம், சிறுபான்மையினர் மக்கள்தொகைக்கேற்ப அதை 5 சதவீதமாக உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நல ஆணையம் என்று ஒன்று இருக்கிறது. அதனுடைய பரிந்துரையின் பேரில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் துறையிலும், பன்னாட்டு கம்பெனிகளிலும் இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதுதான் நாங்கள் கோருகின்ற கோரிக்கையாகும். அதேநேரத்தில், சிறுபான்மையினர் எனும்போது இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 3.5 சதவிகித இட ஒதுக்கீடு என்பது அவர்களுக்கும் பொருந்துமா என்பதைக் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** 80,604 மாணவ, மாணவியர்கள் விடுதிகளில் தங்கிப் படிப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனு செய்கின்ற அத்தனை மாணவ, மாணவியர்களுக்கும் விடுதிகளில் இடம் கொடுத்து, படிப்பதற்கு உதவி அளிக்கவேண்டும். பள்ளி, கல்லூரிகளில் படிக்கின்ற விடுதி மாணவர்களுக்கு முறையே பல்வேறு செலவினங்களுக்காக ரூ.50, ரூ.75 வழங்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை ரூ.75, ரூ.100 என்று உயர்த்தக் கோருகிறேன். வாய்ப்பிற்கு நன்றி கூறி உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வேதாச்சலம் அவர்கள்.



பிற்பகல் 1–15

***திரு. எஸ். வேதாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக, எனக்கு இரண்டாவது முறையாக பேச வாய்ப்பளித்த எங்கள் குடும்பக் குலதெய்வம் அம்மா அவர்களின் பாதங்களில் வணக்கத்தைச் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, புரட்சித் தலைவர் ஆரம்பித்த இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டேன் தாயே. அன்று முதல் இன்று வரை அம்மாவின் உண்மை விசுவாசியாகப் பணியாற்றி வருகிறேன் தாயே. அன்று முதல் இன்று வரை என் அரசியல் வாழ்நாளில் கழகமே கோயில், அம்மாவே தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அம்மாவை வணங்கி, நான் என் கடமையாற்றுவதற்கு அம்மா தந்த அருட்கொடைதான் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் பதவி ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 69 சதவீத இட ஒதுக்கீட்டை செயல்படுத்தி இந்தியாவிலேயே முதல் மாநிலமாக துறை மேம்பாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டினை ஆண்டுதோறும் உயர்த்தி, 2013–2014 ஆம் ஆண்டுக்கு 764.43 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தந்த சமூக நீதிக் காவலர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்தி வணங்குகிறேன், தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் இரண்டு ஆண்டுக்கால நல்லாட்சியில் 28 மாணவர் விடுதிகள் திறக்கப்பட்டன.

அம்மாவின் பொற்கால ஆட்சியில்தான் இந்த ஆண்டில் 64.48 கோடி ரூபாய் செலவில் 84 விடுதிகளுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை இம்மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இது தவிர

மாண்புமிகு அம்மா அவர்கள் 56 விடுதிகளுக்கு நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 50.1 கோடி ரூபாய் செலவில் கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் இம்மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறம் செய விரும்பு' என உரைத்த ஔவை பிராட்டியின் வாக்கிற்கு இணங்க அறத்தைக் காக்கும் காவல் தெய்வமே! நீரின்றி பூக்கள் பூப்பதில்லை, வேரின்றி பயிர்கள் வளர்வதில்லை, தெய்வ சிலையின்றி கோயில்கள் திறப்பதில்லை. இவற்றினை சிறப்பாகச் செய்த தங்கத் தாமரை, கோமேதகப் பெட்டகமே! (மேசையைத் தட்டும் ஒலி) வெண்மை போன்ற நிலவின் குளிர் முகத்தால், திறம்பட்ட உங்கள் மதிநுட்பத்தால் வைரம் பாய்ந்த மனத் திட்பத்தால் வரம் அருளும் வைரமே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' வள்ளலாரைப்போல், விவசாயிகளின் துயரினைக் கண்டபோதெல்லாம் உடனடியாகத் தீர்வு கொடுத்த பூமித் தாயே எங்கள் அம்மாவே! சாதிமத பேதமின்றி அனைவரும் புனிதப் பயணம் மேற்கொள்ள சமத்துவமாக விளங்கிய விடி வெள்ளியே! பள்ளி வரும் மழலைகள் பசித்து சாப்பிட மட்டுமின்றி, ருசித்து சாப்பிட, பதின்மூன்று வகையான உணவளித்த அமுதசுரபியே! (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட மக்களின் தளர்வினைப் போக்கி வாழ்வில் உயர்வினை அடைய உயர் திட்டங்கள் வகுத்த சீர்திருத்தச் செம்மலே! அவர்களுக்கு பசுமை இல்லம் வழங்கிய, இலவச மனைப் பட்டாவும் அளித்த எங்கள் இதய தெய்வமே! சிறுபான்மை மக்களின் துயர் நீக்கி, உயர்பான்மை அடைய வரும் தடையை நீக்கி, வாழ்வில் உயர்வடைய பொருளாதாரத் தடைகளை நீக்கி, வெற்றி மகுடம் சூடச் செய்த பேரரசியே, எங்கள் அம்மா! தமிழறிஞர்களுக்கு விருது பல வழங்கி தமிழகத்தையும் சிறக்கச் செய்து, வீறுநடை போடும் பகைவர்களை விரட்டி, கல்லணை கட்டி, பொன்னேட்டில் பதித்தான் கரிகால சோழன்; புல்லர்களை விரட்டி தண்ணீரின் அளவை ஏற்றி வரலாற்று ஏட்டில் பதியச் செய்த வரலாற்றுப் பெட்டகமே தாங்கள்தான் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் வாட்டத்தைப் போக்க உன்னதமானது இருபது ரூபாய்க்கு 1 கிலோ அரிசி திட்டம் தந்த அன்னபூரணியே! முன்பு காலையிலே கால் வயிற்றுக் கஞ்சியே, வயிற்றை நிரப்பியது. இப்போது வயிராற உண்டு, 'எங்கள் உள்ளத்தை நிரப்பிய அம்மாவிற்கு நன்றி' என்னும் குரல் அம்மா உணவகத்தில் தினம், தினம் ஒலித்துக்கொண்டு இருக்கிறது அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட மக்களின் தாயாகி, உயிராகி, ஊணாகி, அனைத்துத் துறைகளிலும் உயர்வினை அடைய சட்டங்கள்மூலம் அனைத்து நலன்களும் வழங்கிய நவீன அம்பேத்கர் அவர்களே, 'நீவிர் வாழ்க, வாழ்க' என தமிழக மக்கள் வாழ்த்துகிறார்கள் எங்கள் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் தீர்ப்பையடுத்து, 1993 ஆம் ஆண்டு இந்திரா சஹானி–Vs–யூனியன் ஆப் இந்தியா வழக்கின் தீர்ப்பில் 50 சதவீதத்திற்கு மேல் இட ஒதுக்கீடு செல்லக்கூடாது என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது. இதனையடுத்து இந்தியா முழுவதும் இட ஒதுக்கீட்டுக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்கள் சிறுபான்மையின மக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டு போராட்டம், ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. ஆனால், உச்ச நீதிமன்றமே தீர்ப்பை வழங்கிவிட்டதால் ஒன்றும் செய்ய முடியாத நிலை உருவானது. இந்தியா முழுவதும், பல்வேறு மாநிலங்களில் அப்பொழுது தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் முதலமைச்சர்களாக இருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். 69 சதவீத இட ஒதுக்கீட்டைப் பெற்றிட ஒரே வழி அரசியல் சட்டத்தைத் திருத்தினால்தான் முடியும் என்பதை உணர்ந்து தமிழக சட்டமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி இரண்டு நாட்கள் விவாதம் நடத்தி தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இது ஒரு வரலாறு ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் அதை மத்திய அரசுக்கு அனுப்பி 9–வது அட்டவணையில் சேர்த்து சட்டத் திருத்தம் செய்யப்பட்டு 69 சதவீத இட ஒதுக்கீட்டுக்கு சட்டப் பாதுகாப்பு தேடித் தந்தார் சமூக நீதி காத்த எங்களது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

[திரு. எஸ். வேதாச்சலம்] [2013 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையே பொய்த்தாலும், மழையே மறந்தாலும், மக்களின் தாகம் தீர்க்க தாயுள்ளத்தோடு வாரி வழங்கும் பாரி வள்ளல், தரணி போற்றும் தன்னிகரில்லா தங்கத் தலைவி அம்மா, தாங்கள் அம்பத்தூர் ஏரி மற்றும் கொரட்டூர் ஏரி ஆகியவற்றைத் தூர் வாரி மக்களின் தாகம் தீர்க்க நிதி ஒதுக்கி எதிர்காலத்தில் மக்கள் தாகத்தில் ஏங்கிடாவண்ணம் ஏற்றமிகு திட்டம் வகுத்து உத்தரவிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடி முதல் திருநின்றவூர் வரை 5 ஆண்டுகள் சீர்கெட்டுக் கிடந்த சாலைகளில் 5 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பாடி முதல் திருநின்றவூர் வரை 4 வழிச்சாலையாக 168 கோடி ரூபாய் செலவில் சாலை அமைப்பதற்கு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதற்காக எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நலிவடைந்த பால் வளத் துறையின் தொழிலாளர்களின் உணர்வுகளுக்குப் புத்துயிரூட்டியதோடு சென்னை, அம்பத்தூர் பால் வளத் துறை மேம்பாட்டுக்கு 14 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும், பால் வளத் துறை தொழிலாளிகள் சார்பாகவும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் தொகுதியில் தொகுதி மக்களின் நலன் கருதியும், தொழிலாளர்களின் நலன் கருதியும், மின் பற்றாக்குறையைப் போக்கி கொரட்டூர், அம்பத்தூர், திருமங்கலம் தெற்குப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான, மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சீர்கெட்டிருந்த மின்சாரப் பிரச்சினையைப் போக்கிய தர்ம தேவதைக்கு என் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன் தாயே!



2013 ஏப்ரல் 26] [திரு. எஸ். வேதாச்சலம்]

மேலும், எனது தொகுதி கோரிக்கைகள் சிலவற்றை முன்வைக்க விரும்புகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரித்திரம் படைத்து வரும் தாயின் ஆட்சியில் சரித்திரப் புகழ்பெற்ற வீரபாண்டிய கட்டபொம்மன், தீரன் சின்னமலை, டாக்டர் அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்க தேவர் இவர்களுக்கெல்லாம் சிலை வைத்ததுபோல் பாடி சந்திப்பில் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அரசின் சார்பாக வெண்கல சிலை அமைத்துத் தருமாறு மக்கள் சார்பாக தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் தொகுதியில் இருந்து திருவள்ளூர் வரை அரசு மருத்துவமனை ஏதும் இல்லை. அரசு மருத்துவமனை இல்லாத காரணத்தால் உடல் நிலை பாதிக்கப்பட்டாலோ அல்லது விபத்துகள் ஏற்பட்டாலோ அங்குள்ளவர்கள் திருவள்ளூர் அல்லது சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. அவர்களை வண்டியில் கொண்டு செல்லும் போது பாதி வழியில் இறந்துவிடுகிறார்கள். எனவே, சுமார் 50 படுக்கை கொண்ட மருத்துவமனை அம்பத்தூர் அல்லது பாடியில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் முதல் அரக்கோணம் வரை அரசு கல்லூரிகள் இல்லாத நிலையில் மாணவர்கள் வெகுதூரம் கல்லூரிக்குச் சென்று வர வேண்டியிருப்பதால் அம்பத்தூர் அல்லது பாடியில் அரசு கலைக் கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் தாயே.!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை டன்லப் தொழிற்சாலை 10 வருடங்களாக மூடிக்கிடப்பதால் அதில் பணியாற்றிய தொழிலாளர்களின் ஓய்வுக்குப் பின் சட்டப்படி கிடைக்க வேண்டிய P.F., E.P.F., சிறுசேமிப்புத் தொகை வழங்காத நிலையில் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். அம்பத்தூர் உலகப் புகழ்பெற்ற டன்லப் டயர் தொழிற்சாலை கடந்த 10 வருட காலமாக மூடிக்கிடப்பதால்

வேலை பார்த்த தொழிலாளர்கள் அனைவரும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் சென்றுவிட்டார்கள். அந்தத் துயரைத் தாங்க முடியாமல் பலர் இறந்துவிட்டனர். இவர்களின் துயரத்தைத் துடைக்க அம்மாவின் நல்லாட்சியில் 10 வருடங்களாக மூடிக்கிடக்கும் டன்லப் தொழிற்சாலையைத் திறப்பதற்கு ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் தாயே!

அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கொரட்டூர் ஏரி 600 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. ஏரி நீரை குடிநீராகப் பயன்படுத்தும் நிலை இல்லாமல் அம்பத்தூர் தொழிற்பேட்டை இரசாயன கலவைத் தண்ணீர், தொழிற்சாலையில் உள்ள கழிவுகள், பாடி, லூக்காஸ், டி.வி.எஸ். நிறுவனங்களின் கழிவுநீர், இரசாயனக் கலவைத் தண்ணீரில் கலந்து கொரட்டூர், அக்ராஹாரம், டி.வி.எஸ். நகர், பாலாஜி நகர், சுப்புலட்சுமி நகர், அன்னை நகர் மற்றும் 2,000 குடியிருப்புகள் 5 ஆண்டுக்காலமாக பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. இதனால் கிணற்று நீர் மாசுபட்டு செடி, கொடி, மரங்கள், இயற்கை வளங்கள், பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன. மேலும், சுகாதாரப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அதனால் தாங்கள் இப்பகுதியை ஆய்வு செய்து உடன் நடவடிக்கை எடுத்து அப்பகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன் தாயே. பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய காங்கிரஸ் அரசு 16 இலட்சம் கோடி ரூபாய் பட்ஜெட்டில் கிட்டத்தட்ட 8 இலட்சம் கோடி ரூபாய் கல்வி மற்றும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் பெண்கள் மற்றும் சமூக நலத் துறைக்காக ஒதுக்கி, அனைவருக்கும் கல்வி இயக்கத்தை உருவாக்கி இந்தியாவில் ஒருவர்கூட கல்வி இல்லாமல் விடுபடக்கூடாது என்ற உயரிய நோக்கத்தை எய்தி வருகிறது.



மத்திய அரசின் நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர், S.C., S.T., ஒதுக்கீடுகளில் அனைத்து நிறுவனங்களிலும் open competition–ல் தேர்வு செய்யப்பட்டுவிட்டால், அவர்களை மீண்டும் அந்த ஒதுக்கீட்டுக் கொள்கையில் கொண்டு வராமல், அந்த ஒதுக்கீட்டை முழுமையாக அதன்கீழ் மதிப்பெண் பெற்றவர்களுக்கு முழுமையாக பலன் அளிக்கும் விதத்தில் செயல்பட்டு வருகிறது. ஆசிரியர்களைத் தேர்வு செய்யும்பொழுதும் அதே நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–25

அரசு, அரசு உதவிபெறும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இன மாணவ, மாணவிகளுக்கு 1969 முதல் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. தனியார் பள்ளிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு இந்தக் கல்வி உதவித் தொகை கிடைப்பது இல்லை. விரும்பிய பாடப் பிரிவு கிடைக்காததாலும் இடம் கிடைக்காத சூழ்நிலையில் இவர்கள் தனியார் நிறுவனங்களில் சேர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகையால், scholarship என்று வருகின்றபோது தொடர்ந்து இவர்களுக்கும் இந்தப் பலனை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். Self Finance கல்லூரிகளிலும் Professional College–களிலும் பயிலும் கவுன்சிலிங் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்த scholarship கிடைத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால், Arts & Science College–களில் கவுன்சிலிங் இல்லை. எனவே, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நிருவாக ஒதுக்கீட்டில் சேர்க்கப்படும் தகுதியான ஏழை மாணவர்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். 2013–2014 ஆம் நிதியாண்டில், சிறுபான்மையினர் நலத் துறைக்காக ரூ.55.21 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காகப் பாராட்டுகின்றேன். இந்த நிதியாண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 56 புதிய விடுதிகள் ரூ.50.01 கோடி மதிப்பீட்டில் கட்டி ஏழை பி.சி, எம்.பி.சி., மாணவர்கள் தங்கி கல்வி பயில ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதற்காக நான் வரவேற்கின்றேன்.

பாரதப் பிரதமரின் 15 அம்சத் திட்டத்தில், பத்தாவது அம்சமாக விளங்கும் காவல் துறைக்கு ஆள் சேர்க்கும் வாரியத்தில்

சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திரா ஆவாஸ் யோஜனா வீடு ஒதுக்கீடு செய்வதில் பயனாளிகள் தேர்வு செய்யப்படும்போதும் சிறுபான்மையின மக்களுக்கு வீடுகள் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாம்கோ அமைப்பு. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம். இந்த அமைப்பிற்கு மாவட்டங்களில் கிளைகள் இல்லை. சிறுபான்மையினர் பொருளாதாரத்தில் மேம்பாடு அடைய கூட்டுறவு வங்கிகள்மூலம் கடன் விண்ணப்பங்கள் பெற்று பரிசீலனை செய்து கடன் வழங்கப்படுகிறது. கூட்டுறவு வங்கிகள் வழியாக வழங்கப்படும் கடன் தொகைகள் கிடைக்க சிரமம் ஏற்படுகிறது. எனவே, டாம்கோ கிளைகள் மாவட்டம்தோறும் அமைக்கப்பட வேண்டும். டாம்கோ வழங்கும் தனி நபர்க் கடன் தொகை உச்ச வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாம்கோவினுடைய கடன் உதவி ஒவ்வொரு நகரத்திலும் உள்ள கூட்டுறவு வங்கி, வேளாண்மைக் கூட்டுறவு வங்கிமூலம் அளிக்கப்பட்டு வருகின்றது. மாவட்ட தலைநகரங்களில் ஒரே ஒரு வங்கிதான் ஆரம்பிக்க முடியும். அது அனைவருக்கும் உதவிகரமாக இருக்காது. நகரக் கூட்டுறவு வங்கிகளிலும், வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும் மக்கள் எளிதாக அணுகி கடன் உதவி பெறுவதற்கு வாய்ப்பு நன்றாக இருக்கிறது என்பதை தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி. எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முஸ்லிம் மகளிர்கள் சமூகப் பொருளாதார மேம்பாடு அடைய அனைத்து மாவட்டங்களிலும் Muslims Women Aid Society அமைத்து ரூ.10 இலட்சம் வரை ஒரு முஸ்லிம் மகளிர் சங்கத்திற்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயித்து கடன் வழங்க அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.





மத்திய அரசின் சிறுபான்மையினர் நலத் துறைக்கு தனித் துறை உருவாக்கப்பட்டு, தனிச் செயலாளர் அந்தஸ்தில் அதிகாரி உள்ளார். அதேபோன்று ஆந்திரா, கர்நாடகா மாநிலத்திலும் செயலாளர் அந்தஸ்தில் அதிகாரிகள் உள்ளனர். நமக்கு ஆணையாளர் அளவில் அலுவலர்கள் உள்ளனர். எனவே, தனியாக செயலாளர் நியமனம் செய்து சிறுபான்மையினர் நலன் காக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், தமிழகம் எங்கும் உள்ள அனைத்து வெள்ளாளர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சாதனை படைத்திருக்கும் நமது பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில்தான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் என அனைத்து சமுதாய மக்களையும் ஒன்றாக இணைத்து ஒரு துறையை ஆரம்பித்து அதற்காக ஒரு முதன்மைச் செயலாளர், இரண்டு ஆணையர்கள் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு பணிபுரிய அனுமதித்துள்ளார்கள். இந்தத் துறை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் கனிவான கவனத்தினாலும், அவர்களின் கனிவான பார்வையினாலும் மிக முக்கியத்துவம் வாய்ந்த துறையாக இன்று வீர நடைபோட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி. எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் நலத் துறைக்கென்று தனிச் செயலாளர் உருவாக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். குறிப்பாக தமிழகம் எங்கும் உள்ள அனைத்து வெள்ளாளர்கள்

[திருமதி எஸ். விஜயதரணி] [2013 ஏப்ரல் 26

பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள வெள்ளாளர் இனத்தைச் சார்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இதைக் கனிவுடன் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம் எங்கும் வாழும் நாடார் மற்றும் விஸ்வகர்மா சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் தற்போது உள்ளனர். அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நரிக்குறவர் இனத்தைச் சார்ந்த மக்களைப் பழங்குடியினர் இன பட்டியலில் சேர்த்து அவர்களுக்கு அனைத்து சலுகைகளையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–30

டில்லியில் செயல்படும் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திற்குக் கூடுதலான கோரிக்கைகள் அனுப்பி நிதி பெறவேண்டும். அவற்றை தகுதியான பிற்படுத்தப்பட்டோருக்கு கடனாகவும், மானியமாகவும் வழங்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமூகம் மேம்படவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும்**

**தமிழக அரசில் ஏற்படும் பின்னடைவு அரசு காலிப் பணியிடங்களை Backlog பணியிடங்களை நிரப்ப B.C. , M.B.C, S.T. சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் விதத்தில் அந்த இட ஒதுக்கீடுகளைப் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சௌதி அரேபியாவில் வேலை பார்க்கும் தமிழர்கள் தற்போது அதிகமாகத் திரும்ப அனுப்பப்படுகிறார்கள். Emiratisation என்ற அடிப்படையில் இவர்கள் வேலைவாய்ப்பை இழக்க வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு திரும்ப அனுப்பப்படுபவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் விதத்தில் கேரள அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதேபோல தமிழக அரசும் நடவடிக்கைளை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 ஏப்ரல் 26] [திருமதி எஸ். விஜயதரணி]

வேளச்சேரியில் அடக்கஸ்தலம் வேண்டுமென்று அங்கிருக்கக்கூடிய இஸ்லாமியர்கள் நாற்பதாண்டுக் காலமாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். அந்த 40 ஆண்டுக்கால கோரிக்கையை ஏற்று 4–2–1987 அன்று புல எண் 431–ல் 69 சென்ட் நிலம் ஒதுக்கியதாகக் கூறினார்கள். ஆனால், அது கிடைக்கப்பெறவில்லை. அதன் பின்னர் 2001 இல் பேபி நகரில் 7 கிரௌண்டு நிலம், அதாவது இந்துக்களுக்கு, கிறித்தவர்களுக்கு மற்றும் இஸ்லாமியர்களுக்கு 7 கிரௌண்டு நிலம் வீதம் மூன்று 7 கிரௌண்டு நிலங்கள் ஒதுக்கப்பட்டு இந்துக்களுக்கும் கிறித்துவர்களுக்கும் அந்த இடம் கொடுக்கப்பட்டு அது நடைமுறையிலுள்ளது. இஸ்லாமியர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட நிலம் தற்போது காலியாக உள்ளது. அது available ஆகத்தான் இருக்கிறது. அந்த இடத்தையாவது பரிசீலனை செய்து வேளச்சேரி இஸ்லாமிய மக்களுக்கு அடக்கஸ்தலமாக அதைக் கொடுக்குமாறு அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் (District Backward Welfare Officer) பணியிடம் காலியாக உள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை ஆகிய 3 பிரிவுகள் இத்துறையின்கீழ் வருகின்றன. ஆகையால் அந்தப் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது துணையாட்சியர் பணியிடமாக இருப்பதால் அதை விரைவில் நிரப்ப அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவிலிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்தில் சிறுபான்மையினர் நலன்களைக் கவனிக்க வேண்டிய ஒரு கண்காணிப்பாளர், ஒரு உதவியாளர், ஒரு இளநிலை உதவியாளர், ஒரு தட்டச்சர் பணியிடங்கள் காலியாக உள்ளன. அவற்றையும் நிரப்புமாறு கேட்டுக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறுபான்மையினர் சமுதாயமாகிய கிறித்தவர்கள், முஸ்லிம்கள் தங்கள் வழிபாட்டுத் தலங்களை பட்டா நிலங்களில் அமைத்து வழிபடுவதில் பலவிதமான சிக்கல்கள் உள்ளன. 2011 சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது சிறுபான்மையினர் நல மக்கள் தங்கள் வழிபாட்டுத் தலங்களைத் தங்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களில் வைத்து வழிபட அனுமதி வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள்.

[திருமதி எஸ். விஜயதரணி] [2013 ஏப்ரல் 26

அதன் அடிப்படையில் வருவாய்த் துறை, காவல் துறை, உள்ளாட்சித் துறை போன்ற துறைகள் கூட்டாக இணைந்து அனுமதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவிகள் தங்கிப் பயில 19 விடுதிகள் உள்ளன. இவற்றில் இரண்டு விடுதிகள் மட்டும் வாடகைக் கட்டடங்களிலும், மீதமுள்ள 17 விடுதிகள் சொந்தக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தற்போது நிலவும் மின்வெட்டை சமாளிக்கும் வகையில் மின்னாக்கிகளை, அனைத்து விடுதிகளுக்கும் பொருத்தும்படி கேட்டுக்கொள்கிறேன். சோலார் பேனலுடன் இருக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படுமேயானால் அதற்கொரு நிரந்தரத் தீர்வு காண வாய்ப்பிருக்கும் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடத்திவரும் நம்முடைய மாண்புமிகு பொற்கால முதல்வர் அம்மா அவர்கள் புதியதாகக் கட்டப்படும் அனைத்து விடுதிகளுக்கும் சூரிய மின்சக்தியுடன் ஒளி வசதியும், சூரிய ஒளியுடன் சோலார் வாட்டர் ஹீட்டர், சோலார் எனர்ஜியுடைய மின்சக்தி கொடுப்பதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி அனைத்து விடுதிகளுக்கும் அதற்கான நிதி ஒதுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள், உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில், தக்கலை, கோவளம் ஆகிய ஊர்களிலுள்ள விடுதிகளில் தண்ணீர்த் தட்டுப்பாடு உள்ளது. இதனைப் போக்க கூடுதலாக ஆழ்குழாய்க் கிணறுகளை அமைத்து மின் மோட்டார்கள் பொருத்தவேண்டும். விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட குழித்துறையில் கட்டப்பட்டுவரும்



2013 ஏப்ரல் 26] [திருமதி எஸ். விஜயதரணி]

பிற்படுத்தப்பட்டோர் விடுதிப் பணிகளை விரைவுபடுத்தி முடித்துத் தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.** (மணியடிக்கப்பெற்றது)

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** முடித்துவிடுகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** சம்பந்தப்பட்ட திருமதி விஜயதரணி அவர்களின் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அதைப் பேசியிருக்கக்கூடாது. (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி முடியுங்கள். ** சம்பந்தப்பட்ட உங்கள் பேச்சு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திருமதி எஸ். விஜயதரணி:** கடைசி ஒரு லைன்தான் ** சம்பந்தப்பட்டது. அதற்கு முன்னால் உள்ளது இருக்கலாம். (குறுக்கீடு) அந்த ஒரு லைனை எடுத்துவிடுங்கள். அதற்கு முன்னால் உள்ளது இருக்கட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** **அரசு உடனடியாக இதுகுறித்து ஆலோசித்து, தொடர்ந்து இதுபோன்ற செயல்பாடுகள் மீண்டும் எங்கள் மாவட்டத்தில் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்குப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் சொன்னது உட்பட மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட ** சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்ன? சொல்லுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 ஏப்ரல் 26

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் மிக சிறப்பான கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். **வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., போன்ற உயர் படிப்புகளுக்கு இட ஒதுக்கீட்டினை மத்திய அரசு வழங்குவதற்கு அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் துறையில் இட ஒதுக்கீட்டினை அமல்படுத்த மத்திய அரசு முடிவு செய்தால் அனைத்து இந்தியாவிற்கும், அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் உதவ வேண்டும் என்று என்னுடைய ஆசையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் ** வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார். அது பாராட்டத்தக்கது. ஏற்கெனவே, பத்தாண்டுகளாக இரண்டு பாராளுமன்றத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சி, ** இட ஒதுக்கீடு தருவதாக வாக்குறுதி தந்து, பத்தாண்டுக் காலமாக அதைப்பற்றிப் பேசியதே இல்லை. தேர்தலிலே மட்டும் வாக்குறுதி தருவார்கள். Minimum Common Programme– MCP என்று அதற்குப் பெயர் வைத்து, குறைந்தபட்ச செயல் திட்டம் என்றும் சொல்லி, இதுவரையிலே அதுகுறித்து வாய் திறக்கவே இல்லை. டில்லியிலே ஒரு பேச்சு, கொல்கத்தாவிலே ஒரு பேச்சு. (குறுக்கீடு) டில்லி பாராளுமன்றக் கூட்டத்திலே பேசுகின்றபோது, இது பரிசீலனையில் இருக்கிறது. கொல்கத்தாவிலேபோய் தொழிலதிபர்கள் கூட்டத்தில் பேசுகின்றபோது, நிச்சயமாக நாங்கள் உங்களைக் கட்டாயப்படுத்த மாட்டோம் என்று பிரதமர் அவர்கள் மாறி, மாறிப் பேசி வருகிறார்களே, இதுகுறித்தும் அவர் பேசுவாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திருமதி விஜயதரணி, சுருக்கமாக பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2013 ஏப்ரல் 26]

**திருமதி எஸ். விஜயதரணி:** ** மத்திய அரசைக் குறை கூற வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** ** என்றுதானே நாங்கள் கேட்கிறோம். நாங்கள் அதற்கு ஆவன செய்கிறோம் என்றுகூட சொல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் விஜயதரணி அவர்கள் வேறு ஏதோ, பட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால், கொட்டைப்பாக்கு என்ன விலை என்று கதை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் ** குறித்து குறிப்பிட்ட அந்த வார்த்தைகளும், நான் சொன்னது உட்பட அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

பிற்பகல் 1–40

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு மடங்கு மக்கள்தொகை கொண்டவர்களாக இருப்பவர்களான பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சிறுபான்மையினர் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு, கல்வி ரீதியாக வளர்ச்சி அடையவும், பொருளாதார ரீதியாக மேம்படவும், சமூக ரீதியாக உயர்வடையவும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நல்ல சிறப்பான திட்டங்களை அவர்களுடைய வளர்ச்சிக்கு ஏற்படுத்திக் கொடுத்து, அதை வளர்க்கின்ற முயற்சிகளை மேற்கொண்டமைக்கு நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எந்த மாநிலத்திலும் 50 சதவிகிதத்திற்கும் மேல் இட ஒதுக்கீடு இருக்கக்கூடாது என்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இருக்கின்றபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்திலே 1994–லே 69 சதவிகித இட ஒதுக்கீட்டை கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் உருவாக்கிக் கொடுக்கின்ற வகையில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்த (மேசையைத் தட்டும் ஒலி) சமூக நீதி காத்த வீர மங்கை தமிழக முதல்வர் அவர்களுக்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வது எங்களுடைய கடமை.

அதேபோன்று, கல்விச் சலுகை. பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்விச் சலுகை அளிக்கப்படும் வகையில் கற்பிப்புக் கட்டணம் வழங்கப்படுகிறது. அதேபோன்று 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 8 பின்தங்கிய மாவட்டங்களில் சிறப்பு வழிகாட்டுதல் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. அதை அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கும், பட்டயப் படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கும் சிறப்புக் கட்டணம், திரும்பப் பெற இயலாத கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுவதையும் தமிழக அரசே ஏற்று நடத்தி வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதேபோல் தமிழகத்தில் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கு 710 விடுதிகளும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 572 விடுதிகளும், சிறுபான்மையினருக்கு 12 விடுதிகளுமாக மொத்தம் 1,294 விடுதிகள் தழிகத்திலே தமிழக அரசு நிறுவி வந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு உணவுக் கட்டணமாக வழங்கப்பட்டு வந்த ரூ.550/–ஐ ரூ.750/– ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள்.



பள்ளி மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக வழங்கப்பட்டு வந்த ரூ.450/–ஐ ரூ.650/– ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இன்றையதினம் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக அதை தமிழக அரசு மறுபரிசீலனை செய்து மீண்டும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது உசிலம்பட்டி தொகுதியில் பெண்களுக்கு என்று கல்லூரி விடுதி இல்லை. சொல்லப்போனால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி, அருளானந்தர் கல்லூரி என்று இரண்டு கல்லூரிகளிலும் மாணவர்களுக்கு நிகராகப் பெண்கள் படிக்கின்றார்கள். அதன் அடிப்படையில் அவர்களுக்கு உசிலம்பட்டி பகுதியிலே கல்லூரிப் பெண்கள் விடுதி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மதுரை மாநகரில் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு கள்ளர் சீரமைப்புத் துறையின்கீழ் ஒரு கல்லூரி விடுதி கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, திண்டுக்கல் மாவட்டத்தில் விரிவீடு பகுதியில் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும், அதேபோன்று மதுரை மாவட்டத்தில் தாடையம்பட்டி மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கும், இந்த இரண்டு இடங்களிலும் அவர்களுக்கு விடுதிகள் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த நிதியாண்டில் 3 பாலிடெக்னிக் கல்லூரிகளை உசிலம்பட்டி, செக்கானூரணி, ஆண்டிப்பட்டி பகுதிக்குக் கொடுத்து பெருமை சேர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்களை அந்தப் பகுதி மக்களின் சார்பில் மனமாரப் பாராட்டி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஆண்டிப்பட்டியிலே Nursing College–ம் கொடுத்து அந்தக் கல்லூரிகள் அனைத்துமே கள்ளர் சீரமைப்புத் துறையில் இயங்கும் என்று அறிவித்ததற்கு அந்தப் பகுதி மக்கள் உண்மையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கிறார்கள். அந்தப் பாலிடெக்னிக் கல்லூரிகளில் இந்த ஆண்டே மாணவர் சேர்க்கை நடைபெறவிருக்கின்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோன்று அந்த மாணவ, மாணவிகள் சேர்க்கையில், சீர்மரபினர் மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதாவது எங்கள் பகுதியில், மரியாதைக்குரிய தலைவர் மூக்கையாத் தேவர் பிறந்த மண்ணிலே பாப்பாப்பட்டியிலே அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அதேபோன்று, தலைவர் வல்லரசு பிறந்த விக்கிரமங்கலத்திலே மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்த பாப்பாப்பட்டி பள்ளிக்கு அமரர் மூக்கையாத் தேவர் பெயரையும், அதேபோன்று விக்கிரமங்கலத்தில் இருக்கின்ற பள்ளிக்கு அமரர் பி.என். வல்லரசு பெயரையும் வைக்கச் சொல்லி அந்த மக்கள் பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறார்கள். அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கருணையோடு பரிசீலித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

சீர்மரபினர் நல வாரியம் கடந்த ஆட்சியில் அமைக்கப்பட்டது. அதை அமைத்ததற்கு முக்கிய காரணம், அவர்கள் கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியிருக்கிறார்கள் என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதற்கு ஓர் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவுடன், அடுத்த நாள் திராவிட முன்னேற்றக் கழக அரசால் இந்த சீர்மரபினர் நல வாரியம் ஒரு பெயருக்கு வைக்கப்பட்டது. அதனால்தான் நம் ஆட்சி வந்த பிறகு அது கலைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் சீர்மரபினர் நல வாரியம் அமைத்து, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கு நல்ல திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கள்ளர் சீரமைப்புப் பள்ளியிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நிதியாண்டிலே திண்டுக்கல், தேனி, மதுரை ஆகிய 3 மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் எல்.கே.ஜி. போன்ற ஆங்கில வழிக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட 5 பள்ளிகளை ஆரம்பித்தார்கள். உண்மையிலேயே அது அந்தப் பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதை நிறைவேற்றிக் கொடுத்து, அந்தப் பள்ளிகளில் கடந்த ஆண்டே மாணவர்கள் சேர்க்கை நடந்து, இப்பொழுது பள்ளிக்கூடம் நடைபெற்று வருகிறது. ஆனால், அங்கே ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.





கட்டமைப்புகள் இன்னும் கொண்டுவரப்படவில்லை. அதை இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உட்கட்டமைப்பு வசதிகளையும், ஆசிரியர்கள் நியமனத்தையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, அந்தக் கள்ளர் சீரமைப்புப் பள்ளியிலே நிறைய ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே காலி இடங்களை நிரப்புவோம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அங்கே காலியாக உள்ள சமையலர்கள், காவலர்கள் பணியிடங்களை உடனே நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுக் கொண்டே வருகின்றன. எல்லா மாவட்டங்களிலும் நாங்கள் காலிப் பணியிடங்களை நிரப்பிக் கொண்டே வருகின்றோம். அந்தப் பணிகள் விரைவில் முடிந்துவிடும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தனிக் கவனம் செலுத்தி அதை செய்து கொண்டிருக்கின்றார்கள். விரைவில் அந்தப் பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களால் முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அதாவது, திண்டுக்கல், தேனி, மதுரை மாவட்டங்களிலே இந்தக் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இருக்கின்றன. வெளி மாவட்டங்களிலிருந்து வேலைக்கு வந்து 147 பேர் அங்கு வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்குச் செல்ல வேண்டுமென்று அரசிடம் முறையிட்டபோது, அவர்களுக்கு பதிலியாக ஆசிரியர்கள் வந்தவுடன் அவர்களைச் சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பலாம்

என்று அரசு ஓர் அரசாணை வெளியிட்டிருக்கிறது. ஆனால், கடந்த 2 ஆண்டுகளாக ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. எனவே, அவர்களை வெளி மாவட்டத்திற்கு அனுப்ப முடியவில்லை. இது திண்டுக்கல், தேனி, மதுரை ஆகிய 3 மாவட்டத்தினுடைய பிரச்சினை. அதனால் அந்தந்தப் பகுதிகளில் வாழ்கின்ற ஆசிரியர் பெருந்தகைகள் அங்கே வேலை பார்த்தால் மேலும் சிறப்பாக இருக்கும். அவர்களுக்கு இந்த மாறுதல் என்ற பேச்சுக்கு இடமில்லாமல் இருக்கும். அதனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதனைக் கருத்தில்கொண்டு, இதற்கு ஒரு தனிக் குழு அமைத்து ஆவன செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அதேபோன்று, உசிலம்பட்டியிலே இதுவரை பெண்களுக்கு தனி பள்ளியே இல்லை. அதை பல முறை கள்ளர் சீரமைப்புத் துறையிலே அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே அவர்கள் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது, பிரமலைக்கள்ளர் சமுதாயம் தமிழகம் எங்கும் வாழ்கிறார்கள். சிவகங்கை மாவட்டத்தில் வாழ்கின்ற அந்த பிரமலைக்கள்ளர் சமுதாயத்திற்கு 'பிரமலைக்கள்ளர் சமுதாயம்' என்று சாதிச் சான்றிதழ் கொடுக்கப்படவில்லை என்று நிறைய புகார்கள் வந்திருக்கின்றன. மக்கள் சாசனம் பக்கம் 37–லே சொல்லியிருக்கிறார்கள். சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம், மதுரை, தேனி, திண்டுக்கல், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களிலே வாழ்கின்ற பிரமலைக்கள்ளர், சமுதாயத்திற்கு 'பிரமலைக்கள்ளர் சமுதாயம்' என்று சாதிச் சான்றிதழ் கொடுக்கப்பட வேண்டுமென்று அறிவித்தும்கூட கொடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, முந்தைய ஆட்சியில் எங்கு பிரமலைக்கள்ளர் சமுதாயம் வாழ்ந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்தும், இன்னும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–50

அதுமட்டுமல்ல, நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கள்ளர், மறவர், அகமுடையர் இனத்தவர்கள் 'தேவர் இனம்' என்று அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசாணை பிறப்பித்தும் இன்னும் அது



நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

முஸ்லிம் சிறுபான்மையின மக்களுக்கு பிரதமர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின்கீழ் இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம் வருகிறது. அந்தச் சிறுபான்மையின மக்களுக்கு குறிப்பிட்ட சதவிகித அளவில் அதில் ஒதுக்கப்படுகிறது. முறையாக முஸ்லிம் சிறுபான்மையின மக்களுக்கு முறையாக அந்த ஒதுக்கீடுபடி ஒதுக்கப்படுகிறதா என்பதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

24 மனை செட்டியார் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு ஊரில் அவர்கள் எம்.பி.சி., பிரிவில் இருக்கிறார்கள். மற்றொரு ஊரில் எம்.பி.சி., பிரிவில் இல்லை என்ற நிலை இருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த நிதிநிலை அறிக்கைக்குள், அவர்களும் எம்.பி.சி., பிரிவில் சேர்க்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களை மேம்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் நமது திட்டத்திலே விலையில்லா தையல் மிஷின், சலவைப் பெட்டிகளெல்லாம் கொடுக்கிறார்கள். சிறுதொழில் மற்றும் சிறு வியாபாரத்தில் ஈடுபடுகிறவர்களுக்கும் குறைந்த வட்டியிலே கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதைப் பொறுத்தவரை இன்னும் அந்த மக்களுக்கு, விவசாயத்தை அதிகம் நம்பி வாழ்கின்ற சீர்மரபின மக்களுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து அதற்கான தொகையை, நிதியை ஒதுக்கவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை நிறைவு செய்யுங்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** இந்த நிகழ்வில் கள்ளர் சீரமைப்புத் துறை 6–11–1920 அன்று உருவாக்கப்பட்டது. 3–4–1920 அன்று ஆங்கிலேயர்களை எதிர்த்து பெருங்காமநல்லூரிலே ரேகைச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது அதனை எதிர்த்து 16 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அந்தக் கள்ளர்

சீரமைப்புத் துறை உருவாக்கப்பட்டிருக்கிறது. அதனால் ரேகைச் சட்டத்தை எதிர்த்து இறந்த 16 பேர்களுக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் பெருங்காமநல்லூர் பகுதியில் அரசு விழா எடுக்கவேண்டுமென்று அந்த மக்கள் நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறார்கள். அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள், என்ன சொல்லுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** என்கிற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் ** என்ற சட்டம் இருக்கிறதே தவிர, மத்திய அரசுப் பணிகளிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசுதான் குழு அமைத்து இட ஒதுக்கீடு கொண்டுவரமுடியும். அந்த அடிப்படையிலே மண்டல் கமிஷன் அடிப்படையிலே 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. ** வரலாற்று உண்மைகளைத் தவறாக இந்த அவையிலே பதிவு செய்வதற்கு நாம் இடம் அளித்துவிடக்கூடாது. எனவே, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்கள் சொல்லியிருக்கிற அந்தத் தவறைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் இங்கே ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், அவர் கேட்ட கேள்விக்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மட்டும் பதில் சொல்லுங்கள். வேறு பதில் சொல்லக்கூடாது.

**திருமதி எஸ். விஜயதரணி:** அதுதான், அவர் கேட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள், பேச்சை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** ** என்று நான் கூறிக்கொள்ள விழைகிறேன்.

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறை என்பதும், அன்னிய முதலீடு என்பதும், மத்திய அரசால் கொண்டு வரப்படக்கூடிய, மத்திய அரசின் அனுமதியின்கீழ் வந்திருக்கக்கூடிய முதலீடுகள், தொழில் நிறுவனங்கள். அது தமிழ்நாட்டிற்கோ அல்லது வேறு மாநிலங்களுக்கோ வருகிற நேரத்தில், அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் இருக்கின்றனவோ அவற்றை முழுமையாக வழங்கினால்தான், அந்தந்த மாநிலங்களிலே பயன்படுத்துவார்கள். அந்த அடிப்படையில் மத்திய அரசு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கிற நேரத்திலேயே, இங்கே இட ஒதுக்கீடு கொள்கை இருக்கிறது. **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், சுருக்கமாகக் கேளுங்கள்.

***திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் கள்ளர் சமுதாய மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். கடந்த 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பாக, கள்ளர் சமுதாய மக்களுக்கு பிரமலைக்கள்ளர் என்று சாதிச் சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். தற்பொழுது அவர்களுடைய

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

குழந்தைகள் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு கல்லூரி படிப்பிற்கோ அல்லது T.N.P.S.C. அல்லது மத்திய அரசுப் பணிகளுக்கோ செல்லுகின்ற நேரத்தில், அவர்களுக்கு O.B.C. சான்றிதழ் வழங்குவது மிகவும் சிரமமாக இருக்கின்றது. தாலுகா அலுவலர்கள் வழங்க மறுக்கிறார்கள். ஆகவே, பிரமலைக்கள்ளர் சான்றிதழ் வாங்கியிருப்பவர்களுடைய குழந்தைகளுக்கு, பிரமலைக் கள்ளர் சான்றிதழ் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாணபுமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பல்வேறு தவறான கருத்துகளை இங்கே அவையிலே சட்டப்பூர்வமாகக் கூறியிருக்கிறார். தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் கூறிய கருத்துகளின் அடிப்படையில், அந்தத் தவறான கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் கூற்றுப்படி, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் குறிப்பிட்ட இட ஒதுக்கீடு சம்பந்தமான வாதங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அனைத்து கருத்துகளையும் நீக்க வேண்டுமென்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை. காரணம், சட்டப்பூர்வமான கருத்துகளைச் சொல்லுகின்றபோது அது அவைக் குறிப்பில்



ஏறுவது இயற்கை, மரபு. சட்டத்திற்குப் புறம்பான கருத்துகளை, ஒரு கட்சியைக் காப்பாற்றுவதற்காக, சட்டத்தையே மாற்றி இந்த அவையிலே சொல்லுகின்றபோது அதை எப்படி அவைக் குறிப்பிலே ஏற்ற முடியும்? ** அதன் அடிப்படையிலேதான் மாநில அரசும் அந்தச் சட்டங்களை இயற்ற முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கினால்தான், அதை முறைப்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீடு பொறுத்தவரையில் இந்தியாவுக்கே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் வழிகாட்டியாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) 69 சதவீதம் இட ஒதுக்கீட்டை சட்டத்தின் மூலமாக உறுதி செய்து தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதலாவதாக, மாண்புமிகு அம்மா அவர்கள் ஒன்பதாவது அட்டவணையிலே அதைச் சேர்த்தார்கள். இந்தப் பிரச்சினை குறித்து உச்ச நீதிமன்றத்திற்கு பல வழக்குகள் எடுத்துச் செல்லப்பட்டன. உச்ச நீதிமன்றம் ஒரு கமிஷனை நியமனம் செய்யுமாறும், அந்தக் கமிஷன் வளமான பிரிவினரை அதில் சேர்க்கலாமா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரை வழங்கியது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரில், இங்கு நீதியரசர் ஜனார்த்தனன் அவர்கள் தலைமையில் One Man Commission அமைக்கப்பட்டு . . .

பிற்பகல் 2—00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வளமான பிரிவினரை நீக்கம் செய்யும் வினா எழவில்லை என்று தீர்மானிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் 13—7—2011—ல் அதற்கு முழு

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2013 ஏப்ரல் 26

அரசாணையும் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலமாக, தமிழகத்தில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத சமூக நீதி காக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீடு பிரச்சினையில் 69 சதவிகிதத்தினை இன்றைக்கு உறுதி செய்திருக்கின்றார்கள் என்பதனை இந்த மாமன்றத்திற்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பாலகிருஷ்ணன் மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயதரணி அவர்களிடம் கேட்பது மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே உறுதி செய்திருக்கின்ற அந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டை மத்தியில் ஆளும் காங்கிரஸ் அரசு கொண்டுவருவதற்குத் தயாராக இருக்கிறதா என்பதுதான் கேள்வி. அதற்குதான் நீங்கள் முழுமையான பதில் அளிக்க வேண்டுமேயொழிய, அதிலிருந்து விலகி, வேறு திசையில் விவாதத்தைக் கொண்டுசெல்கின்ற வகையில் செல்லக்கூடாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, நீங்கள் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லுகிறீர்களா? அதற்கு மட்டும் பதில் சொல்லவேண்டும்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** இதன்மீது நடவடிக்கை எடுக்க தொடர்ந்து நாங்களும் வலியுறுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம், **

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள் இட ஒதுக்கீடு குறித்து குறிப்பிட்ட வாதங்கள், நான் குறிப்பிட்டவை உட்பட, தமிழக அரசு சம்பந்தப்பட்டவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், என்னவென்று சொல்லுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன..



2013 ஏப்ரல் 26]

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கடிதத்தை மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறார்கள். இந்திய ஆட்சிப் பணிக்கு Promotion அடிப்படையிலே வரக்கூடியவர்களுக்கு, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய சமூக நீதிக்கு மாற்றமாக அதனுடைய விதிமுறைகளையெல்லாம் மத்திய அரசு மாற்றி அமைத்திருக்கின்றது. அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லி, சமூக நீதியை நிலைநாட்டுவதிலே, தமிழக அரசு, ஆளும் அ.தி.மு.க. அரசு நிச்சயமாக முன்னிலையிலே இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இட ஒதுக்கீடுக்காக கோரிக்கை வைப்போம் என்று காங்கிரஸ் உறுப்பினர் சொல்கிறார். நீதிபதி ரங்கநாத் மிஸ்ரா ஆணையம் 15 சதவிகிதம் மதவாத சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு தரவேண்டும். அதில் 10 விழுக்காடு சிறுபான்மை முஸ்லிம்களுக்குத் தரவேண்டும் என்று 2007 ஆம் ஆண்டு, மே மாதம் 21 ஆம் தேதி அறிக்கை கொடுத்தது. அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைப்பதற்கு 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இதுவரை அதைப்பற்றி வாய் பேசாதவர்கள் இட ஒதுக்கீட்டைப்பற்றி இங்கே பேசுவது முறையற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்பின் வடிவாய், (மேசையைத் தட்டும் ஒலி) பாசத்தின் பிறப்பிடமாய், (மேசையைத் தட்டும் ஒலி) கருணைக் கடலாய், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து சமுதாய மக்களுக்கும் வாழ்வளிக்கும் நம்பிக்கை நட்சத்திரமாய், வாழும் வள்ளலாக, அனைத்துலக அரசியல் தலைவர்களுக்கும் நல் ஆசானாய், என்னைப் போன்ற சாதாரண தொண்டனுக்கும் வாழ்வளித்து அன்புத் தாயாய், நல் ஆசானாய் விளங்கும் எங்கள் பொன்மனத் தாய்!

ஏழரைக் கோடி தமிழ் மக்களின் வாழ்வில் ஒளிவீசக்கூடிய ஒளி விளக்காக (மேசையைத் தட்டும் ஒலி) விளங்கும் எங்களின் பாசமிகுந்த தாய்! மனிதநேயமிக்க மாணிக்கத் தலைவி, பொற்கால முதல்வர்! தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர்! மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றி கலந்த வணக்கத்தினை சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. முஹம்மத்ஜான்] [2013 ஏப்ரல் 26

ஆரம்பப் பள்ளி ஆசிரியையின் மகனாக மிகமிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை, சட்டமன்றத்தை வெளியிலிருந்து ஏக்கத்துடனும், பல கனவுகளுடனும் பார்த்துக் கொண்டிருந்த இந்த ஏழையின் கனவினை நனவாக்கும் வகையில், கட்சியில் வட்டச் செயலாளராகவும், நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவுச் செயலாளராகவும் இருந்த என்னை, சட்டமன்ற உறுப்பினராகவும், மாண்புமிகு அம்மா அவர்களின் அமைச்சரவையில் ஓர் அமைச்சராகவும் உயர்த்தியவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஒரு சாதாரண தொண்டனும் சட்டமன்ற உறுப்பினராகலாம்; அமைச்சராகலாம். சாதாரண தொண்டனுடைய கனவும் நனவாகலாம் என்ற மாபெரும் புரட்சி செய்து, உயர்வு கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முகவரி கொடுத்து, என்னை இந்த உலகிற்கு அறிமுகம் செய்து, மூன்றாவது முறையாக இந்த மானியக் கோரிக்கையினைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பினை எனக்கு அளித்திட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் என் மனமார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்பகல் 2–05

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் சமுதாய மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வரப்பிரசாதமாக விளங்குகின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலம்தான், இந்தச் சமுதாய மக்களுக்கு ஒரு பொற்காலமாகத் திகழ்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சமுதாய மக்கள் வாழ்க்கையில் முன்னேறி, தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள நல்ல பல திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் வாரி, வாரி வழங்கியுள்ளார்கள். இந்தச் சமுதாய மக்களின் வளர்ச்சிக்காக திட்டங்கள் வராதா? இந்தச் சமுதாய மக்கள் முன்னேற்றமடைய மாட்டார்களா? அவர்கள் கல்வியில் சிறந்து விளங்க மாட்டார்களா? ஏழ்மையில் வாழுகின்ற இந்தச் சமுதாய மக்களுக்கு ஒரு விடியல் ஏற்படாதா? என்று ஏங்கிய இந்தச் சமுதாயத் தலைவர்கள் பலர் ஏமாற்றத்துடன் இவ்வுலகத்தைவிட்டே நீங்கிச் சென்றுவிட்டார்கள்.



2013 ஏப்ரல் 26] [திரு. அ. முஹம்மத்ஜான்]

ஆனால், இந்தச் சமுதாய மக்களின்மீது பேரன்பு கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தச் சமுதாய மக்களைக் காப்பாற்ற நான் இருக்கின்றேன் என்று இந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து, இச்சமுதாய மக்களின் குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்கி, வாழ்க்கையில் முன்னேறுவதற்கு ஓர் ஒளி விளக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டங்கள் பல தீட்டி அளித்துள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் சமுதாய மக்களின் குடும்பத்தில் பிறந்த ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடக்குமா? அவர்கள் வாழ்வில் தென்றல் வீசுமா என்று ஏங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு இடையில், மாண்புமிகு அம்மா அவர்கள் திருமண உதவித் திட்டம் மற்றும் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களை அளித்து மிகப் பெரிய உதவி செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) இச்சமுதாயத்தைச் சேர்ந்த ஏழைப் பெண்களுக்குத் திருமணம் நடக்கவும், அவர்கள் வாழ்வில் வசந்தம் வீசவும் உதவி செய்து வருகின்றார்கள்.

அனைத்து சமுதாய மக்களின் குழந்தைகளுக்கும் கல்வி கற்க எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று அவர்களுக்கு ஊட்டச்சத்து, சத்துணவு முதற்கொண்டு புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் முதல் அனைத்து உபகரணங்களும் கொடுத்தும், உதவித் தொகை மற்றும் ஊக்கத்தொகை அளித்தும் அவர்கள் கல்விமூலம் வாழ்க்கையில் முன்னேறி தங்கள் சமுதாயத்தையும், இந்த நாட்டையும் வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்வகையில், பல நல்ல திட்டங்களை உண்டாக்கியவர் எங்கள் வெற்றிச் செல்வி, மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 69 விழுக்காடு இட ஒதுக்கீடு வாங்கிக் கொடுத்த சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு அம்மா அவர்கள்.

சுதந்திரம் வாங்கிய நாள் முதல் இன்றுவரை இந்தச் சமுதாய மக்கள் அடையாத பாதுகாப்பு, நிம்மதி, மகிழ்ச்சி, உயர்வு அனைத்தும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் கிடைக்கப் பெற்றார்கள். அவர்களுடைய உரிமைகளும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இதற்கு முன்பு ஆட்சிபுரிந்த தீயசக்தி கருணாநிதி இச்சமுதாய மக்களுக்கு எவ்வித பாதுகாப்பும், நிம்மதியும், மகிழ்ச்சியும், உயர்வும் கொடுக்காமல், அவர்களுக்குப் பொய்யான, போலியான வாக்குறுதிகளைக் கொடுத்து, கொடுத்து அவர்களை ஏமாற்றி வந்ததை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். மேலும், சமீபத்தில் இஸ்லாமியங்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் வந்த துப்பாக்கி, விஸ்வரூபம் ஆகிய இரண்டு திரைப்படங்களில் உள்ள வன்முறைக் காட்சிகளை நீக்கி, இந்தச் சமுதாயத்தின் கண்ணியத்தை காப்பாற்றியும், இஸ்லாமியர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தும் இச்சமுதாய மக்களுக்கு உண்மைக் காவலராக விளங்குபவர் எங்களின் கண்ணியமிக்கத் தலைவி, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழக முதல்வராகப் பொறுபேற்றுக் கொண்ட பின்னர்தான் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டன. ஓய்வு பெற்ற வக்ஃபு வாரிய ஊழியர்களுக்கு மூன்று கோடி ரூபாய் நிதியளித்து அவர்களின் கண்ணீரைத் துடைத்த எங்களின் கருணைத் தாய், மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றிலேயே முதன்முறையாக, ஏன் சுமார் 800 ஆண்டுகள் ஆட்சி புரிந்த மொகலாயர் ஆட்சிக் காலத்தில்கூட இல்லாத அளவிற்கு தமிழகத்தில் உள்ள 38 பள்ளிவாசல்களுக்கு ஒவ்வொரு பள்ளிவாசலுக்கும் ரூ.1 இலட்சம், ரூ.1½ இலட்சம், ரூ.2 இலட்சம், ரூ.2½ இலட்சம், ரூ.3 இலட்சம் என்று ரூ.60 இலட்சம் நிதியுதவி அளித்து, பள்ளிவாசல்களைப் புனரமைத்த புனிதத் தலைவி, மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றபின், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் சீரிய முறையில் செயல்பட நடவடிக்கை எடுத்துள்ளார்கள். தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தின் ஆண்டு வருமானம் மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளது. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2008–2009 இல் ரூ.2,33,72,698/–ம், 2009–2010 இல் ரூ.2,52,14,737/–ம்,



2010–2011 இல் ரூ.2,83,79,999/– மாக இருந்த வக்ஃபு வாரிய ஆண்டு வருமானம், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக தமிழகத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றபின் 2011–2012 இல் ரூ.3,29,27,077/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 2012–2013 இல் ரூ.3,61,19,497/–ஆகவும் உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–10

வக்ஃபு சொத்துக்களில் உள்ள அங்கீகாரமற்ற குடியிருப்புகளை அகற்ற தமிழ்நாடு பொதுச் சொத்துக்கள் (அங்கீகாரமற்ற குடியிருப்பாளரை அகற்றுதல்) சட்டம், 1975–ன்படி, தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, வக்ஃபு சொத்துக்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வக்ஃபு சட்டம் 1995, பிரிவு 54 மற்றும் 55–ன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வக்ஃபு சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்று 300, 400 கோடி ரூபாய்க்கு மேலான சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன.

புனித ஹஜ் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்கு அனைத்து வசதிகளையும் தன் நேரடிக் கவனிப்பில் சிறப்பாகச் செய்து கொடுத்து, ஹஜ் நிருவாக மானியத் தொகையை ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 20 இலட்சமாக உயர்த்தி வழங்கிய அன்புத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். வருடா வருடம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் ஹஜ் பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி, எண்ணிக்கையை உயர்த்திப் பெற்ற எங்களின் உன்னதத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, ஹாஜிகளுக்கு சேவை செய்ய, 300 ஹஜ் பயணிகளுக்கு ஒரு நபர் வீதம் 12 நபர்கள் அரசின் செலவில் அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ளும் 500 கிறித்தவர்களுக்கு ஒரு கோடி ரூபாயை மானியமாக அளித்து, வருடா வருடம் 500 கிறித்தவர்களை ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கு அனுப்பி வைப்பவர்தான் அன்புத் தாய் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் சென்ற மாதம் கர்நாடக மாநிலம் கோலார் தங்கவயல் சென்றபோது, அங்குள்ள மக்கள் அனைவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் வழங்கும் திட்டங்களையெல்லாம் பாராட்டிப் புகழ்ந்து பேசினார்கள். அதிலும் குறிப்பாக, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களுக்கு வழங்கும் விலையில்லா அரிசி, முதியோர் ஓய்வூதியம் பற்றி ஏக்கத்துடன் சொன்னார்கள். அவர்கள் மாநிலத்தில் இதுமாதிரியான எந்தவொரு திட்டத்தையும் அம்மாநில அரசு கொடுக்கவில்லை என்றும், அம்மாநிலத்தில் முதியோர் ஓய்வூதியத் தொகையாக 400 ரூபாய்தான் கொடுக்கப்படுகின்றது என்றும், அதையும் சரியாகக் கொடுப்பதில்லை என்றும் தெரிவித்தார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலுக்குப்பின் பாரதப் பிரதமராக பொறுப்பேற்றால்தான், (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலுள்ள அனைத்துப் பகுதி மக்களுக்கும் இதுபோன்ற திட்டங்கள் கிடைக்கும் என்று தாங்கள் நம்பிக்கையுடன் இருப்பதாக மாண்புமிகு அம்மா அவர்களின் விலையில்லாத் திட்டங்களைப்பற்றி விரிவாக அவர்கள் எடுத்துரைத்தனர். மேலும், இந்தியாவில் உள்ள பிற மாநில முதல்வர்கள் பலர் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பல திட்டங்களை, தங்கள் மாநிலத்தில் ஆர்வம் கொண்டு செயல்படுத்த முயற்சித்து வருகின்றார்கள் என்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களின் சிறப்பு இதிலிருந்தே நமக்குத் தெரியவரும்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் அன்றைக்கு ‘100 இளைஞர்களை என்னிடம் அளித்தால் நான் இந்தியாவைச் சீராக்கிக் காட்டுவேன்’ என்றார். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள், ‘தமிழ்நாட்டிலிருந்து 40 பாராளுமன்ற உறுப்பினர்களை அளித்தாலே, நான் இந்தியாவை வல்லரசாக்கிக் காட்டுவேன்’ என்று சூளுரைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில், தமிழ்நாடு, பாண்டிச்சேரி உட்பட 40 பாராளுமன்ற உறுப்பினர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் கையில் கொடுப்போம் என்று நாம் சபதம் ஏற்போம்.

புதிய வரிகள் போடாமலும், பழைய வரிகளை உயர்த்தாமலும், அனைத்துத் துறைகள்மூலம் மக்களுக்குப் பயன்படும் அனைத்துத் திட்டங்களுக்கும் பல கோடி ரூபாய் நிதியினை உயர்த்திக் கொடுத்து, சிறப்பான நிகரற்ற ஆட்சியை நடத்தி வரும் அம்மா



அவர்களுடைய சீர்மிகு ஆட்சியில்தான், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை எழுச்சி, புத்துயிர் பெற்று மிகவும் சிறப்பாக விளங்க மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறைக்கு உயர்வு கொடுத்துள்ளார்கள்.

ஆக, கேட்பாரற்றுக் கிடந்த துறைக்கு உயர்வு கொடுத்து உதவிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, எல்லாம் வல்ல இறைவன் நோய் நொடியில்லாமல் நல்ல உடல் நலனும், நீண்ட ஆயுளையும் அளித்து, (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பிரச்சினையையும் துணிவாக எதிர்கொள்ளும், துணிவுக்கே துணிவு கொடுக்கும் எங்களின் வீரத் தாய்க்கு, அனைத்து நல்ல நிலையையும் கொடுத்து, ‘இன்ஷா அல்லா’ வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களைப் பாரதப் பிரதமராக ஆக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் வாழும் அனைத்துச் சமுதாய மக்களையும் காப்பாற்றும் வாய்ப்பினை, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இறைவன் அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டமே வியக்கும் வகையில் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோரின் நலனுக்குப் பாதுகாவலராய் விளங்கும் சமூக நீதி காத்திட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தலைமையில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்தவர்கள், கல்வி, சமூக மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு எய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அரும்பாடுபட்டு வருகிறார்கள்.

ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினருக்கான 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கு எப்போதெல்லாம் சட்ட ரீதியாகப் பிரச்சினை வருகின்றதோ, அப்பொழுதெல்லாம் ஆபத்பாந்தவராக இருந்து தமிழகத்தில் இட ஒதுக்கீட்டுக் கொள்கையினைக் காப்பாற்றி, சமூக நீதியை நிலைநிறுத்தி வருபவர் மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே.

[திரு. அ. முஹம்மத்ஜான்] [2013 ஏப்ரல் 26

‘இந்திரா சஹானி எதிர் யூனியன் ஆஃப் இந்தியா’ என்ற வழக்கில் மாண்பமை உச்ச நீதிமன்றம், எந்த மாநிலத்திலும் 50 விழுக்காட்டிற்குமேல் இட ஒதுக்கீடு விஞ்சக்கூடாது எனத் தீர்ப்பளித்தது. இதன்காரணமாக, ஏற்கெனவே தமிழகத்தில் நடைமுறையில் இருந்துவரும் 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையில் செயல்பட்ட தமிழக அரசுதான் 1994 ஆம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டம் (தமிழ்நாடு சட்டம் 45/1995) ஒன்றைக் கொண்டு வந்ததோடு மட்டுமின்றி, அதை அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 31 (B)–ன்கீழ், ஒன்பதாம் அட்டவணையில் இடம் பெறச் செய்து, 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்குச் சட்ட ரீதியாகப் பாதுகாப்பளித்தது. இது தமிழக சமூக நீதி வரலாற்றில் பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய ஒரு சரித்திரச் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–15

தமிழக அரசால் 1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தச் சட்டத்தினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 13–7–2010 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பில், “வளமான பிரிவினரை நீக்கம் செய்வது குறித்தும், இட ஒதுக்கீட்டின் அளவு குறித்தும், பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினைப் பெற்று, ஓராண்டிற்குள் முடிவு செய்து கொள்ளலாம்” என்று உத்தரவிட்டது.

சமூக நீதி காத்த, பாதுகாவலரான மாண்புமிகு அம்மா அவர்கள், மூன்றாம் முறையாக தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பதவியேற்றவுடன், இவ்வரசு இட ஒதுக்கீட்டின் அளவு மற்றும் வளமான பிரிவினர் நீக்கம் ஆகியன குறித்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையை விரைந்து பெற்று, உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதித்து, கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் மாநில அரசு பணி நியமனங்களில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டினை உறுதி செய்து, 11–7–2011 அன்று அரசாணையினை வெளியிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால், தமிழ்நாட்டில் 69% இட ஒதுக்கீடு மாண்புமிகு அம்மா அவர்களால் பாதுகாக்கப்பட்டது.



2013 ஏப்ரல் 26] [திரு. அ. முஹம்மத்ஜான்]

சமூக நீதிக்காகப் போராடியவர்களுக்கு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் முதன்முதலாக 1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து ஆண்டுதோறும் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது.

கல்வியின் துணைகொண்டே, மாணவ, மாணவியர் தத்தம் எதிர்காலத்தை வளமாக்க முடியும். பள்ளியில் கல்வி கற்கும் மாணவ, மாணவியர் தங்கள் படிப்பினை 10 ஆம் வகுப்பு முடித்த பின்னரும், உயர் கல்வியைத் தொடர வேண்டும். மாறாக, அவர்தம் வறுமையின் காரணமாக இடை நிற்றல் என்று சொல்லப்படும் drop out அவர்களின் வாழ்க்கையில் எப்போதும் இருக்கக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு, முதன்முதலாக 2001 ஆம் ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்பில் பயின்ற ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. பின்னர், இத்திட்டம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவியருக்கு மாண்புமிகு அம்மா அவர்களால் 2004–2005 ஆம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது. 2005–2006 ஆம் ஆண்டில், இதர வகுப்பைச் சார்ந்த மாணவியருக்கும் மற்றும் அனைத்து வகுப்புகளைச் சார்ந்த மாணவர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களால் இத்திட்டம் முத்தாய்ப்பாக விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி, அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது, மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் அனைத்து வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கும் விலையில்லா மிதிவண்டிகள் வழங்க ஆணையிடப்பட்டது. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் சுமார் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

ஏழை, எளிய மாணவ, மாணவியரின் நலனுக்காக, இத்துறையின்மூலம் செயல்பட்டு வரும் அனைத்து அரசு விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டும் மாபெரும் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டுள்ளது.

இத்துறையின்மூலம் செயல்படும் மொத்தமுள்ள 1,294 விடுதிகளில் 1,000 விடுதிகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும் 226 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட உத்தரவிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வருகின்றன. இவற்றில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களின் 2001–2002 முதல் 2006 வரையிலான ஆட்சிக் காலத்தில், ரூ.228.43 கோடி செலவில் 730 விடுதிகளும், மீண்டும் மூன்றாவது முறையாக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால அரசு பொறுப்பேற்ற இரண்டாண்டு காலத்திற்குள் ரூ.114.49 கோடி செலவில் 140 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விடுதிகளில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியருக்கு நல்ல தரமான உணவுகளை வழங்குவதற்கு ஏதுவாக, எக்காலக்கட்டத்திலும் இல்லாத வகையில், ஒரே சமயத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மாதாந்திர உணவுக் கட்டணத்தில் ரூ.200/– உயர்த்தி வழங்கி, கல்லூரி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டுவந்த மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.550/–லிருந்து ரூ.750/– ஆகவும், பள்ளி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ.450/–லிருந்து ரூ.650/– ஆகவும், 20–9–2011 முதல் மாண்புமிகு அம்மா அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு சலவை சோப்பு, குளியல் சோப்பு, தேங்காய் எண்ணெய் மற்றும் பற்பசை போன்ற செலவினங்களுக்காகவும் மற்றும் மாணவர்கள் முடி வெட்டும் செலவிற்காகவும், மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த பல்வகைச் செலவினமும் இரு மடங்காக உயர்த்தப்பட்டு, கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.35/–லிருந்து ரூ.75/– ஆகவும், பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.25/–லிருந்து ரூ.50/– ஆகவும், 2012 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு அம்மா அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

இத்துறையின் விடுதிகளில் இடமின்மை காரணமாக, ஏழையெளிய மாணவ, மாணவியர்களின் கல்வி தடைபடுவதை கனிவோடு



பரிசீலித்த மாண்புமிகு அம்மா அவர்கள் இத்துறைமூலம் நடத்தப்படும் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை தேவையின் அடிப்படையில் கூடுதலாக 10% வரை மாணவர்களைத் சேர்த்திட, 2011–2012 ஆம் ஆண்டில் அனுமதி அளித்து உத்தரவிட்டார்கள். இதன்காரணமாக, கூடுதலாக சுமார் 8,000 ஏழை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர் விடுதிகளில் எவ்விதக் கட்டணமுமின்றி தங்கி கல்வி பயில வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் உண்மையான, மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், அவர்களின் குழந்தைகளின் கல்வியும் எவ்விதத் தடையுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக, 2011–2012 ஆம் ஆண்டு முதல் இத்துறையின் விடுதிகள் ஒவ்வொன்றிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்காக தலா 5 இடங்களைக் கூடுதலாக ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள்.

இத்துறை, கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் ஏழை மாணவ, மாணவியர்களின் ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்தி, அவர்களின் தன்னம்பிக்கையை உயர்த்தி, வேலைவாய்ப்பைப் பெருக்கும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்படி, 10,272 கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ.1 கோடியே 83 இலட்சம் செலவில் ஆங்கிலப் பேச்சாற்றல் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–20

மேலும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக ரூபாய் 3 கோடியே 71 இலட்சம் செலவில் 4,254 இரண்டடுக்குக் கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தவிர, இத்துறை அரசு விடுதிகள் அல்லாமல் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.450/– வீதம் வழங்கப்பட்டு வந்த உணவு மானியத் தொகையை ரூ.650/– ஆக 2011–2012 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் பிரமலைக் கள்ளர்களின் நலனுக்கென கள்ளர் சீரமைப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் 289 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிக் கட்டடங்களில் உள்ள பழுதுகளை நீக்கிடவும் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை மிகக் குறைவாக ரூபாய் 4 இலட்சம் மட்டுமே இருப்பதைக் கனிவோடு பரிசீலித்த மாண்புமிகு அம்மா அவர்கள், 2011–2012 ஆம் நிதியாண்டு முதல் இத்தொகையினை ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்கள் பெரும்பான்மையான எண்ணிக்கையில் வசித்து வரும் உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி மற்றும் செக்கானூரணி பகுதிகளில் உயர் கல்வி வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வண்ணம் மாண்புமிகு அம்மா அவர்கள் 3 தொழில்நுட்ப பாலிடெக்னிக் கல்லூரிகளை உயர் கல்வித் துறை மூலமாகவும் தொடங்கிட ஆணையிட்டுள்ளார்கள்.

பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவித் தொகை கட்டண விகிதங்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்த்தப்படாமலேயே இருந்ததைக் கனிவோடு பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இக்குறைகளைத் தீர்க்கும் வண்ணம், ஏழை மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இக்கல்வி உதவித் தொகை கட்டண விகிதங்களை ஆண்டொன்றுக்கு ரூ.16.44 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியரின் கல்வியினை ஊக்கப்படுத்தும் வகையில் +2 தேர்வில் மாநில அளவில் உயர் மதிப்பெண்கள் பெறும் 500 மாணவர்கள் மற்றும் 500 மாணவியருக்கு அவர்கள் பட்டப் படிப்பு முடிக்கும் வரை ஆண்டுதோறும் ரூ.3,000/– பரிசுத் தொகை வழங்கும் புதிய திட்டம் 2012–2013 ஆம் ஆண்டு முதல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டு வருகிறது.





மேலும், 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் உயர் மதிப்பெண்கள் பெற்று தொழில்நுட்ப மற்றும் தொழில் படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் தந்தை பெரியார் மற்றும் பேரறிஞர் அண்ணா விருதுத் தொகைகளையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.5,000/–லிருந்து ரூ.10,000/– ஆக 2012–2013 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த இளைஞர்களுக்கு பல்வேறு திறன் வளர்ப்புப் பயிற்சித் திட்டங்களின்கீழ் பயிற்சிக் கட்டணம் முழுவதையும் அரசே செலுத்தி பயிற்சி அளித்து வருகிறது. இத்திட்டத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களின் போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் மாதந்தோறும் பயிற்சி கால உதவித் தொகையாக ரூ.400/– வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிறப்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையான வகுப்பினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் வகையில் சுய தொழில்மூலம் வருமானம் ஈட்டுவதற்கு வகை செய்யும் பொருட்டு, விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டமும் மாண்புமிகு அம்மா அவர்களால் 2001–2002 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2012–2013 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த ஏழை பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பயனாளிகளுக்கு 1,923 தையல் இயந்திரங்கள் ரூ.66.63 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன. மேலும், மனித வள மேம்பாட்டுக் குறியீட்டின்படி கண்டறியப்பட்டுள்ள சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, பெரம்பலூர், கடலூர் ஆகிய 8 பின்தங்கிய மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மக்கள் பயன்பெறும் வகையில் கூடுதலாக 1,661 தையல் இயந்திரங்கள் மற்றும் 590 எம்பராய்டரி தையல் இயந்திரங்கள் ரூ.97.91 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம், இத்திட்டத்தின்கீழ் 2012–2013 ஆம் ஆண்டில் 4,174 பயனாளிகளுக்கு ரூ.164.54 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. அ. முஹம்மத்ஜான்] [2013 ஏப்ரல் 26

மனித வள மேம்பாட்டுக் குறியீட்டின்படி மிகப் பின்தங்கிய மாவட்டங்கள் என கண்டறியப்பட்ட 8 மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பைச் சார்ந்த 1,600 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கல்லூரி விடுதியும், ஒரு பாலிடெக்னிக் விடுதியும், ஆக மொத்தம் 16 விடுதிகள் துவங்கப்பட்டுள்ளன. மேலும், இம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயின்ற 2,41,129 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு ரூ.2 கோடியே 47 இலட்சம் செலவில் சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள், குழுக்கள் மற்றும் சங்கங்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக்கூறுள்ள சிறு தொழில்கள், வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில், அதாவது, சிறு கடன் திட்டத்தின்கீழ் மகளிருக்கு 4 விழுக்காடு, ஆண்களுக்கு 5 விழுக்காடு, காலக் கடன் திட்டத்தின்கீழ் மகளிருக்கு 5 விழுக்காடு மற்றும் ஆண்களுக்கு 6 விழுக்காடு ஆண்டு வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் கடன் உதவி வழங்கி வருகிறது.

பிற்பகல் 2–25

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 2012–2013 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்புகளைச் சேர்ந்த 19,159 பயனாளிகளுக்கு மிக அதிகபட்சமாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில்தான் வரலாற்றுச் சாதனையாக ரூ.46.07 கோடி கடன் உதவி முதன்முறையாக வழங்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சிறுபான்மையினர் நலம். தமிழகத்தில் உள்ள சிறுபான்மையின மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களை தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும், அதிக கவனம் செலுத்தும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், இச்சமூக மக்களின்



2013 ஏப்ரல் 26] [திரு. அ. முஹம்மத்ஜான்]

கல்வி மேம்பாட்டிற்காக அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில், ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற் கல்வி, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கென பள்ளிப் படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை எனும் மூன்று வகையான மைய அரசின் கல்வி உதவித் தொகை திட்டங்களை இம்மாநிலத்தில் செவ்வனே செயல்படுத்தி வருகிறார்கள்.

சிறுபான்மையின மாணவ, மாணவியரிடையே கல்வி கற்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் 2012–2013 ஆம் ஆண்டு முதல் மாவட்ட அளவில் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் சிறுபான்மையின மாணவ மாணவியருக்கு ஏற்கெனவே முதல், இரண்டாவது மற்றும் மூன்றாம் பரிசுகளாக வழங்கப்பட்டு வந்த ரூ.1,500/–, ரூ.1,000/– மற்றும் ரூ.500/– என்பதை முறையே ரூ.3,000/–, ரூ.2,000/– மற்றும் ரூ.1,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று 12 ஆம் வகுப்பிற்கு வழங்கப்பட்டு வந்த பரிசுத் தொகைகளை ரூ.3,000/– என்பதை ரூ.6,000/– ஆகவும், ரூ.2,000/– என்பதை ரூ.4,000/– ஆகவும், ரூ.1,000/– என்பதை ரூ.2,000/– ஆகவும் இருமடங்காக உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆதரவற்ற, வயதான, விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்ட இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லிம் பெண்களுக்கு உதவிடும் வகையில் முஸ்லிம் மகளிர் உதவி சங்கங்கள்மூலம் திரட்டப்படும் நன்கொடை நிதி ஆதாரத்திற்கு இணையாக ஏற்கெனவே 1:1 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை வழங்கப்பட்டு வந்த அரசின் இணை மானியத் தொகையினை 2012–2013 ஆம் ஆண்டு முதல் இரு மடங்காக உயர்த்தி 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இஸ்லாமிய மக்களின் ஹஜ் புனித யாத்திரைக்கு அரசு உதவி செய்வதைப் போன்று கிறித்தவ மக்கள் மேற்கொள்ளும் ஜெருசலேம் புனித யாத்திரைக்கும் அரசு உதவி செய்ய வேண்டும் என்று கிறித்தவ சமுதாயத்தினர் அரசிடம் வைத்த

கோரிக்கையினை ஏற்று, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்தவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள புனித ஸ்தலமான ஜெருசலேம் சென்றுவர, நபர் ஒருவருக்கு ரூ.20,000/– வீதம் ஆண்டொன்றிற்கு 500 கிறித்தவர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் ஆண்டுகளுக்கு தலா ஒரு கோடி வீதம் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இத்திட்டத்தின்கீழ் இதுவரை பல கிறித்தவர்கள் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள் மற்றும் பார்சீயர்கள் ஆகிய சிறுபான்மையின மக்கள் மேம்பாடு அடைவதற்காக தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் முனைப்புடன் செயலாற்றி சுயதொழில் புரியவும் மற்றும் தொழிலை அபிவிருத்தி செய்யவும் தனிநபர் கடன், சுய உதவிக் குழுக்களுக்கு சிறுவணிகக் கடன், கறவை மாடுகள், ஆட்டோக்கள் வாங்குவதற்கு கடன் மற்றும் கல்விக் கடன் போன்றவைகளுக்கு மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினப் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்மூலம் கறவை மாடுகள், ஆட்டோக்கள் வாங்குதல் போன்ற தனி நபர் கடன்கள் ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்திலும், சுய உதவிக் குழுக்களுக்கு சிறுவணிகக் கடன் 4 விழுக்காடு வட்டி விகிதத்திலும் மற்றும் கல்விக் கடன் 3 விழுக்காடு வட்டி விகிதத்திலும் வழங்கப்படுகின்றன.

சிறுபான்மையின மக்களின் நலனில் தொடர்ந்து அக்கறை கொண்டு அதிக எண்ணிக்கையில் கடனுதவிகள் வழங்கும் நோக்கில் ரூ.50 கோடிக்கான அரசு பொறுப்புறுதியை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கியதைத் தொடர்ந்து 2012–2013 ஆம் ஆண்டில் ரூ.50 கோடி நிதியை தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்திடமிருந்து பெற்று இதுவரை 11,483 பயனாளிகளுக்கு ரூ.27.86 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு வக்ஃபு வாரியத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஆண்டு நிருவாக மானியத்தினை 45 இலட்சம் ரூபாயிலிருந்து ஒரு கோடி





ரூபாயாக 2011–2012 ஆம் ஆண்டு முதல் உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

உலமாக்கள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையினை 2,400/– லிருந்து 2,600/– ஆகவும், வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையினை ரூ.750/– லிருந்து ரூ.1,000/– ஆகவும் 2011–2012 ஆம் ஆண்டில் உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டு சிறுபான்மையின நல மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றார்கள்.

வக்ஃபு வாரிய ஓய்வூதியதாரர்களுக்கு நிலுவையிலுள்ள ஓய்வூதியம் உள்ளிட்ட பணிக் கொடைகளை வழங்க ஒருமுறை மானியமாக 3 கோடி ரூபாய் வழங்கி 2011–2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளி வாசல்கள், தர்காக்கள் போன்ற வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்வதற்கு மாநில அளவில் புதிதாக "வக்ஃபு நிறுவன மேம்பாட்டு நிதி" ஒன்று உருவாக்கியும், இவ்வக்ஃபு நிறுவன மேம்பாட்டு நிதிக்கு ரூ.3 கோடி வழங்கியும் மாண்புமிகு அம்மா அவர்கள் சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையுடன், அவருடைய ஒப்புதலுடன் அறிவிப்புகளை இங்கு நான் வாசிக்கிறேன்.

பிற்பகல் 2–30

## அறிவிப்புகள்

### 1. அனைத்து மாணவியர் விடுதிகள் மற்றும் பள்ளிகளுக்கு சுகாதார குட்டை தகளி (Napkin Incinerator) வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலனுக்காக செயல்படும் 1,294 விடுதிகளில் மாணவியரின் நலனுக்காக 476 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும் பிரமலைக் கள்ளர் நலனுக்காக மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் செயல்படும் 289

கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுள் 77 பள்ளிகள் நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாகும். இந்த 476 விடுதிகள் மற்றும் 77 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவியரின் நலனைப் பேணிக் காக்கவும், அவர்களின் சுகாதார நலனைப் பாதுகாக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் தலா ஒரு சுகாதாரக் குட்டை தகளி (Napkin Incinerator) வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**2. விடுதி மாணவ, மாணவியருக்கு போர்வைகள் வழங்குதல்**

தமிழ்நாட்டில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி 2013–2014 ஆம் ஆண்டில் 1,294 விடுதிகளில் தங்கிப் பயிலும் 80,064 மாணவ, மாணவியரின் பயன்பாட்டிற்காக போர்வைகள் வழங்க நடப்பாண்டிற்கு 1 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**3. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள் வழங்குதல்**

தமிழ்நாட்டில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பயன்பாட்டிற்காக ஆண்டிற்கு ஒரு முறை, ஒவ்வொரு ஆண்டும், தொடர்ந்து பாய்கள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி நடப்பாண்டில் 1,294 விடுதிகளில் தங்கிப் பயிலும் 80,064 மாணவ, மாணவியரின் பயன்பாட்டிற்காக 46 இலட்சம் ரூபாய் செலவில் பாய்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**4. விடுதி மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும் சிறப்பு உணவுக்கான கட்டணத்தை உயர்த்தி வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு பண்டிகை நாட்களில் வழங்கப்படும்



சிறப்பு உணவுகளுக்கான கட்டணத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.2/–லிருந்து ரூ.20/– ஆகவும் மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.3/–லிருந்து ரூ.40/– ஆகவும் உயர்த்தி வழங்கிட 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**5. கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் உண்டி, உறையுள் கட்டணத்தை உயர்த்துதல்**

கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு, கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் தற்போது மாதந்தோறும் வழங்கப்படும் உண்டி, உறையுள் கட்டணத்தை தொழிற் கல்விப் படிப்புகளுக்கு ரூ.75/– முதல் ரூ.140/– என்பதை ரூ.350/– ஆகவும், ஐடிஐ/பட்டப் படிப்பு மற்றும் முதுகலைப் படிப்புகளுக்கு ரூ.75/– முதல் ரூ.90/– என்பதை ரூ.225/– ஆகவும், 11, 12 ஆம் வகுப்பு மற்றும் இளங்கலை படிப்புகளுக்கு ரூ.75 முதல் ரூ.80 என்பதை ரூ.175/– ஆகவும் உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்படி 44,961 மாணவ, மாணவியருக்கு உயர்த்தப்பட்ட விகிதத்தில் உண்டி, உறையுள் கட்டணங்களை வழங்குவதற்கு இந்நிதியாண்டில் 9 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**6. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு நூலகப் புத்தகங்கள் வழங்குதல்**

பிரமலைக் கள்ளர்களின் நலனுக்காக மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கி வரும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் கற்றல் மற்றும் தனித்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பள்ளி ஒன்றுக்கு ரூ.20,000 வீதம் 52 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு

10 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. விடுதிகளில் செயல்படும் நூலகங்களை வலுப்படுத்துதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்காகச் செயல்பட்டு வரும் 1,294 விடுதிகளில் தங்கிப் பயிலும் 80,064 மாணவ, மாணவியரின் பொது அறிவுத் திறனை மேம்படுத்தவும் மற்றும் நடப்பு நிகழ்வுகளை அறிந்துகொள்ள ஏதுவாகவும் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி கல்லூரி விடுதி ஒன்றுக்கு ரூ.25,000 வீதமும், பள்ளி விடுதி ஒன்றுக்கு ரூ.5,000 வீதமும் அனைத்து விடுதிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் வழங்க 1 கோடியே 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**8. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடம் கட்டுதல்**

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் இயங்கிவரும் 27 கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில், ஆய்வுக்கூட வசதிகள் இல்லாத 3 மேல்நிலைப் பள்ளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 90 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வுக்கூட வசதிகள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**9. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துதல்**

பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சேர்ந்த மக்களின் நலனுக்காக மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள், அவர்கள் பயிலும் பள்ளிகளிலேயே தங்களின் உயர் வகுப்புகளைத் தொடரும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 5 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், ஆக மொத்தம் 7 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை நிலை உயர்த்துவதற்காக 1 கோடியே 69 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2–35

**10. கள்ளர் சீரமைப்பு கல்வி அலுவலருக்கு வாகனம் வழங்குதல்**

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள பிரமலைக் கள்ளர் வகுப்பைச் சார்ந்தவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகச் செயல்பட்டு வரும் 289 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளை ஆய்வு செய்யும்பொருட்டு, கள்ளர் சீரமைப்பு கல்வி அலுவலருக்கு ஓட்டுநர் பணியிடத்துடன் கூடிய வாகனம் ஒன்றினை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

**11. விடுதிகளுக்கு பல்நோக்கு தீ அணைப்பான் கருவிகள் வழங்குதல்**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் பாதுகாப்பு நலனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 300 விடுதிகளுக்கு 18 இலட்சம் ரூபாய் செலவில் பல்நோக்கு தீ அணைப்பான் கருவிகள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**12. உருது மொழி பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்**

உருது மொழி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் உருது மொழியை முதல் அல்லது இரண்டாவது மொழியாகக் கொண்டு பயின்று மாநில அளவில் முதல், இரண்டு மற்றும் மூன்றாம் நிலைகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 10 ஆம் வகுப்பிற்கு தற்போது வழங்கப்படும் பரிசுத் தொகையான ரூ.2,000/–, ரூ.1,500/– மற்றும் ரூ.1,000/– என்பதை முறையே ரூ.10,000/–, ரூ.5,000/– மற்றும் ரூ.3,000/– ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) இதேபோன்று 12 ஆம் வகுப்பிற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.3,000/–, ரூ.2,000/– மற்றும் ரூ.1,000/– என்பதை முறையே

5 மடங்காக உயர்த்தி முறையே ரூ.15,000/–, ரூ.10,000/– மற்றும் ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கென நடப்பாண்டிற்கு 75 ஆயிரம் ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்து மொத்தம் 96 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**13. மாநில ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியம் உயர்த்துதல்**

மாநில ஹஜ் குழுவிற்கான நிருவாக மானியம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி 2013–2014 ஆம் ஆண்டு முதல் 20 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.707,78,11,000/–, மூலதனக் கணக்கில் ரூ.56,64,75,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் (29–4–2013) திங்கட்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

ஏதுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. மானியக் கோரிக்கை எண் 9–பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

166. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

*[2013 ஏப்ரல் 26*

*167. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)*

*168. சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) மானியக் கோரிக்கையின்மீதான பதிலுரையின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் ஆகியோர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2013–2014. (தமிழ்)*

* * * *